Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A. SILVERSMITH STREET, COLOMBO—12.


## ‘சின்வா’




பாதரகைஷகளில் பிரபல்யமிகுந்த பெயர்

இலங்கை பூராவிலும் கிடைக்கும்
இதையே வற்புறுத்தி பாவியுங்கள்.

சின்வா பாதரகைஷகளில் சிறந்தது

சின்வா, 72, 1-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.


புத்தகம் 13 திருவள்ளுவர் ஆண்டு 1990 சித்திரைத் திங்கள் 20-ம் நாள் 3—5—1959 ஞாயிற்றுக்கிழமை ஷவ்வால் பிறை 24 இதழ் 49

# அடுத்த தொழில் கமிஷனர் யார்? தமிழரா?

## பௌத்த மதம், சிங்கள இனம் மந்திரிகள் உறவு இருப்பின் பதவி உயர்வு

## இன்றேல் தகுதியும் திறமையும் பெற்றும் பயனில்லை-‘புறமோஷன்’ கிடையாது

(சுதந்திரன் அந்தரங்க நிருபர்)

தொழில் கமிஷனராகவிருந்த திரு வி. பி. குமாரசிங்கி தொழில் அமைச்சர் திரு டி. பி. இலங்கரத்னவின் நிரந்தரக் காரியதரிசியாகத் தற்காலிக நியமனம் பெற்றுள்ளதையடுத்து, அடுத்த தொழில் கமிஷனராக யார் வருவார் என்ற ஹேஸ்யங்கள் தொழில் காரியாலய வட்டாரங்களில் பலமாக அடிபடுகின்றன.

சிரேஷ்ட உதவிக் கமிஷனராகவும், தகுதியும் திறமையும்வாய்ந்தவராகவும் விளங்குபவர் திரு வி. கார்த்திகேசன் என்ற ஒரு தமிழராவார். ஆனால் அவருக்குப் பதவி உயர்வும் தொழில் கமிஷனர் நியமனமும் கிடைக்குமாவென்பதுபற்றிச் சந்தேகாஸ்பதமான அபிப்பிராயங்கள் வெளியிடப்படுகின்றன.

தொழில் கமிஷனராகவிருந்த திரு வி. பி. குமாரசிங்கி தொழில் அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்னவின் நிரந்தரக் காரியதரிசியாக நியமனம் பெற்றுள்ளார். நியமனம் தற்போது தற்காலிகமானதாகவிருந்தபோதிலும் விரைவில் ஊர்ஜிதமாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே அடுத்த தொழில் கமிஷனர் யார் என்ற பிரச்னை இப்போதே அடிபட ஆரம்பித்து விட்டது. தொழில் கமிஷனருக்கு துணையாக நான்கு உதவிக் கமிஷனர்கள் உள்ளார்கள். இந்த நான்குபேர்களிலும் சேவைக் கால யோக்கியதாம்சத்தால் மேம்பட்டு சிரேஷ்ட உதவிக் கமிஷனராக விளங்குபர் திரு வி கார்த்திகேசன் என்ற ஒரு தமிழராவார்.

கமிஷனராக உயர்த்தப் படுவதற்கு சகல வழிகளிலும் தகுதி வாய்ந்தவரான திரு. கார்த்திகேசன் நிர்வாகத்திறமையிலும் உத்தியோக சாமர்த்தியத்திலும்தொழில் நுட்ப சட்ட திட்ட நடவடிக்கைகளிலும்மிகவும் நிபுணத்துவம் வாய்ந்தவர் என்று சொல்லப் படுகிறது. அத்தோடு மேலிடங்களைத் திருப்தி படுத்துவதிலும் இவர் குறைந்தவர் அல்லராம்!

அடுத்த தொழில் கமிஷனராகத் திரு. கார்த்திகேசனையே நியமிக்க வேண்டும் என்று தற்போதைய தொழில் கமிஷனர் திரு வி. பி. குமாரசிங்கி சிபார்சு செய்திருப்பதாகவும் நம்பப் படுகிறது.

ஆனால், அதற்கிடையில், திரு. கார்த்திகேசனைப் புறக்கணித்துவிட்டு நான்கு உதவிக் கமிஷனர்களில், குறைந்த சேவையும் குறைந்த அனுபவமுமுள்ள ஒரு சிங்களவரைத் தொழில் கமிஷனராக நியமித்துவிட தொழில் அமைச்சர் திரு. இலங்கரத்ன சூத்திரக் கயிறுகள் இழுத்து வருவதாகச் சொல்லப் படுகிறது. அவருடைய தலையீடு பகிரங்க சேவைக்கமிஷன்வரை பிரதமர் மூலமாகச் சென்றிருக்கிறதாம்!

இன்றைய சூழ்நிலையில் தொழில் கமிஷனர் பதவி ஒரு முக்கியமான பதவியென்றும், அப்பதவி பௌத்தரான ஒரு சிங்களவர் கையில் இருப்பது அத்தியாவசியம் என்றும் பிரதமர் திரு. பண்டாரநாயகா ஒப்புக்கொண்டு விட்டாராம்.

தொழில் இலாகாவில் சமீபத்தில் எட்டு உதவி கமிஷனர்கள் நியமிக்கபட்டனர். தொழில் இன்ஸ்பெக்டர்களாக வேலை பார்த்தவர்களிலிருந்து இந்த நியமனங்கள் பதவியேற்றம் மூலம் செய்யப்பட்டன. இதிலும் இன அடிப்படையிலும்,மத அடிப்படையிலும் தமிழர்கள் அநீ

9-ம் பக்கம் பார்க்க)

## தமிழரசு சார்புள்ள அரசாங்க ஊழியர்கள்

## தேடிப்பிடித்து இடமாற்றம் செய்யப்படும் விநோதம்

(சுதந்திரன் யாழ் நிருபர்)

தமிழரசுக்கட்சி மீது அனுதாபமுடையவர்களெனக் கருதப்படும் அரசாங்க ஊழியர்களைத் தமிழ்ப் பகுதிகளிலிருந்து வெளியேற்றும் முயற்சிகள் மறைமுகமாக நடைபெற்றுவருகின்றன. வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாக இடமாற்றம் செய்யும் வேலை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக அறியப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)


## இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!



ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(Richelet's Pectoral)

ஒரு பிரசித்திபெற்ற தயாரிப்பு. குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, நோய்வுக்கு இது ஒரு வரப் பிரசாதம்!

● மூச்சுவிடுதல் தடைப்படுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தையும் ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாயிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்கு வரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்-நுரை-போன்ற சளியை இளகச் செய்து காறி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சு வலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு, தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல் காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்

நோய்வினால் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப் படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்!

வெஸ்டன் ஏஜன்சீஸ்.,

170 ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.


தமிழ்ப் பல்கலைக் கழகம்

## கல் நாட்டு விழா

## பிரயாண ஏற்பாடுகள்

### 20 ரூபாவோடு திருமலை சென்று இரண்டு நாட்களில் திரும்பி வரலாம்

### கொழும்பு விவேகானந்த சபையின் திட்டம்

திருகோணமலையில் நடைபெறவிருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகக் கட்டடக் கல்நாட்டு விழாவில் கலந்து கொள்வதற்காக இலங்கையின் பல பாகங்களிலுமிருந்தும் பெருந் திரளான தமிழ் மக்கள் கோஷ்டி கோஷ்டியாகப் பிரயாணம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

யாழ்ப்பாணத்திலிருந்தும், மட்டக்களப்பிலிருந்தும், கொழும்பிலிருந்தும் யாத்திரிகர்களை ஏற்றிச் செல்ல பல பஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

கொழும்பிலிருந்து குறைந்த கட்டணத்தில் பிரயாணிகளை ஏற்றிச் செல்லவும், திருகோணமலையில் உபசரித்து, விழாவின் பின் திருப்பிக் கொண்டுவந்து சேர்க்கவும் நாவலர் கழகம், கொழும்பு விவேகானந்த சபைபோன்ற ஸ்தாபனங்கள் திட்டங்கள் வகுத்துள்ளன.

### 10-ந் தேதி 10 மணிக்கு

தமிழ் பல்கலைக் கழகக் கட்டடத்தின் கல் நாட்டு விழா மே மாதம் 10-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு திருகோணமலைத் துறைமுக உள் வீதியிலுள்ள பல்கலைக் கழகக் காணியில் நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

துப்பறியும் தொடர் நவீனம்:

# நீலவேணி

"நவம்"

## (46)

### நீ....நீ...!

நீலவேணியிடமிருந்து எதுவித பதிலையும் எதிர்பாராமல் அவளைக் கட்டித் தழுவத் தணிகாசலம் விழைந்த போது "ஐயோ!" என்று அலறிக்கொண்டு கீழே விழுந்தாள் அவள். அதைத் தொடர்ந்து 'டுமீல்' என்று ஒரு வெடிச் சத்தம் கேட்டது!

தணிகாசலம் துடித்துக் கொண்டு கீழே சாய்ந்தான். கையில் துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டு பயங்கரமாகச் சிரித்துக் கொண்டு நின்றுள் மியூறியல்.

"மடையன் நெருப்புடன் விளையாடுகிருன். இந்த மியூறியலை ஏமாற்ற உலகில் யாருமே இல்லை!" என்று கொக்கரித்தாள் மியூ.

அவளுடைய ஆணவக் கொக்கரிப்பு அடங்குவதற்குள், "இதோ நானிருக்கிறேனே!" என்று ஒரு குரல் கேட்டது.

குரல் வந்த திசையைப் பார்த்துக் கொண்டு துப்பாக்கியை உறுதியாகப் பிடித்துக் கொண்டாள் மியூ.

"நில்! அசையாதே! அசைந்தால் பிணமாகி விடுவாய்!" என்று உறுமிக் கொண்டு ஒரு கரிய நிழலுருவம் அங்கு வெளிப்பட்டது.

மியூறியல் தடுமாற்றத்துடன், "நீ...நீ..." என்று உளறினுள்.

"ஆம்; நானேதான்! உங்கள் பழைய தோழன். நீங்களெல்லாம், நான் பாரீஸிற்குச் சென்றுவிட்டேன் என்று தப்புக் கணக்குப் போட்ட அதே நிழல்மனிதன் தான்!" என்முன் அங்கு குதித்த மாயாவி.

"அப்போ அந்தக் கப்பலில் சென்ற மனிதன்?"

"தற்காலிக நிழல்மனிதன்! உங்கள் நாட்டைச் சேர்ந்தவன். ஒரு வகையில் உங்கள் இனத்தவன் கூட!"

"யார்?"

"இன்னும் தெரியவில்லையா? சரி; நானே சொல்லிவிடுகிறேன். உங்கள் அருமைத் தோழி டோரினின் தந்தை!

"யார்? மிஸ்டர் லீ யா?"

"ஆமாம் அம்மணி! மிஸ்டர் லீ தான் அன்று மாறுவேஷத்தில் அந்தக் கப்பலில் தாவி ஏறியவர்!"

"அப்போ உங்களுக்கெல்லாம் எங்கள் திட்டம் தெரியுமா?"

"இதென்ன கேள்வி? முதல் நாள் புறப்பட்ட கப்பலில் நீலவேணியை நீங்கள் கடத்திக் கொண்டு செல்லவில்லை என்பதும், அடுத்த நாள் புறப்பட இருந்த கப்பலில் தான் நீங்கள் செல்ல இருந்ததும் எனக்கு நன்ருகத் தெரியும்! கடைசி நேரத்தில் நீங்கள் ஒரு நன்மையான காரியம் செய்து, என்னைக் 'கொலைகாரன்' ஆக்காமல் காத்தீர்கள்!"

"தணிகாசலத்தைச் சுட்டதைக் குறிப்பிடுகிறீர்களா?"

"ஆம்; அதையே குறிப்பிடுகிறேன். தனிமையில் இருந்த நீலவேணியுடன் சல்லாபம் செய்ய வந்த தணிகாசலத்தின் நடவடிக்கைகளை நான் மறைவிலிருந்து கவனித்துக் கொண்டு தானிருந்தேன். நல்ல வேளை. நல்ல தருணத்தில் நீங்கள் தோன்றினீர்கள். என் நன்றி!"

இந்தத் தருணம் வெடிப்பட்ட தணிகாசலம் முனகினுன்.

நிழல்மனிதன் அவனருகே சென்று, "உன் கொடுமைகளுக்கு உனக்குச் சரியான தண்டனை கிடைத்தது. தொலைந்துபோ! நீ யாரை நம்பி வந்தாயோ, அவள் கையாலேயே அழிவைத் தேடிக் கொண்டாய்" என்முன்.

குற்றுயிரும், குலைஉயிருமாகக் கிடந்த தணிகாசலம், மெள்ளத் தலையை நிமிர்த்தி, "உண்மை. எனக்குத் தகுந்த தண்டனை கிடைத்து விட்டது. கட்டிய மனைவியை ஈவிரக்கமின்றி என் கையால் நசுக்கிக் கொன்ற எனக்கு இந்தத் தண்டனை போதாது. போதவே போதாது!" என்முன்.

"அப்போ அஜந்தாவின் கொலைக்கும் நீதானா காரணமா?"

"சந்தேகம் என்ன?"

நிழல்மனிதனுக்கு அஜந்தாவின் கொலை சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட வைத்தியின் ஞாபகம் பளிரென்று வந்தது. தன் கையோடு கொண்டுவந்த "ரிகார்டிங் மெஷினி"ன் உதவியினுல் தணிகாசலத்தின் வாக்கு மூலத்தைப் பதிவு செய்து கொண்டான்.

தணிகாசலம் தனக்கிருந்த கடைசி ஆசையை நிழல் மனிதனிடம் தெரிவித்தான். "இத்தனை மகத்தான ஜாலங்கள் புரிந்து இலங்கையின் மானத்தையே காப்பாற்றிய உன்னை நான் யார் என்று அறியலாமா?" கெஞ்சும் தொனியில், மரண அவஸ்தையோடு கேட்டான் தணிகாசலம்.

அவனுடைய இறுதி வேண்டுகோளை நிராகரிக்க நிழல்மனிதனுல் முடியவில்லை.

தன் வேஷத்தைக் கலைக்க முன்னம் தன் எதிரே திக்பிரமை பிடித்துப் போய் நின்ற மியூறியலை நோக்கினுன் அவன்.

விவரிக்க வொண்ணுத ஆர்வத்தோடு தன்னையே பார்த்துக்கொண்டிருந்த மியூறியலைப் பார்த்ததும் அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

"நான் யார் என்பதை யார் அறிந்து கொள்ளாது போனுலும், என் மதிப்பிற்குரிய மிஸ் மியூறியல் அம்மையார் அவசியம் அறிந்து கொள்ள வேண்டும்.

"அம்மையாரை, ஏடன் துறைமுகத்தில் வைத்தே கைது செய்வதற்கான ஏற்பாடுகள் யாவும் மிஸ்டர் லீ அவர்களால் செய்யப்பட்டு வருகின்றன. அதற்குள் அவர்களும் என்னை யார் என்று கண்டு கொள்ளட்டும்" என்று சொல்லிக் கொண்டு நீலவேணி மயங்கிக் கிடந்த பக்கம் தன் பார்வையை ஓடவிட்டான் அவன்.

அன்றலர்ந்த செந்தாமரையைப் பழித்துக் கொண்டு அவள் முகதாமரை பிரகாசிக்கத்த வண்ணமிருந்தது.

நிழல்மனிதன் தன் மர்ம உடையைக் களைந்தான்!

அந்த உருவத்துக்குள் மறைந்திருந்த மனிதனைக் கண்டதும் மியூறியல் தலை சுழன்றது. தணிகாசலம் அந்த மரணப்படுக்கையிலும் ஆச்சரியத்தால் தன் கண்களை அகல விரித்தான்.

இருவரும் ஏக காலத்தில் "நீயா நிழல்மனிதன்!" என்று கேட்டனர்!......மன நிறைவோடு கண்களை மூடினுன் தணிகாசலம்.

## (47)

### பிணக் குரல் பேசியது!

நமது நெடுங் கதையின் இறுதிக் கட்டத்துக்கு வந்து சேர்ந்துவிட்டோம். ஆழ்கடலின் மத்தியில் கப்பலில் இருந்த நாம், கொழும்பு ரத்மலானை விமான நிலையத்துக்கு வர வேண்டியிருக்கிறது. கதையின் இறுதிக் கட்டம் அங்குதான் பூர்த்தியாக இருக்கின்றது.

இதற்கிடையில் இன்னும் ஒரு முக்கிய சம்பவத்தை நாம் கவனிக்க வேண்டியிருக்கின்றது. அதையும் ஒரு நோட்டம் பார்த்துவிட்டோமானுல் அப்புறம் கதைக்கு 'மங்களம்' வைத்ததுபோலத்தான்!

'ரிகார்டிங்' மெஷின் உதவி கொண்டு தணிகாசலத்தின் வாக்குமூலத்தை நமது கதாநாயகன் நிழல்மனிதன் பதிவு செய்தானல்லவா?

அந்த மெஷினைச் சற்று இயக்கிவிட்டு அதில் அவன் என்ன சொல்லியிருக்கிருன் என்பதை அவதானிப்போமானுல் நம் அன்புக்கும், மதிப்புக்குமுரிய அஜந்தா எப்படி இறந்தாள் என்ற விவரம் தெரியவரும்.

ஃ

நிழல் மனிதனை அகப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட விருந்து வைபவத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் மும்முரமாக நடந்துகொண்டிருக்கும் போது தணிகாசலம் அவசர அவசரமாக மல்லிகைத் தோட்ட பங்களாவுக்கு வந்தான்.

என்றுமில்லாத வாஞ்சையோடு அஜந்தா அவனை அன்று வரவேற்றுள். தணிகாசலமும் மிக அந்நியோன்யமாக அவளுடன் உரையாடினுன்.

இருவரும் நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒரே மேஜையிலிருந்து போசனமும் அருந்தினுர்கள்.

சாப்பாடெல்லாம் ஆனதும் இருவரும் மாடிக்குச் சென்றனர். தணிகாசலம் மிகவும் சாதுப்பிள்ளையாக அன்று நடந்துகொண்டது அஜந்தாவுக்கு ஒரே வியப்பாக இருந்தது.

தன் கணவன் திருந்திவிட்டானு? தன் வாழ்வு பழையபடி மலர்ந்துவிட்டதா? என்றெல்லாம் இவள் எண்ணி மனப்பால் குடித்தாள்.

விவரிக்க முடியாத வெறியுணர்ச்சியால் பாதிக்கப்பட்டவன்போல் காணப்பட்ட தணிகாசலம் அஜந்தாவின் மென்கரத்தை இறுகப் பற்றினுன்.

நீண்டகாலமாகக் கணவனின் அணைப்பிலிருந்து விலக்கி தனி மரம்போல் விடப்பட்டிருந்த அஜந்தாவின் உணர்ச்சி நரம்புகள் உயிர்த்தன. விறுகொண்டு புடைத்தன.

தன் இரு கண்களையும் மூடிக்கொண்டு அவன் இன்ப அணைப்பில் இணைந்தாள் அஜந்தா. அன்றையப் பொழுது அவளுக்கு இனிக்கும் பொழுதாக இருந்தது. ஆனுல் அதன் பிறகு......!

வெறியைத் தணித்துக் கொண்ட தணிகாசலம் வெளியே புறப்பட ஆயத்தமானுன்.

அஜந்தாவுக்குத் 'திக்' என்றது. எங்கும் போக வேண்டாம் என்று கெஞ்சினுள்.

"நான் எங்கும் போய்விடவில்லை. இதோ வந்துவிடுகிறேன். ஒரு அவசர ஜோலி!" என்று சாக்குச் சொல்லிக் கொண்டு அவள் பிடியிலிருந்து விடுபட முயன்முன் தணிகாசலம்.

அஜந்தா அதற்கு இணங்கவில்லை. "இன்று நீங்கள் இங்கிருந்து எங்குமே செல்வதை நான் அனுமதிக்கப் போவதில்லை!" என்முள் பேதை அஜந்தா.

'நான் போகத்தான் வேண்டும் என்னைத் தொந்தரவு செய்யாதே!' என்றுசொன்ன தணிகாசலம் அஜந்தாவின் பதிலுக்கே காத்திருக்காமல் புறப்பட்டான்.

அப்படிப் புறப்பட்ட தன் கணவனைத் தடுத்து நிறுத்தி, "இன்று நீங்கள் எங்கு போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் போவதானுல் என்னைக் கொன்றுவிட்டுப் போங்கள்" என்று கத்தினுள் அஜந்தா.

(15-ம் பக்கம் பார்க்க)

## தொடர் கதை தேவை

சுதந்திரனில் தொடர்ந்து பிரசுரிப்பதற்கு தரமான தொடர் கதைகள் தேவை.

எழுத்தாள நண்பர்கள், வாசகநேயர்களிடமிருந்து நல்ல கதைகள் வரவேற்கப்படுகின்றன.

பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படாத கதைகள் திருப்பி அனுப்பப்படும்.

"தொடர் கதை"

C/o ஆசிரியர்,
சுதந்திரன்,
தபால் பெட்டி 1183,
கொழும்பு.

என்ற விலாசத்துக்கு, நல்ல தொடர் கதைகள் உள்ளவர்கள் அவற்றை அனுப்பி வைக்கலாம்.

—ஆசிரியர்

ஆசிரிய கலாசாலைப்
பிரவேசப் பரீட்சை 1959

இப்போட்டிப் பரீட்சையில் நீங்கள் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியைப்பெற உங்களுக்கு வழி காட்டும் எமது புத்தகங்களை இன்றே வாங்கிப் படியுங்கள்.

பாடத்திட்டம் தழுவிய புத்தகங்கள்.

★ பாஷை ★ பூமிசாஸ்திரம் ★ எண்கணிதம்
★ சரித்திரம் ★ பொதுவிவேகம்.

ஒவ்வொரு பாடப்புத்தகமும் ரூபா 12-50.
தபாற் செலவு பிரதிக்கு 35 சதம்.
கடந்தகால வினு விடைகள் ஒவ்வொரு பாடத்துக்கும்
ரூபா. 3-00 தபாற் செலவு 35 சதம்.
விபரங்களும் விலைப் பட்டியலும் இலவசம்

விபரங்களுக்கு எழுதுக:

அற்லஸ் ஹோல்,
723, மருதானை, கொழும்பு.
தபாற் பெட்டி 649 போன்: 9759.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, பிரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனுமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செல்வி. வி. சொர்ணம்மா, அனலைதீவு.

கே: சுதந்திரத் தமிழ் நாட்டிலே சுதந்திரனின் கடமை என்ன?

ப: அப்போது ஆளும் கட்சியாக விளங்கும் தமிழரசுக் கட்சியை அக்கு வேறு ஆணி வேருகப் பிய்த்து நல்வழியில் அது ஆட்சியை செலுத்தும்படி செய்வது.

எஸ். பி. ஜெயம், திருமலை.

கே: பூவுக்கும் மங்கைக்கும் ஒற்றுமை யென்ன?

ப: இரண்டுக்கும் மலருமுன்பு மணம் கிடையாது. மலர்ந்த பின்னரே இரண்டும் மணம் பெறுகின்றன.

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: எழுத்தாளன் மனைவி எப்படி அமைய வேண்டும்?

ப: நிச்சயமாக திருமதி குயுக்தியாரைப் போல் அமைய வேண்டும். அதாவது கணவன் என்றவன் என்ன எழுதிக் குவிக்கிருன் என்பதைக் கண்டெடுத்தும் பாராத அரிய பண்புடையவளாயிருக்க வேண்டும்!

கெ. சந்திரவசு, பலாலி.

கே: இந்த உலகில் ஆணுக்கும் பெண்ணுக்கும் அந்தஸ்து வித்தியாசம் ஏன்?

ப: என்ன செய்வது ஆண்டவனே அப்படிப் படைத்து விட்டானே. பெண்கள் ஒரு முறை தவறினலும் மண் குடமாகிருர்கள். ஆண்கள் பலதடவை தவறினலும் பொன் குடமாகவே மதிக்கப் படுகிருர்கள்.

ஏ. எல். மோகன், ஆனைஇறவு.

கே: காதலி எப்போது தன் காதலனை வெறுக்கிருள்?

ப: காதலன் ஸ்தானத்தில் இருந்தவன் சட்டப்படி கணவன் ஸ்தானத்துக்குப் 'புரமோஷன்' பெற்றதும்.

வி. கந்தசாமி, வல்வெட்டிதுறை.

கே: கேள்வி பதிலுக்கு நோபல் பரிசு கொடுப்பதாஞல் யாருக்கு கொடுக்கலாம்?

ப: இந்தக் கேள்வியை என்னிடம் கேட்டு என் அடக்கத்தைப் பரிசோதிக்கவேண்டியதில்லையே. வாசகர்களிடம் கேட்டாலே அவர்கள் குயுக்தியார் என்ற திருநாமத்தைக் கும்மாளத்தோடு அல்லவா சொல்வார்கள்.

க. பூபாலசிங்கம், நிலாவெளி.

கே: இளம் பெண்ணின் முதல் ஸ்பரிசத்தில் என்ன இருக்கும்?

ப: அமுதம் இருக்கும் என்பான் வசமிழந்த காதலன். ஆஞல் உண்மையில் நடுக்கந்தானிருக்கும்.

செல்வி. கருணு, சாவகச்சேரி.

கே: இலங்கையில் எம். ஈ. பி. ஆட்சியில் மனிதனுடைய மதிப்பு என்ன?

ப: நேபாள மன்னர் சுட்ட மானையும், ரத்து மலானை விருந்தில் சேர். ஜோன் வெட்டிய பசுக் கன்று பொரியலையும் விட மட்டமானது தான் என்பதை பாணந்துறைப் பண்டாரத்தைப் பொசுக்கிய சம்பவம் நிரூபிக்கவில்லையா?

ரீ. மரியதாஸ், செங்கலடி.

கே: இராமாயணம் பாடிய கம்பனும், திருக்குறள் தீட்டிய திருவள்ளுவனும் இன்றிருந்தால் என்ன செய்வார்கள்?

ப: பரஸ்பரம் ஒருவருக்கொருவர் மஞ்சள் பட்டுச் சேலையை வாங்கிப் போர்த்துக் கொண்டு, பொன்ஞடை போர்த்தியதாகப் பத்திரிகைகளுக்கு செய்தி கொடுப்பார்கள்;

கே: இலட்சியம் என்ருல் என்ன?

ப: அடிக்கடி 'பல்டி' அடிக்காமல் ஒரே இலக்கை நோக்கிச் செல்லும் தன்மை 'இலக்ஷியம்' என சமஸ்கிருதத்தில் பொருள்படும்.

மகாதேவன், குரும்பசிட்டி.

கே: உம்முடைய உண்மையான பெயர் என்ன? குயுக்தியார் தாஞ?

ப: உம்முடைய உண்மையான பெயர் என்ன? மகாதேவன் தாஞ?

எஸ். தேவராசன், வீமன்காமம்.

கே: இயற்கையை வெல்லக் கூடிய சக்தி யெது?

ப: மின் சக்தி என்பான் விஞ்ஞானி. பராசக்தி என்பான் மெஞ்ஞானி. பணச் சக்தி என்கிருன் அனுபவசாலி.

மூலம் அவர் தமது உன்னத ஸ்தானத்தை நிலை நாட்டிக் கொள்ள வேண்டும் என்பதே என் ஆசையாகும்.

ஆ. சிவநேசச்செல்வன், தெல்லிப்பழை

கே: குயுக்தியாரே, தாங்கள் விஷயங்களை பச்சையாக எழுதிவிடுகிறீர்கள் என்று ஒரு பெரியார் அபிப்பிராயப் படுகின்ருர். என்ன சொல்லுகிறீர்கள்?

ப: அவித்ததைவிடப் பச்சையில்தான் அதிக வைட்டமின்கள் உண்டு என்கிருர்கள் டாக்டர்கள். அறிவுக்கு உணவு அளிக்கும்போதும் பச்சையாய் வழங்குவது சத்தாக இருக்குமல்லவா?

செல்வி பாலாமணி, வண்ணார்பண்ணை

கே: பஸ் கண்டக்டர்மார்கள் கிழவிகள்மேல் ஏன் சீறி விழுகிருர்கள்? குமரிகளைக் கனிவொடு பார்க்கிருர்கள்?

ப: தம் அன்னையரும் கிழவிகள்தாம் என்பதை மறந்த பதிதர்கள் இந்த அந்தகர்கள். குமரிகள்தாம் அவர்கள் பார்வைக்கு இனிப்பாய் இருக்கிருர்கள் போலும். இந்த கண்டக்டர்கள் தம் கண்களைக் கண் டாக்டர்களிடம் காட்டிச் செப்பனிடும்படி யாராவது கன்னத்தில் இரண்டு கொடுப்பது வரவேற்கத்தக்கது.

கே: வாலிபர்கள் அதிகம் மெலிந்திருப்பதேன்?

ப: தாம் ஒரு தூக்க முடி [illegible] என்று தம் காதலிகளுக்கு நம்பிக்கையூட்டுவதற்காக.

| |
|---|
| மிஸ்டர் குயுக்தியார் |
| C/o சுதந்திரன். |
| த. பெ. 1183 |
| கொழும்பு.—12 |

## கடல் தாண்டி வாரும்

(பாலகுரு சின்னச்சாமி)

மடல் கண்டு உடல் குளிர உளங்களித்தேன்
மதுர மொழி கற்கண்டே அத்தான்! ஈழம்
கடல்தாண்டி நீர் சென்றீர் பிழைக்கத் தானே
கண்டதென்ன? இன்னும் இங்கே வறுமை யென்னும்
உடலுருக்கும் நோய் குறையக் காணேம். வினர்
ஊராளும் ஆட்சியினர். அறிவு கெட்டார்!
வட நாட்டான் நம்மவரின் தலையில் மண்ணை
வாரிவிட்டு அவர்சுகமாய் வாழ்கின் ருரே!

மதிஒளியில் சுகம்கண்டு தென்றல் வீச
மலர்ச்சோலை மணம்வீச மகிழ்ந்த நாட்டில்
மதிஒளிரா சிலருக்கு மகுடம் சூட்டி
மந்திரியாய் ஆக்கிவிட்டோம் அதனுல் அந்தோ!
துதிபாடி வடக்கனுக்கே பணத்தை யெல்லாம்
தொலைக்கின்ருர்! தென்னுட்டில் பஞ்சம்! அஞ்சி
சதிராடும் இவர்போக்கைச் சாய்க்க எண்ணி
சார்ந்திட்டேன் கழகத்தின் சேவைக்காக

எண்ணியநம் எண்ணமெல்லாம் முடியும் அத்தான்
எள்ளளவும் நீர் அஞ்சவேண்டாம்; பண்பு
நண்ணிய நம் தமிழ் நாட்டில் சூழ்ந்த கங்குல்
நாளில்லை நீங்குதற்கு! உதயம் போன்ற
அண்ணுவின் படையணியில் சேர இன்றே
அலைகடலைத் தாண்டி இங்கு வாரும்! வாரும்!
புண்ணியனே! தென்னுட்டில் வாழும் எம்மின்
போர்மூச்சு! மொழிமூச்சு! புகழுமாச்சு!!

ந. டே. குணரத்தினம், எட்டப்பெரள.

கே: இலங்கையின் பெரிய சினிமா நடிகர் யார்?

ப: சந்தேகமென்ன மகாகனம் பொருந்திய மகுடி மரைக்கார் தான்!

செல்வி. ஸ்ரீரஞ்சனி, அளவெட்டி.

கே: சிறந்த சிறுகதை எழுத்தாளர் ஐவரைக் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தீர்கள். அதில் தாங்கள் அ. செ. முருகானந்தனைக் குறிப்பிடாதது வருத்தமாயிருக்கிறது. என்ன சொல்கிறீர்கள்?

ப: எனது நண்பர் அ. செ. மு.வைக் குறிப்பிடாதது எனக்கும் வருத்தமாய்த் தான் இருக்கிறது. அவரும் மிகச் சிறந்த சிறுகதை எழுத்தாளருள் ஒருவர் தாம். ஆஞல் அவர் ஒரு எழுத்தாளர் என்பது, இப்போது [illegible] பழங் கதையாய் [illegible] கொண்டே வருகிறது. திருப்பவும் எழுதுவதன்

கே: தன் மனைவியிடம் காதலன் முதலில் எதிர்பார்ப்பது எதை? முடிவில் காண்பது எதை?

ப: முதலில் எதிர்பார்ப்பது இறுக்கத்தை. முடிவில் காண்பது சடாட்டத்தை! அதாவது காதலி சிக்கனம் உள்ளவளாக இருக்க வேண்டும் என்று காதலன் விரும்புகிருன். அவள் முதலாந் தேதி வந்த சம்பளத்தை மூன்ருந் தேதிக்குள் முடித்து விடுகிருள்.

கே: கவலையைத் தீர்ப்பது எது?

ப: மதலையின் பொக்கை வாய்ப் புன்னகை.

கே: மலர் வாடியதும் வண்டு பறப்பதேன்?

ப: கசாது என்று ஒரு கால் விலங்கு அதற்கு மாட்டப்படாததால்!

கே: உழைக்காமல் வாழ்வது எப்படி?

ப: புளி மூட்டைபோன்ற தம்பிரான்களின் தொப்பையைக் கண்ட பின்பாவது இந்த வழி தெரியவில்லையா? ஆம், ஆண்டவனின் பிரதிநிதியாக, அட்வகேட்டாக வேஷம் போடுவதுதான் உழைக்காமல் பிழைப்பதற்கு உள்ள சுருக்கு வழி.

"உதயதாரகை" வல்வெட்டி

கே: இலங்கை ஒரு குடியரசு நாடாகிய பின்......

ப: குடி அரசர்களைத் தவறணைகளின் முன்னல் மட்டுமல்ல பாராளுமன்றத்திலும் காணக்கூடியதாக இருக்கும்.

ம. சரவணபவன், தலவாக்கொல்லை

ப: தேனைவிட மதுரமானது எது?

ப: கலியாணம் ஆகும் வரை டெலிபோனில் கேட்கும் காதலியின் குரல்!

வே. இராசதுரை, டாலை

கே: வவனியாப் பிரதிநிதியின் விலாசம் என்ன?

ப: C/o ஈழத்தமிழர் வேற்றுமைப் பின்னணி, அடங்காப்பற்று என்று எழுதுங்கள்.


## "ஆஸ்த்மா"வைப் பற்றிய உண்மைகள்

ஆஸ்த்மா என்ற தொய்வு ஒரு பயங்கரமான வியாதியாகும். நரம்புத்தளர்ச்சி, காலநிலை, மூக்கடைப்பு மார்பில் ஏற்படும் சளி, வயிற்றுக்கோளாறுகள் ஆகிய பல காரணங்களால் ஆஸ்த்மா, என்ற தொய்வு ஏற்படுகிறது.

பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு வியாதியைப் பூர்ணமாகக் குணமாக்கக் கூடிய "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புதமான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம் மருந்தின் பெருமையைப்பற்றி நூற்றுக்கணக்கான கடிதங்கள் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள்-நன்றிக் கடிதங்கள் எழுதிய தமிழன்பர்கள் யாவருக்கும் நம் நன்றி—இன்னும் சில கடிதங்கள்.

(1) டாக்டர்,

எனக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி "ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் பாவித்ததில் பூர்ண குணம்.

என் அன்பு நன்றி.

திரு. S. S. றமீது
C/o திரு. K. அப்துல் வஹாப்
(மட்டக்களப்பு பகுதிக்கு அரசாங்க கண்டிராக்டர்
11, பவுன்டரி ரோட் (BOUNDRY ROAD) மட்டக்களப்பு)

(2) எனது மனைவிக்கு 15 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, பூர்ணசுகம் நன் நன்றி.

திரு. இ. சரவணமுத்து
பிரதம அதிகாரி
வி. சி. ஆபீஸ் பக்கியல்ல (களுவாஞ்சிக்குடி)
களுவாஞ்சிக்குடி (EP)

ஒரு பாட்டில் ஆஸ்த்மடிக்காவில் எனக்கிருந்த ஆஸ்த்மா என்ற தொய்வு பூர்ணசுகம்.

வணக்கம்
திரு. அ. ஆனந்தலிங்கம்
ரூப்பியன் தோட்டம், கம்பர்மலை
வெள்வெட்டித்துறை

அன்பர்களே அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம். ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

### "ஆஸ்த்மடிக்கா"
(ஒரு நவீன சஞ்சீவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல்—ரூ. 15/-
(மிக உபாதை தரக்கூடிய நாள் பட்ட ஆஸ்த்மாவுக்கு)
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-

வி. பி. பி. சதம் -/85

விபரங்களுக்கு

டாக்டர்.

## சுக ஆதார வைத்தியசாலை

MODERN CLINIC
255, காலி ரோட், பம்பலப்பிட்டிய
கண்வென்ட் எதிரில்
கொழும்பு-4.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

திண்ணைப் பள்ளிக்கூடம் — பொருளாதாரம் (14)

# திட்டமிடுதல் : ? ? ?

## PLANNING : Entrepreneurship 2

**பாத்திரங்கள்**

1. உபாத்தியாயர் உலகநாதர்
2. அப்பாக்குட்டி
3. குமரேசு

**உபாத்தியாயர்:**

சென்ற முறை நீங்கள் "என்ரெப்பிறேனர்ஷிப்" (Entrepreneurship) என்று குறிப்பிட்ட பண்பு எத்தன்மையது என்பதையும், தமிழ் மக்களிடையே அப் பண்பு சூன்யமாயிருப்பதையும், நாட்டுப் பொருளாதார அபிவிருத்திக்கு அப் பண்பு எவ்வாறு அவசியம் என்பதையும் உதாரணங்கள் வாயிலாக விளக்கினீர்கள்.

**குமரேசு:**

ஆமாம். இன்றைக்கு அப் பண்பை எவ்வாறு நம் சமூகத்திடையே பொருளாதாரத் துறையில் வளர்க்க முடியும் என்பதை ஆராய்வோம்.

**உபாத்தியாயர்:**

நீங்கள் குறிப்பிடும் பண்பு ஆங்கிலேயர் போன்ற ஐரோப்பிய அமெரிக்க சாதியினரிடையே அபரிமிதமாக இருக்கிறதென்றமையால், அப் பண்பு ஒரு சில சாதியினரிடையேதான் உண்டு என்று கூற முடியுமோ?

**குமரேசு:**

எந்தப் பண்பையும் நிரந்தரமாக ஒரு சாதி மக்கட்குப் பிரத்தியேகமானது என்று கூற முடியாது. ஒருவனுடைய அடிப்படையான ஆற்றல் அல்லது விவேகம் வழி வழி வந்ததாக இருக்கும். ஆங்கிலத்தில் நாம் அடிப்படையான விவேகம் என்று சொல்வதை Potential Intellect என்று குறிப்பிடுவர். பண்பு என்பது பண்படுத்தலால் உருவாகிய தன்மை ஆகும். அதாவது ஒருவன் எத்தகைய சூழலில் வளர்ந்து வந்தானோ (முக்கியமாக இளமைப் பராயத்தில்) அதைப் பொறுத்தே அவன் பண்பாடு தங்கியிருக்கும்.

தனி மனிதருக்கிடையே அடிப்படையான ஆற்றல் விவேகத்தில் வேறுபாடு இருக்கும். ஆயினும் ஒரு சாதியினரைக் கவனிக்கும் பொழுது, அடிப்படையான விவேகத்தில் அல்லது ஆற்றலில் ஒரு இனம் மற்றொரு இனத்திலும் பார்க்க உயர்ந்தது அல்லது தாழ்ந்தது என்று கூற முடியாது. ஆனால் பண்பாட்டில் சாதிப் பண்புகளில், விசேடம் அல்லது குறைவு தோற்றும். அப்படி நாம் குறிக்கும் சாதிப் பண்புகள் சூழலிலிருந்து பெறப்படுவனவாகையால், சூழலை மாற்றியமைப்பதால் நெடுங் காலத் தவணையில் அச் சாதிப் பண்புகள் மாற்றமடையக் கூடும். கட்டுப்பாட்டுணர்ச்சியும், சுறுசுறுப்பும், துணிச்சலும், விடா முயற்சியும் ஆங்கிலேயர், ஜர்மானியர் போன்ற ஜாதியினரிடையே தற்பொழுது அபரிமிதமாகக் காணப்படுகிறதெனினும் பல நூற்றாண்டுகட்கு முன்னர் இவர்களிடையே இப்பண்புகள் அவ்வளவு விசேடமாக இருக்கவில்லை. சில நூற்றாண்டுகளாகவே மேற் கூறிய சீரிய பண்புகள் அச் சாதி மக்களிடையே ஏற்பட்டன.

**அப்பாக்குட்டி:**

"குலத்தளவே யாகுமாம் குணம்" எண்டு முன்னோர் சொல்லயில்லையா?

**குமரேசு:**

"குலத்தளவே யாகுமாம் குணம்" என்று நம் மூதாதையர் சொன்னதில் நிறைய உண்மையிருக்கின்றது. குணம் என்று குறிப்பிட்டது பண்பாட்டை. பண்பாடு சூழலில் தங்கியிருக்கும். மாற்றமின்றி வளர்ச்சியற்று ஒரே தன்மையதாய் சமூகம் இருந்த அப் பழைமையான காலத்தில் ஒவ்வொருவனும் வளர்ந்து வந்த சூழல் அவன் குலத்தைப் பொறுத்திருந்தது. குலம் என்றது சூழலையே கருதியது. வருணாச்சிரம தருமம் என்ற முறை பொருளுற்பத்தி விநியோகத்தை ஸ்திரப்படுத்துதற்காக அமைக்கப் பெற்றது. ஆனால் ஒரு வகைப் பொருளுற்பத்தியில் ஈடுபடுவோர் இன்னொருவகைப் பொருளுற்பத்தியி லீடுபடுபவர்களி

சகாதேவன்

லும் பார்க்க உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர் என்று சொல்லுதல் தவறு.

**அப்பாக்குட்டி:**

வேளாளர் உயர்ந்த சாதி, மற்றவை தாழ்ந்த சாதி எண்டு ஏன் வந்தது?

**குமரேசு:**

வேளாண்மை செய்பவர் வேளாளர். வேளாண்மை உணவு உற்பத்தித், தேவையைப் பூர்த்தி செய்வதாகும். உணவு மற்றைய தேவைகளிலும் பார்க்க அத்தியாவசியமானதும் அதிகம் வேண்டியதுமாகும். ஆகவே ஒரு சமூகத்தில் பெருந்தொகை மக்கள் வேளாண்மையில் ஈடுபட வேண்டி நேர்ந்தது. ஆகவே வேளாண்மை செய்யும் வேளாளர், வேறு தொழில் செய்பவர்களிலும் பார்க்க எண்ணிக்கையில் கூடுதலாக அமைந்தனர். ஆகவே கூடிய எண்ணிக்கையின் பெறுபேருக அவர்கள் பிற தொழில் செய்யும் குழுவினருக்கு மேல் ஒருவகை ஆதிக்கம் செலுத்த முடிந்தது. அவ்வாறு தாங்கள் செலுத்த முடிந்த ஆதிக்கத்தை ஸ்திரப்படுத்துவதற்காக சாதியை உயர்ந்தது தாழ்ந்தது என்று பாகுபடுத்தி, சமயக் கோட்பாட்டுக்குள் புகுத்தி வைத்தனர். தாங்கள் ஆதிக்கம் செலுத்தக் கிடைத்த வாய்ப்பை எவர்தான் தவற விடுவர்? அது மனித சுபாவம். தங்களுக்குக் கிடைத்த ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்காக சமய நம்பிக்கைகளுள் தங்கள் சாதிக் கோட்பாடுகளை மிகவும் யூகமாகப் புகுத்தி விட்டனர். தொழில் வேறுபாட்டின் நிமித்தம் சாதி வேறுபாடு பழைய சமூகத்தில் காணப்பட்டது. ஆனால் அச் சாதி வேறுபாடு உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற பாகுபாட்டை நிரந்தரமாக நிலைநாட்டி வைக்க முடியாது. அது தர்க்க ரீதியானதுமாகாது. எண்ணிக்கைப் பலத்தால் வலிமைபெற்றவர்கள் ஆதிக்கம் செய்தனர் என்பதுதான் உண்மை.

**உபாத்தியாயர்:**

இன்றைக்கு இலங்கையில் எண்ணிக்கையிற் கூடிய சிங்களவர் எண்ணிக்கையிற் குறைந்த தமிழர்களையும் மற்றைய சாதியினரையும் அடக்கி தம் ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்காக தனிச் சிங்களச் சட்டத்தை இயற்றினதும் முன்னாட்களில் நம் சமூகத்தில் தொழில் வேறுபாட்டை சாதி வேறுபாடாக்கி, உயர்வு தாழ்வு கற்பித்து அச் சாதி வேறுபாட்டை சமயக் கோட்பாடுகட்குள் புகுத்தினதும் ஒரே தன்மையது தானே?

**குமரேசு:**

நோக்கமளவில் ஒரே தன்மையதுதான். அற்றை நாள் வேளாளரும் இன்றைய சிங்களவரும் ஒரே நோக்கமாகத்தான் கருமமாற்றுகின்றனர். அதாவது தமக்குக் கிடைத்த ஆதிக்கத்தை ஸ்திரப்படுத்தல் இரு சாராருக்கும் பொதுவான நோக்கமாகும்.

(தொடரும்)

---

### ஆள்வினை உடைமை

சுதந்திரன் 19-4-59 இதழில் Enterprise, Entrepreneurship என்ற ஆங்கிலப் பதங்களுக்கு ஏற்ற தமிழ்ப் பதங்கள் காண்பது அரிது என்று குறிப்பிட்டிருந்தீர்கள். திருவள்ளுவர் காலத்திலேயே இதற்குப் பொருத்தமான தமிழ் பிரயோகம் காண்பது சிரமமாகத் தானிருந்திருக்கிறது.

அதனுலேயே திருவள்ளுவரும் தாங்கள் கூறிய கருத்துக்களை ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை, வினைத்திட்பம், வினை செயல் வகை போன்ற பல அதிகாரங்களில் விளக்கி விவரிக்க வேண்டியதாயிற்று.

இவற்றுள் ஆள்வினையுடைமை என்ற பிரயோகத்தை Entrepreneurship என்ற சொற் பிரயோகத்துக்கு ஈடாக, ஏற்றதாகக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

இங்ஙனம்
—க. வேலாயுதபிள்ளை

கச்சேரி,
யாழ்ப்பாணம்,
27-4-59.

---

# எல்லோருக்கும் நல்லவர் லண்டன் சென்ருர்

## அன்பர்கள் நடத்திய பிரிவுபசார விருந்து

இலங்கை வானொலித் தமிழ் நிகழ்ச்சி அமைப்பாளர் திரு. கே. எஸ். நடராஜா எல்லோருக்கும் நல்லவர். ஆறு மாத காலம் லண்டனில் தங்கியிருந்து பி. பி. ஸி. வானொலி நடைமுறைகளைக் கற்று வர இவ்வாரம் அரசாங்கத்தால் அங்கு அனுப்பப்பட்டிருக்கிருர்.

எல்லோருக்கும் நல்லவரான அவர் வானொலிக் கலையில் வல்லுநராகத் திரும்பி வர வேண்டுமென்ற ஆவலில் வீரகேசரி பிரதம ஆசிரியர் திரு. கே. வி. எஸ். வாஸ், ஜனப் எம்.எம். உவைஸ் உட்படப் பல அன்பர்கள் கூடிக் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு கிறீன் லண்ட்ஸ் ஹோட்டலில் அன்னருக்கு ஒரு பிரிவுபசார விருந்து நடத்தித் தமது அன்பைத் தெரிவித்தனர்.

விருந்தை ஏற்பாடு செய்த திரு. கி. லக்ஷ்மணன், திரு. நடராஜா சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்தவர் என்பதைக் குறிப்பிட்டு விட்டு அவரின் திறமைகளையும் அருமையான குணத்தையும் பாராட்டிப் பேசும் போது பிரிவுபசார விருந்துகள் நடத்துவதன் உண்மை நோக்கம் என்ன என்பதையும் சொன்னார்.

வெளி நாடுகளுக்குச் செல்பவர்களுக்கு தாம் மேற்கொண்டுள்ள பணியைச் செம்மையாகச் செய்து திரும்புவதற்கு தார்மீக ஆதரவு (Moral Support) மிகவும் பயன்படும். பிரிவுபசார விருந்துகள் பிரிந்து செல்பவருக்கு தார்மீக ஆதரவை அளிக்க உதவும் என்று தாம் நம்புவதாகத் திரு. லக்ஷ்மணன் கூறினார்.

பாராட்டு

பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. க. கைலாசபதி, திருமதி. ஜோசப் ஆகியோரும் திரு. நடராஜா ஒரு சிறந்த கவிஞர், எழுத்தாளர், நாடகாசிரியர் என்றும் குணக்குன்று என்றும் வியந்து புகழ்ந்து பேசினார்கள்.

வித்துவான் எப். எக்ஸ். ஸி. நடராஜா பேசுகையில், திரு. கே. எஸ். நடராஜா விவாகம் செய்துகொள்ளுமுன்னர், துடிக்கும் தனி இளைஞனுக இருந்த போது நடத்திய மணவினை முனைப்புகளிலெல்லாம் தாம் பாங்கனுக நின்று உழைத்தார் என்ற அந்தரங்கங்களை அவிழ்த்து விட்டுத் திரு. நடராஜா தமது ஆப்த நண்பன் என்று உரிமை பாராட்டினார்.

நடராஜா மறுப்பு

கடைசியில் திரு. நடராஜா பதிலளிக்கும் போது தமக்கு ஆப்த நண்பன் என்று எவரும் இல்லை என்றும் அதே வேளையில் யாரும் பகைவரும் கிடையாது என்றும் உரிமை கொண்டாடியவரின் வாயில் ஆப்பு அறைந்தாற் போலக் கூறினார். தமிழ் இலக்கிய மரபுக்கிணையத் தமது மணவினை முனைப்பு நடைபெற்றது என்றும் அதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை என்றும் சொன்னார்.

கூடியிருந்தவர்கள் பேசியதெல்லாம் தமக்கு "வானொலி நேயர் கடித நிகழ்ச்சி போல இருந்ததாகத் திரு. நடராஜா கூறினார். ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் அவர் பேசியதெல்லாம் மேலான நகைச் சுவையோடு கலந்து வந்ததால் திரு. லக்ஷ்மணன் அளித்த பக்ஷணங்கள் போல இனித்தன; சுவைத்தன. இனியவருடைய விருந்து புளிக்கவா செய்யும்? நரிக்கு வேண்டுமானல் திராட்சை கூடப் புளிக்கலாம்!

---

## தமிழரசு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத் தில் உள்ள அரசாங்க ஊழியர்களில் யார் யார் தமிழரசுக் கட்சியோடு தொடர்பும் அனுதாபமும் உடையவர்கள் என்பது பற்றிய துப்பறியும் வேலை இரகசியமாக நடைபெற்று வருகிறதாம். அத்தகையவர்களின் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருப்பதாயும் தெரிகிறது.

சந்தேகத்துக்கு இடமானவர்கள் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே இடமாற்றம் செய்யப்படவிருக்கிறார்கள். இத்திட்டத்தின் கீழ் அணிமையில் சிலர் சிங்களப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனரெனவும் அறியப்படுகிறது.

---


சுதந்திரன் இல்லையேல் சுபீட்சமில்லை

USE K. D. K. FANS



அல்லிக் குளத் தருகில் வீசும் தென்றற் காற்றை உங்கள் வீடுகளிலோ, காரியாலயங்களிலோ, அறைகளிலோ பெற்று சுவாத்தியம் பெற வேண்டுமெனில் உலகப் பிரசித்தி பெற்ற

கே. டி. கே.

மின்சார விசிறிகளைப் பாவியுங்கள்

★ உறுதிப்பாடு ★ நீடித்த பாவனை
★ திறமையான சேவை

இவைகளுக்குக் கே. டி. கே. மின்சார விசிறிகள் உத்தரவாதம் பெற்றுள்ளன.

மேசை, கூரைப் பலகை, அடித்தம்பமுடைய மின்சார கே. டி. கே விசிறிகள் விதம் விதமான அளவுகளிலும், கண்கவர் வர்ணங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். விலை போட்டா போட்டி.

இலங்கையில் சோல் ஏஜண்டுகள்

துரை அருள் & கோ லிமிட்.,

93, கெய்ஸர் வீதி, கொழும்பு — 11.

போன்: 4588


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தி வெறியருக்கு வெற்றி

## பார்லிமென்டரி கமிட்டியின் ஆட்சி மொழி பற்றிய அறிக்கை

## நேருவின் உறுதி பறந்தது
### சென்னை அரசாங்கம் அலமந்தது

சென்னை, ஏப். 29—

நீறுபூத்த நெருப்பாகச் சிறிது காலமாக இருந்து வந்தது மொழித் தகராறு. அதைக் கிண்டிக் கிளறி அனலைக் கிளப்பியிருக்கிறது பார்லிமென்டரிக் கமிட்டி! இந்தி பேசும் நான்கு இராச்சியங்கள் தவிர்ந்த ஏனையவற்றில் மக்கள் சக்தி மலையாக வளர்கிறது. மத்திய அரசாங்கத்தின் மந்த புத்திக்கும் நெஞ்சழுத்தமான செய்கைக்கும் முற்றுப்புள்ளி வைக்க.

### சிபார்சு

1965ம் ஆண்டில் இந்தி ஆட்சி மொழியாகிவிட வேண்டும் என்று இந்திய அரசியல் சட்டத்தில் உள்ளதைப் பார்லிமென்டரிக் கமிட்டி ஆம் ஒதியிருப்பதுடன் மேற்படி மாற்றம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாகவே தொடங்கிவிட வேண்டும் என்றும் சிபார்சு செய்திருக்கிறது.

இந்தி வெறியர்களுக்கு இது இனிய செய்தி, ஏன், வெற்றியும்கூட. ஆட்சி மொழிக் கமிஷனுக்கும் தித்திக்கும் செய்தி. தமது எண்ணம் ஈடேறுகிறதே என்ற எக்களிப்பு அவர்களுக்கு ஏற்படும். ஆனால் மொத்தத்தில் நாட்டுக்கு......?

### பிராங் அந்தோனி ஆட்சேபனை

இந்தியால் இலாபம் இல்லை இந்தியாவுக்கு. பலரும் பலதடவைகளில் இதை விளக்கிவிட்டார்கள். ஆனால் பார்லிமென்டரிக் கமிட்டி விளக்கத்தையெல்லாம் கேட்க விரும்பவில்லை. நாட்டு நலனில் அக்கறை இருந்தால் அல்லவா அந்தக்

சுதந்திரன் சென்னை நிருபர்
ஈழத்தரசன்

கவலை. பெரும்பாலும் காங்கிரஸாரைக்கொண்ட கமிட்டியில் அதை எதிர்பார்ப்பது விவேகமில்லைதான். நல்லது செய்ய நாட்டமில்லையென்றால் அல்லது செய்யாமலாவது இருக்கக்கூடாதா?

பார்லிமென்டரிக் கமிட்டியில் ஒரு மெம்பரான திரு பிராங் அந்தோனி என்பவர் கமிட்டியின் சிபார்சை தாம் ஏற்றுக்கொள்ள முடியாத பட்சத்தில் வழங்கிய ஆட்சேபக் குறிப்பில் கமிட்டி எப்படித் தான்தோன்றித்தனமாகவும் ஏனோதானோ என்ற மனப்பான்மையிலும் நடந்துகொண்டதைத் துணிந்து சுட்டிக்காட்டியிருக்கிறார்.

### நேருவின் உறுதி

கமிட்டியின் சிபார்சு அப்படியே ஏற்றுக்கொள்ளப்படும் என்று நம்பலாம். ஆயின் இந்திய மக்களைவிட அதிகக் கவலைக்கு உள்ளாக வேண்டியவர் இந்திய நாட்டின் முதல் பிரஜையான பிரதமர் நேரு ஆவார். 1965ம் ஆண்டோடு இந்தி ஆட்சி மொழியாகிவிட வேண்டும் என்று அரசியல் சட்டத்தில் உள்ள கெடுவை மாற்றலாம் என்று கௌஹாத்தி மாநாட்டில் அவர் உறுதி அளித்தார். கமிட்டியின் சிபார்ஸால் உறுதி பறந்தது. நேரு அதுபற்றிக் கவலைப்பட்டதாகத் தகவலே இல்லை. அது அவருடைய அரசியல் பெருமை!

### கெடுதல்

இந்தி ஆட்சி மொழியாவதை எதிர்ப்பவர்கள் முக்கியமாக மூன்று காரணங்களுக்காக எதிர்க்கிறார்கள்.

1. இந்தி வளம் அற்ற மொழி; வளர்ச்சி அடையாதது. ஆட்சி மொழியாவதற்கு உரிய தகுதி அதற்கு இப்போது இல்லை.

2. இந்திய நாட்டிலே இந்தி பேசுவோரைக்காட்டிலும் இந்தி பேசாதோரே அநேகர். 4 இராச்சியத்தினருடைய மொழியை மொத்தமுள்ள 14 இராச்சியத்தினர் மீது திணிப்பது கொடுமை; ஜனநாயக விரோதமான செய்கை. எல்லாவகைகளிலும், இந்தியைத் தாய்மொழியாகக்கொண்டவர்கள் மற்றவர்களை முந்திவிடுவார்கள். குறிப்பாக அரசாங்க உத்தியோகங்கள் யாவும் இந்தியைத் தாய்மொழியாகக்கொண்டோருக்கே கிடைக்கும். இப்போது உத்தியோகத்தில் இருக்கும் இந்தி பேசாத மக்களுக்கும் ஆபத்து வரும்.

3. நாட்டு நிர்வாகம் சீர்கெடும். சிக்கல்கள் முளைத்து எழும். ஆங்கிலத்தின் இடத்தில் இப்போது [illegible]

([illegible]-ம் பக்கம் பார்க்க)

## தி. மு. க. மேயர் உதவி மேயர்

சென்னை கார்ப்பரேஷன் மேயராக தி. மு. கழக உறுப்பினர் திரு ஏ. பி. அரசு தெரிவுசெய்யப்பட்டார். 34 வயது நிரம்பிய இளைஞர் இவர். நரசிங்கபுர வட்டார (70) மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் திரு. அரசு.

கார்ப்பரேஷனில் உதவி மேயராகவும் தி. மு. கழக உறுப்பினரே தெரிவு செய்யப்பட்டார். 54-வது வட்டார உறுப்பினர் திரு. சிவசங்கரன் தம்மோடு போட்டியிட்ட சுயேச்சை உறுப்பினர் திரு. வி. கிருஷ்ணனை 4 வாக்குகளால் தோற்கடித்து உதவி மேயர் பதவியைக் கைப்பற்றினார்.

## சென்னைக்கடிதம்

## மக்கள் குரல்

### நெஞ்சு பொறுக்குதில்லை!

யாழ் நகரில் உள்ள தியேட்டர்களின் அவல நிலைமையை நோக்கினால் நெஞ்சு கொதிக்கிறது. அவை தியேட்டர்களாகவின்றி மாட்டு கொட்டில்களாகவே இயங்குகின்றன.

போதிய காற்றோட்ட வசதியில்லை. ஆசனங்களில் அமருவோர் தொகை கட்டுப்படுத்தப்படாததால் சன நெருக்கடி கூடி புகைத்தல், எச்சில் துப்பல் முதலியனபோன்ற தீய வழக்கங்களால் வயிறு குமட்டல் எடுக்கிறது. தமிழ் நாட்டைப் பின்பற்றி இந்தக் கொடுமைகளுக்கு இங்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கக் காலம் இன்னும் வரவில்லையா?

—என். டி செல்வம், மணியம், வண்ணார்பண்ணை.

### அது ஒன்றும் பிரமாதமில்லை!

கடந்த 12-4-59 சுதந்திரன் இதழில் "விடுமுறை வாரண்டில் இலவசமாகப் போனவர் கூலியாகப் பணம் கொடுத்து வந்தார்" என்ற தலைப்பில் வெளியான செய்தியைப் படித்த நான் ஆச்சரியப்படவில்லை. என்னைப் பொறுத்தவரை அது ஒன்றும் பிரமாதமில்லை.

கடந்த 7-4-59-ல் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்வதற்காகப் புகையிரத வாரண்டுடன் சென்ற என்னையும் யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் அன்று கடமையாற்றிய இலிகிதர் சிங்களத்தில் எழுதப்பட்ட 'வாரண்டை'த் தன்னால் படிக்க முடியவில்லையென்று பிரயாணச் சீட்டுத் தர மறுத்துவிட்டார்.

நல்ல வேளையாக அன்று ஏறக்குறைய ¾ மணித்தியாலம் தாமதமாகப் புகைவண்டி வரும் என்று ஏற்கனவே தெரிந்திருந்தபடியால், யான் சிங்களத்தில் எழுதப்பட்ட அந்த வாரண்டில் தமிழில் மொழிபெயர்த்து எழுதிக்கொடுத்துப் பிரயாணச் சீட்டைப் பெற முடிந்தது.

—கு. த. மூர்த்தி
மண்டூர்

### கிராமத்தில் உள்ள குறைபாடுகள்

மூத்தெடுத்தான் ஊராகிய மூதூரின் கிராமங்களில் ஒன்றாகிய மல்லிகைத்தீவிலே ஐந்நூறுக்கதிகமான மக்கள் வசிக்கின்றனர். அவர்கள் அடையும் இன்னல்களோ அநேகம்.

1. வைத்தியசாலை இல்லை. மருந்து எடுக்க வேண்டுமாகில் சுமார் 7 மைலுக்கப்பாலிருக்கும் மூதூருக்குச் செல்ல வேண்டும்.

2. செல்வதற்குச் சீரான பாதையில்லை. கர்ப்பஸ்திரீகளை, பிரசவத்தின் பொருட்டு கொண்டு செல்ல

(13-ம் பக்கம் பார்க்க)

## நமக்குத் தொழில் கவிதை

### கன்னத்தை என்பக்கம்காட்டு!

நாட்டின் நலம்காத்து நற்றமிழின் மாண்பேற்ற
வீட்டுக்கோர்வீரர் விரைகின்றார்;—கேட்டிடுவாய்,
பொன்கொடியே, போராடப் போகிறேன்; நீவிடைதா,
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—கொடித்தீவான், கரடியன் ஆறு

தந்திதபால் சேவையினை தாறுமாறாய் ஆக்கிடத்தான்
மந்திரியாய் குந்தினையோ, மானமிலா—தொந்தியனே?
அன்னமுண்ணும் கையால் அணைத்தல் தகுமுனக்கே;
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—செ. கதிர்காமநாதன், மிருசுவில்

வண்டிசைபாட, வரித்தவளை கொட்டடிப்பக்,
கண்டு மயிலுங் களியாட,—தண்டலையில்
அன்னமென நின்றசைகின்ற பூங்கொடியே,
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—சி. சின்னையா, தம்பான்வரணி

காதல்தருமமுதக் கண்மணியே, உன்னழகுச்
சீதமதிமுகத்தில் தேனுண்பேன்;—கோதகன்ற
இன்பக்குயிலே, இனிய நறுந்தேன் சுரக்கும்
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—சி. பொன்னுத்தம்பி, புன்னைக்குடா

தாரடித்தார், ஊர்பறித்தார், தாய்உரிமைதான் பறித்துச்
சீரழித்தார், கற்பைச் சிதறடித்தார்,—பார்திகைக்க!
அன்னை தமிழணங்கே, ஆகுலித்து நீருகுத்த
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—டானியல் றேச், மன்னார்

பேச்செல்லாம் மாலையிலே பேசிடலாம்; இப்போது
கூச்சப்படாதே, என் கூற்றைக்கேள்;—மூச்சுவிடா
தெண்ணிப்பதிப்போம், இருநூறு முத்தங்கள்;
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—சோ. இராசேந்திரம், ஈச்சந்தீவு

மாமன் மகளே, மதுரசமே, மாமயிலே,
காமன் கணையாற் கருத்திழந்தேன்;—தாமதமென்?
அன்னத்தை யொத்த அணிநடையாய், ஆற்றேனுன்
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—நாக. பரமசாமி, அரியாலை

முத்தந்தரவில்லை என்றாஓர் மூலையிற்போய்
சித்தந்தளர் வுற்றாய், என்தேனே?—அத்தானை
என்னென்றோ எண்ணிவிட்டாய்? எங்கே உனதினிய
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—தாமரைத்தீவான், சந்தவெளி

தென்னமரத் தோப்பினிலே தேன்மதியைப் பார்த்தபடி
அன்னநடைபோடுகின்ற ஆரணங்கே,—உன்நினைவால்
தன்னந் தனியத் தவித்து நின்றேங்குகிறேன்;
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—க. வே. கதிர்காமவேல், வதிரி

செய்ய திருவதனத் தேமலரே, வாசமிகு
மொய்குழலிற் கார்வண்டு மோதுவதேன்?—மையல்தரும்
எண்ணத்தையூட்டிவிடும் ஏந்திழையே, கொஞ்சுதமிழ்க்
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—பாலகுரு சின்னச்சாமி, மட்டுநகர்

செந்தேனும் முக்கனியும் திங்கரும்பும் வேண்டாம்,நம்
பைந்தமிழின் தேமதுரப் பாவேண்டாம்;—சுந்தரஞ்சேர்
அன்னத்தை வென்றநடை ஆரமிழ்தே, யுன்னுடைய
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—அ. குமரப்பன், பதுளை

அத்தானென்றே யழைத்தாய்; அம்மொழியில் நான்மயங்கிப்
பித்தானேன், வந்தாலேன் பேசுகிலை?—கொத்துதடி
மின்னொத்த உன்முறுவல் மேனியெலாந் தான்நுழைந்து!
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—இ. சிவலிங்கம், உடுவில்

பின்னற் சடையிற் பிறந்த பெருநோய்க்குன்
கன்னம் மருந்தான கண்ணடி!—உன்நினைவால்
எண்ணத்தை விட்டேன் இனியிருக்கேன், வாழ்வளிப்பாய்;
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—அப்பா சிவம், அரியாலை

ஆயிரம் நாள் உன்னை அடையத்தவமிருந்தேன்;
போயிருந்தங் கென்ன புரிகின்றாய்?—வாயினால்
என்னத்தைச் சொல்ல? எழுந்தருகில் வாகண்ணே!
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—ச. தவராசா, ஈச்சந்தீவு

கன்னத்தொடு கன்னம் வைத்துக் கலந்தாட
கன்னி உனக்காகக் காத்திருப்பேன்—கண்ணேகை!
அன்னநடைவிட்டருகினிலே ஓடிவந்து
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—கு. சுப்பிரமணியம், திருகோணமலை

அன்னநடையாளே, ஆரணங்கே, பெண்மயிலே
கன்னற் தமிழ்ச் சுவையே, கற்கண்டே,—இன்னுமேன்
வண்ணக் கிளிமொழியே, வாய்ப்பேச்சு? நீவிரைந்து
கன்னத்தை என்பக்கம் காட்டு!

—கோவை மகேசன், கோப்பாய்

முன்னமே செய்தபிழை முற்றும் மறந்துவிட
இன்னும் மனமிணங்க வில்லையோ?—மின்னிறத்தாய்,
அன்னம் பழித்தநடை ஆருயிரே, செங்கமலக்
கன்னத்தை என்பக்கம் காட்டு!

திருமதி. ந. வீரேசன், மூதூர்

(தொகுத்தவர் : கவிஞர் "மகாகவி")

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண அழைப்பு

தேவன்—மணி:

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் இளையப்பா மகாதேவா (தேவன்-யாழ்ப்பாணம்) அவர்களுக்கும், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை பரமேஸ்வரி ராஜா (மணி) அவர்களுக்கும் ஊரெழு கிழக்கில் உள்ள "ராஜஸ்தானில்" வருகிற சனிக்கிழமை 9—5—59 இரவு 11 மணியளவில் திருமணம் நடைபெறும்.

நண்பர், உறவினர் யாவரும் வருக.

ஸ்ரீமதி இளையப்பா, கேதீஸ்வரநாதன்
(பரமேஸ்வராக் கல்லூரி)
தர்மலிங்கம் (யாழ்ப்பாணம் நீர்ப்பாசன இலாகா)
ஸ்ரீமதி கமலா ஆறுமுகம் தம்பி
(வைத்தீஸ்வர வித்தியாலயம்)
ஸ்ரீமதி லோகா கனகேஸ் (களத்து வா வா)

"ராஜேஸ்வரி பவனம்",
பரமேஸ்வராக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.



## உங்கள் தேவை என்ன?

★ இரும்பு, ★ சிமெந்து,
★ ஆணிகள், ★ மெஷின்கள்,
★ கட்டடச் சாமான்கள்.

நம்பிக்கையான பொருட்கள் விலை சகாயமாகக் கிடைக்குமானல் யார்தான் விரும்பமாட்டார்கள்? உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய இன்றே விஜயம் செய்யுங்கள்.

## கதிர் ஹாட்வேயர்ஸ்

"மொம்சாக் கட்டடம்"
11/1 ஸ்டான்லி ரேட்,
யாழ்ப்பாணம்.



## மொரிஸன் பம்புகள்



நெருக்கிப் பொருத்திய விவசாயத்திற்குரிய பம்புகள் மண்ணெண்ணெயால் தாமே இயங்கவும், நீடித்த பாவனைக்கும் உத்தரவாதமுள்ளவை.

1½, 2, 2½ அங்குல அளவுகளில் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

கே. என். அப்துல் காதர் ராவுத்தர்
அன் கம்பெனி லிமிட்டெட்,
312, ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு, கொழும்பு-10.
டெலிபோன்: 2956. தந்தி: MEDAL.

வடமாகாண விநியோகஸ்தர்கள்:

ராஜா ஸ்டோர்ஸ், 9/B, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.


# தடுப்புக் காவலில்
## மூன்று மாதங்கள்

(15)

**நாம்** யாரும் நினைக்காத நேரத்தில் திரு. வன்னியசிங்கம் எம் முன் தோன்றினார். ஆமாம் 1956 ஜூன் 13-ல் தான். பயமும், பீதியும், அச்சமும் மக்கள் மனதில் ஊசலாடிக் கொண்டிருந்தது அந்த நாட்களில். கால்பேஸ் மைதானத்தில் வெறியர்கள் நடத்திய காடைத் தனத்தின் எதிரொலியாக கல்லோயா பள்ளத்தாக்கு ஒரு ரணகளமாக காட்சியளித்தது. கல்லோயா அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான வாகனங்கள், பெற்றோல், ஆயுதங்கள் யாவும் காடையர்களால் தமது சொந்தப் பொருட்களைப் போன்று பாவிக்கப்பட்டன; அப்பாவித் தமிழ் மக்களை அழித்து ஒழிக்கப் பயன்படுத்தப்பட்டன.

### பறந்தோடி வந்தார்

காலிமுகக் கடற்கரையில் ஜூன் 5-ந் திகதி காடையர்கள் காட்டிய கை வரிசையின் 'நோவு' அடங்கு முன், மட்டக்களப்பு மக்களின் பரிதாப நிலையை பார்த்து ஆறுதலும் தேறுதலும் சொல்ல பறந்தோடிவந்தார் திரு. வன்னியசிங்கம். வந்ததும் வராததுமாக உடனடியாக கல்லோயா பள்ளத்தாக்கு பகுதிக்குச் செல்ல வேண்டுமென்று துடியாகத் துடித்தார். கல்லோயாப் பகுதிக்குப் போக வாருங்கள் என்று வாடகைக் கார்ச் சாரதிகளைக் கேட்டால் அவர்கள் ஒருவரும் சம்மதம் தெரிவிப்பதாயில்லை. கடைசியில் நாவற்குடா கிராமத்தைச் சேர்ந்த திரு. திருச்செல்வம் என்பவரின் காரை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, அதுவும் கல்முனைக்கு போவதாகப் பொய் சொல்லிவிட்டுத்தான் திரு. வன்னியசிங்கத்தை அழைத்துக் கொண்டு சென்றோம்.

### கண்டதும் கேட்டதும்

கல்முனைக்குப் போனதும் மெதுவாக கல்லோயாப் பகுதிக்கு செல்லவேண்டுமென்று உண்மையைக் கூறியதும் திரு. திருச்செல்வம் துருதுருவென்று விழித்தார். முதலில மறுத்தாலும் எங்களுடைய வேண்டுகோளை புறக்கணிக்க முடியாது ஒப்புக் கொண்டார். கல்முனையிலிருந்து எங்கள்கார்கல்லோயா பள்ளத்தாக்கை நோக்கிப் பறந்தது. நேராக கல்லோயா பொலீஸ் நிலையத்தில் காரை நிறுத்தினேம். கண்ணில்பட்ட கோரக் காட்சிகளையும், காதுகளில் விழுந்த கொடூரச் செய்திகளையும் என்றுமே மறக்க முடியாது.

### இரண்டே இரண்டு பேர்!

நாங்கள் கல்லோயா பள்ளத்தாக்கில் சென்று காலடி வைத்த சமயத்தில் அங்கிருந்த தமிழர்கள் இரண்டே இரண்டுபேர்தான். ஒருவர் உதவிப் பொலீஸ் சுப்பிரின்டென்டென்ட் இராமநாதன். அடுத்தவர் ஒரு பொலீஸ் சார்ஜண்ட். இவர்கள் இருவரையும் தவிர வேறு ஒரு தமிழரும் அங்கில்லையென்பதை அறிந்தோம். நாங்கள் காரிலிருந்து இறங்கி பொலீஸ் ஸ்டேசனுக்குள் நுழையும்வரை அங்கிருந்த [illegible] ருந்தார்கள்.

### கேள்வியும் பதிலும்

எங்களை, நாங்கள் அறிமுகம் செய்ததும் நாங்கள் வந்த செய்தி டெலிபோன் மூலம் மேலதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. ஒரு சில நிமிடங்களுக்குள் புழுதிப்படலத்தைக் கிளப்பிக் கொண்டு ஒரு ஜீப் பறந்து வந்தது. அந்த ஜீப் வண்டியிலிருந்து அவசரகால அழைப்பின் பேரில் கல்லோயாப் பகுதிக்கு அமர்த்தப்பட்ட பொலீஸ் சுப்பிரின்டென்டென்ட்களில் ஒருவரான திரு. ஜில்வா இறங்கினர். அவருடைய முகத்தில் கவலையும், களிப்பும் கலந்து தோன்றின.

"பொலீஸ் பாதுகாப்பு இல்லாமல் நீங்கள் இங்கு வந்திருக்கக்கூடாது. எனக்கு முன் கூட்டியே அறிவித்திருந்தால் நான் கல்முனையிலிருந்து உங்களுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கியிருப்பேன்" என்று திரு. ஜில்வா சொன்னர். "தமிழ் நாட்டில் நடமாடுவதற்கு பொலீஸ் பாதுகாப்பு ஏன்?" என்று உடனே திரு. வன்னியசிங்கம் பதிலுக்குக் கூறினர்.

மட்டக்களப்பு எம். பி.
திரு. செ. இராசதுரை

### தெருக்களின் கோலம்

"காடையர்களால் தாக்கப்பட்ட கல்லோயாப் பள்ளத்தாக்குப் பகுதிகளைப் பார்க்க வேண்டும். ஏற்பாடு செய்து கொடுங்கள்" என்று கேட்டோம். சிரித்தபடி திரு ஜில்லா 'ஜீப்' வண்டிகளை ஏற்பாடு செய்தார். எங்கள் இருவரையும் ஒரு வண்டியில் ஏற்றி தாமே வண்டியையும் செலுத்தத் தொடங்கினர். ஏறக்குறைய நான்கு மணித்தியாலங்களுக்கு மேல் பள்ளத்தாக்குப் பகுதியில் பல இடங்களையும் பார்வையிட்டோம்.

பல தெருக்கள் வெட்டிச் சாய்க்கப்பட்ட பெரு மரங்களால்அடைக்கப்பட்டுஇருந்தன. தம் கிராமங்களையும், சொத்துக்களையும் காப்பாற்றுவதற்கு மக்கள் மரங்களை வெட்டிச் சாய்த்து பாதுகாப்பு தேடியிருந்தார்கள்.

### பொறிப் பாலம்

ஒரு சிறிய பாலத்திற்கு வந்ததும் திரு ஜில்லா உரத்துச் சிரித்துக்கொண்டிருந்தார். அப் பாலத்திற்குள் அவர் ஜீப்வண்டியோடுஇரண்டொரு தினங்களுக்குமுன் விழுந்தாராம். உடம்பிற்கு நல்ல அடி. கை விரல்களில் கட்டுப்போட்டிருந்தார்.

பாலத்தின் பலகைகளை அப்புறப்படுத்திவிட்டு கம்புகளையும் மரக்கிளைகளையும் கொண்டு 'பொறிப் பாலம்' செய்து வைத்திருந்தார்கள் அப்பகுதித் தமிழ் மக்கள். காடையர்களுக்கென்று செய்து வைக்கப்பட்ட பொறிப் பாலத்தில் திரு ஜில்லாவும் சில பொலீஸ் காரர்களும் ஜீப் வண்டியும் விழுந்ததுதான் மிச்சம்.

ஃ ஃ ஃ

### மகிழ்ச்சி தரும் செய்தி

அறைக் கதவு திறந்தது. வழக்கமான சிரிப்புடன் உதவிப் பொலீஸ் சுப்பிரின்டென்டென்ட்சந்திரசேகரா நுழைந்தார். அத்தோடு சந்தோஷப்படக்கூடிய ஒரு செய்தியையும் சொன்னர்.

"உங்கள் உடுப்புக்களையெல்லாம் மடித்து அடுக்கிக் கொண்டு புறப்படுவதற்கு ஆயத்தமாகுங்கள்" என்றார்.

"உங்களை இங்கிருந்து அழைத்துக்கொண்டு போகப் போகின்றேம்" என்று அவர் மேலும் கூறியதும் ஊர் எண்ணமே எழுந்தது. ஒருசில நிமிடங்களுக்குள் நான் வெளிக்கிளம்ப ஆயத்தமாகிவிட்டேன். என்னை அழைத்துக் கொண்டுபோக பலபொலீஸ் அதிகாரிகள் வந்திருந்தார்கள். அவர்கள் குசலம் விசாரித்தபடி வந்தார்கள். ஹோட்டலின் முன் நின்ற பொலீஸ் வண்டியில் ஏறுமாறு பணித்தார்கள். நான் ஏறி அமர்ந்தேன்.

### வண்டியில் ஒன்றுகூடினேம்

அடுத்து சில நிமிடங்களுக்குப்பின் திரு அமிர்தலிங்கத்தைச் சில பொலீஸ்காரர்கள் அழைத்து வந்தார்கள். முதன் முதலாக ஒரு அறிந்த முகத்தை, அதிலும் அருமை நண்பர் அமிர்தலிங்கத்தைக் கண்டதில் பெரு மகிழ்ச்சி தோன்றியது. திரு அமிர்தலிங்கத்தை என்னை ஏற்றிய அதே வண்டியில் ஏற்றினர்கள். முகச் சவரம் செய்து கொள்ளாததால் முகமெல்லாம் ரோமம் வளர்ந்திருந்தது "ஓ நீங்கள் கூட சவரம் செய்யவில்லையோ?" என்று நண்பர் அமிர்தலிங்கம் கேட்டார். தொடர்ந்து திருவாளர்கள் இராஜவரோதயம் எம். பி., வன்னியசிங்கம் எம்.பி.,நவரத்தினம் எம்.பி., செனட்டர் நல்லையா ஆகியோரையும் ஒவ்வொருவராக அவ்வண்டியில் கொண்டுவந்து ஏற்றினர்கள்.

### புறப்பாடு

பொலீஸ் சுப்பிரின்டென்டென்ட் எங்களை அணுகி "வண்டியின் பின்புறக் கதவுகளை பூட்டி விடட்டுமா?" என்று கேட்டார்.

"உங்கள் அரசாங்கம் உங்களுக்கு கொடுத்த கட்டளையை நிறைவேற்றுங்கள். அடைத்துக் கொண்டு போகச் சொன்னல் அடைத்துக்கொண்டு போங்கள். இல்லையென்றல் சும்மா கொண்டு செல்லுங்கள். எங்களிடம் எதற்காகக் கேட்கிறீர்கள்?" என்று பளிச் சென்று பதிலளித்தார் திரு வன்னியசிங்கம். பொலீஸ் வண்டியின் கதவுகள் பூட்டப்பட்டன. வண்டி புறப்பட்டது.

(தொடரும்)

### அறியத் தருக.

இணுவில் தபால் கந்தோரில் ரூபாய் 15/- க்கு 853845 நீர் மணியாடர் எடுத்து அதை எமக்கு அனுப்பும்போது யாரால், எதற்காக இப் பணம் அனுப்பப்பட்டது என்பதை தெரிவிக்கவில்லை. இப்பணம் யாரால், எதற்காக அனுப்பப்பட்டது என்பதை எமக்கு அறியத் தரவேண்டுமாய் அனுப்பியவரை மிக அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறேம்.

மானேஜர்,
சுதந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைலாசம் கண்டேன்



16

### கைலைக் காட்சி

கைலைப் பெருமானின் திவ்ய திருமேனியைத் தரிசிக்கும் பெரும் பேற்றைப் பெற்று விட்டோம். திபெத்தின் மேற்கு எல்லையிலே இமயத்தின் வடக்கே பொலிந்து விளங்கி, அருளாரமுதத்தை அன்பர்களுக்கு வாரி வழங்க உமையொருபாகன் எழுந்தருளியிருப்பதைக் கண்டோம். 32 மைல் சுற்றளவுள்ள கைலைப் பரிக்கிரம வீதியிலே எம் பெருமானைத் தரிசித்துப் பேரானந்தப் பெரு வெள்ளத்திற் நீராடித்த வாறே மூன்று நாட்கள் பிரதக்ஷிணம் செய்யும் போது, சுமார் 1,700 அடி தொடக்கம் 1,900 அடி வரை அமைந்த பல ஏற்ற இறக்கங்களைக் கடந்தாக வேண்டும். பக்தியும், வைராக்கியமும் இருப்பின் எவ்வித கஷ்டமும் தோன்றாது.

மத்தியான நேரமாய் விட்டதால், அன்று எமது நடையை நிறுத்திக் கர்லப் நதிக் கரையில் தங்கினோம். மறு நாட்காலை பிரதக்ஷிணத்தை ஆரம்பித்தோம். சற்றுத் தூரத்தில் தெற்குத் திசையில், மாந்தாதாமலை தெரிந்தது.

### மாந்தாதா மலை

முன்னொருபோது மாந்தாதா மன்னன் மாநிலம் ஆட்சி முடித்து, துறவை மேற்கொண்டு, முனிவராகி, தவம் புரிய இமயத்தை அடைந்தான். அம் முனிவர் தவத்தின் மகிமையை இன்றும் அம்மலை எம்மனோர்க்கு நினைவுறுத்தி நிற்கிறது. நாம் மாந்தாதா மலைக்கு அதிக தூரத்தில் நின்ற போதும் மாலை வேளையில் அம்மலையின் காட்சி மிக அழகியதாயிருந்தது. அம்மலையின் எழிலுக்குத் தான் இளைத்துவிடவில்லை என்பது போல இராட்சத தடாகமும் காட்சியளித்தது.

### இறைவன் அன்புத் திறன்

அன்றிரவு கர்லப் நதிக் கரையிற் தங்கி மறு நாட்காலை எட்டு மணிக்கு அன்பெனும் மலரை ஏந்தி, உறுதி பெற்ற உள்ளத்தோடு, கைலைநாதனை வணங்கப் புறப்பட்டோம். கைலையம் பெருமானைத் தரிசித்து அருள் பெற்ற திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டவத்தைப் பாடித் துதித்துக்கொண்டே நடக்கலானோம்.

எம் பெருமான் புகழ் பாடித் துதிக்க, ஆ ஹா, புதிய தோர் உணர்ச்சி அகத்தும் புறத்தும் நிறைந்தது. ஐந்து பேரறிவும் கண்களேயாக அளப்பருங் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக எம் பெருமான் எழிலுருவைப் பன்னெடுங்காலம் அள்ளிப் பருகினும் அது தெவிட்டாத தெள்ளமுதம். மனம் இயற்கையாகவே சிரமம் எதுவும் இன்றி உயர் நிலைக்கு உந்தப் பட்டது. அன்பற்ற உள்ளமும் அருள் நாட்டமில்லா வாழ்க்கையும் உடையவர்களாயிருப்பினும் கைலையைத் தரிசித்தும் இறைவன் அன்புத் திறனைத் தாமே உணர்வர். மெய்மறந்து இன்புற்ற நாம், மேலும் அருட்பாடல்களை ஓதிக் கொண்டே நடந்தோம்.

### எல்லாம் இயற்கை அமைப்பு

காலைக் கதிரவன் ஒளியில் கைலை வெள்ளி மயமாகக் காட்சி தரும். கைலையை வெள்ளியங்கிரி என்று புராணம் கூறுவது புனைந்துரையல்ல வென்பதை நேரிற் காண்பாரே உணர்வர். தெய்வீக சாந்நித்தியம் நிறைந்து, உள்ளத்தைக் கவரும் கொள்ளை வனப்பு வாய்ந்த கைலையை அமைத்த தெய்வீகச் சிற்பியின் திறமையை யாரே அறிய வல்லார்! கைபுனைந்தியற்றாக் கவின் பெறு வனப்பு வாய்ந்த கைலாசம், இயற்கையாகவே ஆலயம் போன்று அமைந்து விளங்குகின்றது. கோபுரங்கள், மண்டபங்கள், பிராகாரம், கர்ப்பக்கிரகம் அனைத்தும் இயற்கையிலேயே அமைந்துள்ள அழகினை நோக்க இறைவனுக்கிய இமயப் பெருங் கோவிலை நோக்கிய பின்பு தான் தென்னாட்டுக் கோவில்கள் தோன்றினவோ, என்ற எண்ணம் உதிக்கிறது.

### வேளைக்கொரு காட்சி

வேளைக்குவேளை விதம் விதமாகக் கைலைக் காட்சி தோன்றும். காலை இளங்கதிரிற் கனகமாய், வெய்யோன் ஒளியில் வெள்ளியாய், சென்னிற மாலை தன்னிறச் செம் பவளமாய்த் தோன்றும். உச்சியிற் தவழும் வெண் முகிற் கூட்டம் ஆகாய கங்கையாமெனக் காண்போர் கருத்தைத் தன் வயப் படுத்தும். இவையெல்லாம் சில நிமிடங்களிற் தோன்றி மறையும் காட்சிகள். அவனருளாலே, அவனருட் காட்சிகளைக் கண்டின்புற்றவாறே வழக்கமாக யாத்திரிகர்கள் தார்ச்சனிலிருந்து வரும் பிரதக்ஷிணப் பாதையை அடைந்து அவ் வழியே சென்றோம்.

### அருட்சோதி வழிபாடு

மணி பகல் 11 ஆகிவிட்டது. பகலவன் தனது ஆட்சியை மிக வேகமாகச் செலுத்திக்கொண்டிருந்தான். எனினும் பாதங்கள் வெப்பத்தால் வருந்தவில்லை. அடியார்களின் அடிநோகாதபடி எம்பெருமான் அருளால் நிறமலர்கள் நிறைந்த பசும் பூண்டுகள் படர்ந்திருக்கின்றன. அவற்றின்மீது நிதானமாக நடந்து "லண்டிக் கும்பாவை" அடைந்தோம். உள்ளே சென்றோம். எவ்வளவு அலங்காரமான கூடம்! அங்கே எழுந்தருளிய மூர்த்திகளைத் தரிசித்துத் தீபம் ஏற்றி வழிபட்டோம். மிகப் புராதனமான அம்[illegible]யத்தின் அழகைச் சுற்றிப் பார்த்தோம். என்ன ஆச்சரியம்! கைலைநாதன் காட்சியை எதிர்த் திசையிற் கண்டோம். எதிர்த் திசையில் கைலைக் காட்சி தெரியக் காரணமென்ன! சர்வ வியாபகராகிய இறைவன் அங்கிருந்த கண்ணுடிக்குள் காட்சி தந்தார். அண்டமெலாம் கடந்த இறைவன் அன்பர்கள் அகத்தில் அடக்கம்போல, வானுறவோங்கி விளங்கும் கைலையங்கிரி, அந்த ஆடியுள் அமைந்திருக்கும் காட்சி அற்புதம்! அற்புதம்! அன்பர்கள் தீபம் ஏற்றி ஆடியுள்ளிறைவனை அஞ்சலித்தனர். அவ்வருட் ஜோதி வழிபாட்டில் நாமும் கலந்து, போற்றித் துதித்தோம்.

### மனம் பூரித்தது

மேலும் புறப்பட்டோம். கைலை வீதியில் அமைந்துள்ள இரண்டாவது பௌத்த மடமாகிய "டேராபுக் கும்பாவை" அடைந்தோம். அன்று அந்த கும்பாவிற் தங்கினோம். மாலை நேரம் பலரும் ஆங்காங்கே ஓய்வெடுப்பாரும் தியானம்செய்வோருமாகப் பிரிந்து சென்றனர். நான் தனியிடம் நாடினேன். கைலைநாதன், அழகை கண்ணிமைக்காது அள்ளிப் பருக எண்ணினேன். அமைதியான சூழ்நிலையில் அசையாது இருந்தேன். ஜோதி மயமாகத் திகழ்ந்த மலைச் சிகரம் வேளைக்கொரு வருணமாகக் காட்சியளித்தது. பொன்னார் திருமேனியைக் காணக் காண மனம் பூரித்தேன். அவனுக்கே என் சிந்தனை சொந்தமாகியது.

### ஏமாற்றம்

எனதுள்ளம் கவர்ந்து நிற்கும் பெருமானின் எழிலுருவை யானுங் கவர்ந்து கொள்ள விரும்பிக் [illegible]ராவை (படக் கருவியை) கையில் எடுத்தேன். [illegible]ணின் பார்வையை காமராவுக்குட் செலுத்திப்பார்த்தேன்! என்ன அதிசயம் ஒரு தோற்றத்தையும் கண்டிலேன். தலையை நிமிர்த்தி மேலே பார்த்தேன். கைலைநாதன் ஜோதியுருவைக் கானேமே! "சற்று முன் கண்டது கனவா, நினைவா! அந்த முகிற்கூட்டங்கள் எழிலுருவை மறைத்தனவா! அன்றேல் இறைவனே மறைந்து கொண்டானோ!" அலகிலா விளையாட்டுடையான் செயலை அறிய வல்லார் யார்! அப்பனின் தரிசனத்திற்காகக் காத்திருந்தேன்.

### கண்டேன் அவர் திருத்தோற்றம்

நெடுநேரம் கழிந்தது. உளம் சோர்ந்தது. "கண்ணுதலான் காட்டாக்கால் காண்பார் யாரே" என்ற உண்மையை உணர்ந்தேன். பெருமானைக் காணப் பொறுமையுடன் இருந்தேன். இல்லை தரிசனம் பெற்றன்றி அவ்விடத்தை விட்டு நகர்வதில்லை என்று பிடிவாதம் செய்திருந்தேன். உடல் தேய உருண்டு சென்ற அப்பருக்கு அருள் தந்த அண்ணல் சிறியேனுக்கும் கருணை புரிந்தார். கண்டேன் அவர் திருத்தோற்றம். முதற் கண்ட திருமேனியை மீண்டும் கண்டேன். கைகூப்பி வணங்கிவிட்டு, மூன்றுமுறை படம் பிடித்தேன். மீண்டும் நமஸ்கரித்தேன். இருள் மெல்ல மெல்ல வந்து கொண்டிருந்தது. ஆங்காங்கே பிரிந்திருந்த அன்பர்களும் ஒன்று கூட ஆரம்பித்தனர். தனிமையுங் கலைந்தது.

(தொடரும்)

## மதப் போர்வை கிழியவேண்டும்

(சோமலிங்கம்)

கட்டவிழ்ந்து இதழ் விரித்த கஞ்சமென்ன
கலைமதியின் சுடரினிலே விம்மும் அல்லி
மொட்டு முலை குலையவில்லை ஆனால் அந்த
மொய்குழலை விதவை யென்று சாற்றிவிட்டார்;
பட்டு உடை துறந்துவிட்டாள் பொட்டழித்துப்
பறப்பதற்குச் சிறகிழந்த பறவையானாள்
'வெட்டை' வெளி போகாதே என்று வீணர்
வீட்டுக்குள் அடைத்துவைத்து வாட்டுகின்றார்.

கொடியாக அவளுடைய இடை நுடங்கும்
கொல்லுகின்ற கூர் விழிகள் மொழிகள்பேசும்
கடிமணத்தை வீசுகின்ற மலர்கள் தன்னைக்
கருங் கூந்தல் காணுமல் கலைந்து எங்கும்
படர் கொடியாய்ப் பலதிசையும் அடர்ந்துகாணப்
பாவையினை வீட்டுள்ளே அடைத்து விட்டார்
சுடர் விளக்கைக் குடத்தினுள்ளே தூக்கிவைத்து
சுகமாக மூடிவிட்டார்; புகைதான் கண்டார்!

சுருங்காத கன்னங்கள் பளிங்கு வில்லை
சுறுசுறுப்புச் சற்றேனும் குறையவில்லை
அருங்காதல் தணியவில்லை ஆனால் அந்த
அழகிதன்னை அடைத்துவைத்து
அணுவாய்க்கொல்லும்
பெருங்கேடு செய்கின்ற சமுகந்தன்னைப்
பெண்ணினத்தின் பெருமூச்சு என்னசெய்யும்?
வருங்காலம் விதவைக்கு வாழ்வுவேண்டின்
வையத்தின் மதப்போர்வை கிழிய வேண்டும்.


### ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல், 723, மருதானை ரோடு, கொழும்பு-10. த. பெட்டி 649.



### சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறுமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00
(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

தபால் பெட்டி 1183, கொழும்பு.

சர்குலேஷன் மனேஜர் சுதந்திரன்.



★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்
26, கெய்லர் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1959 மே மாதம் 3-ந் தேதி

194 ஏ, தட்பாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


## திருமலையில் கலைமகள் ஆலயம்

தமிழ் இலங்கையின் எதிர்காலத் தலைநகர் என மதிக்கப்படும் திருகோணமலையில் மே மாதம் 10ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலையில், கலைமகள், ஆலயத்தின் கல் நாட்டு விழா நடைபெறவிருப்பதை அறிந்து தமிழ் பேசும் பெருங்குடி மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைவார்கள் என்று நம்புகிறோம்.

ஆயகலைகள் அனைத்தையும் போதிக்கும் ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகத்தினைக் கலைமகளின் தூய ஆலயம் என்று கொள்ளுவது பொருத்தமேயல்லவா?

இந்த இருபதாம் நூற்றுண்டின் மத்தியில் எத்தனையோ வழிகளில் நிலைகுலைந்து, பலமிழந்துவிட்ட ஈழத் தமிழினம், தாம் பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கெல்லாம் ஈடு செய்வதுபோல் பெருமைகொள்ளத்தக்க இரண்டு சாதனைகளையும் நிலைநாட்டியிருக்கிறது.

ஒன்று: பல்வேறு திசைகளில் பிளவுண்டு கிடந்த தமிழ் மக்களை ஒன்றுபடுத்தி மட்டக்களப்புத் தமிழன், யாழ்ப்பாணத் தமிழன், மன்னார்த் தமிழன், மலைநாட்டுத் தமிழன் என்ற அர்த்தமற்ற பேதத்தை அகற்றி, எல்லாத் தமிழர்களும் ஓரினத்தைச் சார்ந்தவர்கள், உயர்வுதாழ்வு அற்றவர்கள், சரிநிகர் சமானமானவர்கள் என்ற உன்னதமான உணர்ச்சியை ஊட்டி, அனைவரையும் தமிழரசுக் கொடியின்கீழ் அணிவகுக்கச் செய்துவிட்ட அரிய சாதனையைக் குறிப்பிடுகிறோம்.

இரண்டு: வடக்கிலும். கிழக்கிலும், கொழும்பிலும், மலைநாட்டிலும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் உள்ள தமிழர்—முஸ்லிம் ஆகிய தமிழ் பேசும் மக்களை ஒருமுகப்படுத்தி தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கமொன்றினைத் தோற்றுவித்த பெரிய சாதனையைக் குறிப்பிடுகிறோம்.

பேராதனையிலுள்ள இலங்கைச் சர்வகலாசாலையில் போதனு மொழி தனிச் சிங்களம் ஆகப்போகின்றது, அங்கு இனித் தமிழ் மாணவர்களுக்கு இடமில்லை என்ற நிலை உருவாகி வருவதை அறிந்த சில தமிழ்ப் பெரியார்களும், கல்விமான்களும், தொண்டர்களும் தமிழ் பேசும் மக்களுக்கென ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இன்றியமையாதமையை உணர்ந்து அதற்கென ஒரு இயக்கத்தைத் தோற்றுவித்தனர். அதுவே தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கமாகும்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் திருகோணமலையில் நிறுவுவதெனத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தினர் செய்த முடிவு எத்தனையோ வழிகளில் பொருத்தமுடையது; தீர்க்க திருஷ்டிவாய்ந்தது எனலாம்.

ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கேற்ற சுற்றமும், சூழலும், மற்றும் நில நீர் வளங்களும், போக்குவரத்து வசதிகளும் திருமலையில் வாய்க்கப்பெற்றிருப்பது ஒருபுறமிருக்க, அரசியல் பாங்காகப் பார்க்கும்போதும் எதிர்காலத்தில் தமிழ் மக்கள் தங்கள் சமூக, பொருளாதார இயக்கங்களையெல்லாம் திருமலையின் திசையிலேயே குவித்தல் செய்ய வேண்டியது அவசியமாயிருத்தலால், தமிழ்ப் பல்கலைக் கழகமும் அங்கு அமையப் பெறுவதே சாலச்சிறந்ததாகும்.

திருகோணமலை புராண, இதிகாச, சரித்திரப் புகழ் வாய்ந்த பழம்பெரும் தமிழ் நகரம். அங்கு கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சோணநாயகப் பெருமான்மீது கி. பி. ஏழாம் நூற்றுண்டில் பாடப்பெற்ற திருஞானசம்பந்தர் தேவாரம் திருகோணமலையின் குடிப் பெருக்கத்தின் நெருக்கத்தை அழகு பெற வர்ணிக்கின்றது:

"கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே"

ஏழாம் நூற்றுண்டுக் காலத்திலேயே தமிழ் நாட்டிலுள்ள அநுபூதிமான் ஒருவர் வியந்து பாடும்படி திருமலையில் நிறைந்து பொலிந்து விளங்கிய குடிமக்கள் தமிழ்க் குடிமக்களே என்பதை நாம் விளக்க வேண்டியதில்லை.

தமிழ்க் குடி நெருக்கத்துக்கும் பெருக்கத்துக்கும் பெயர்பெற்ற திருமலை இன்று போதிய அளவு தமிழ்க் குடிபதிகள் இல்லாமல் தவிக்கிறது. நாளிலும் பொழுதிலும் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம் திருமலையை அலையலையாக அரித்து, அபகரித்து வருகிறது. இந்த நிலை மேலும் நீடிக்கப்பட்டால் தமிழ் மக்கள் திருமலையை இழக்க வேண்டிய துர்க்கதி ஏற்பட்டே தீரும். திருமலையைத் தமிழ் இனத்தினர் இழந்தால் வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் ஒரு காந்தக் கல்லை, வளமிக்க ஒரு தமிழ்த் துறைமுகத்தை, வருங்காலத் தமிழர் தம் தலைநகரத்தை, அவர்கள் இழந்தவர்களாவார்கள்!

இந்தப் பேராபத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு ஒரே வழி திருகோணமலையில் தமிழ்க் குடியேற்றத்தை அதிகப்படுத்தி அதைத் தமிழ்ப் பெரும்பான்மைப் பிரதேசமாக வைத்திருப்பதுதான்.

இந்தவகையில் திருமலையில் உருவாகும் தமிழ்ப் பல்கலைக் கழகம் திருமலையின் பாதுகாப்புக்கும் தமிழ் மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்கும் செய்யும் நன்மை அளப்பரியதாகும்.

எனவேதான், இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தினைக் [illegible] வொரு தமிழ் பேசும் மகனதும் நீங்காக் கடமையாகும் என்று வலியுறுத்த விரும்புகிறோம்.

தானதருமங்கள் எல்லாவற்றிலும் கோடி புண்ணியமுடையது வித்தியா தானம் என்று கருதிய வரகவி பாரதியார் இத்தகைய கைங்கரியங்களுக்கு—

'நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்!
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்!'

என்று கவிதை இசைத்தார்.

இக் கவிதையினையே நாமும் கூறித் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்க வளர்ச்சிக்குத் தமிழ் பேசும் மக்கள் வாரி வழங்க வேண்டுமென்றும், [illegible] அத்தகைப் பெருமக்கள் அழகப் [illegible] யரையும் ஒப்ப அள்ளிக் கொடுக்கும் வள்ளல்களாக விளங்க வேண்டுமென்றும் அன்பாய்க் கேட் [illegible]

---

தொகுதி எல்லை நிர்ணய கமிஷனுக்கு

# தமிழரசுக்கட்சி மகஜர்:

## வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு புதிய தொகுதிகளும் கூடுதலான பிரதிநிதிகளும்

## சிறுபான்மைத் தமிழருக்கும் இந்திய வம்சாவழியினருக்கும் பிரதிநிதித்துவம்

பாராளுமன்றத் தொகுதி எல்லை நிர்ணயக் கமிஷனுக்குத் தமிழரசுக் கட்சி சமர்ப்பித்துள்ள மகஜரில் இந்திய வம்சாவழியினருக்கு அரசாங்கம் செய்துள்ள அநீதியைச் சுட்டிக் காட்டி, தற்போதைய நிலையில் அவர்களுக்கு எப்படியும் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது.

சிறுபான்மைத் தமிழருக்கும் ஒரு ஸ்தானமேனும் கிடைக்கும் வகையில் எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்றும் தமிழரசுக் கட்சி தனது மகஜரில் கூறியிருக்கிறது.

வடக்கு மாகாணத்துக்கு 13 ஸ்தானங்களும் கிழக்கு மாகாணத்துக்கு 11 ஸ்தானங்களும் இருக்க வேண்டும்என்றும்மகஜரில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. மற்றும் புத்தளம் தொகுதி பற்றியும் கொழும்பு மத்திய தொகுதி பற்றியும் கட்சிதனது கருத்தை தெரிவித்து இருக்கிறது.

தமிழரசுக் கட்சி தனது மகஜரில் வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் புதியதோர் திட்டத்தையும் அதற்கு மாற்றுத் திட்டமாகப் பிறிதொன்றையும் வெளியிட்டு இருக்கிறது.

### வடக்குக்கு ஒரு திட்டம்

ஒரு திட்டத்தின்படி தற்போதுள்ள தேர்தல் தொகுதிகளான வவனியா,மன்னார், ஊர்காவற்றுறை ஆகியவற்றில் ஒருவித மாற்றமும் இல்லை. எஞ்சியுள்ள பிரதேசங்கள் பின்வருமாறு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன:-

வட்டுக்கோட்டை,காங்கேசன்துறை, மானிப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி.

இவற்றுள் மானிப்பாய், நல்லூர், கரவெட்டி, கிளிநொச்சி ஆகிய நான்கும் புதுத் தொகுதிகளாகும். இந்த நான்கில் ஒன்றனுள் சிறுபான்மைத் தமிழர் ஒருவர் பிரதிநிதியாக வரும வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

### மாற்றுத் திட்டம்

மாற்றுத் திட்டத்தின் பிரகாரம் வவனியாத் தொகுதியும் மன்னார்த் தொகுதியும் அப்படியே இருக்க ஏனைய தொகுதிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறைத் தொகுதியிலிருந்து காரைநகர் கிராமச் சங்கப் பிரதேசம் பிரித்து எடுக்கப்பட்டு பண்டத்தரிப்பு என்று ஒரு புதிய தொகுதியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாற்றுத் திட்டப் பிரகாரம் தொகுதிகள் பின்வருமாறு:-

ஊர்காவற்றுறை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, கோப்பாய், யாழ்ப்பாணம். நல்லூர், பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி, கிளிநொச்சி.

இவற்றுள் பண்டத்தரிப்பு, நல்லூர், கரவெட்டி, கிளிநொச்சிஆகியனபுதியதொகுதிகளாகும்.

### திருமலை மாவட்டம்

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தின் தற்போதைய இரண்டு தொகுதிகளில் 3 பிரதிநிதிகள் தெரிவு செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது தொகுதிகள் வருமாறு:-

திருகோணமலை-ஒரு பிரதிநிதி.

மூதூர்-இரண்டு பிரதிநிதிகள்.

மூதூர் கூட்டுத் தொகுதியாக்கப்பட்டால் ஒரு தமிழரும் பிரதிநிதியாவதற்கு இடமுண்டு.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டம் பின்வரும் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது:-

கல்குடா, மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை, பட்டிருப்பு, கல்முனை, நிந்தவூர், பொத்துவில், அம்பாரை.

இவற்றுள் கொக்கட்டிச்சோலை, அம்பாரை ஆகிய இரண்டும் புதிய தொகுதிகளாகும்.

### புத்தளம்

புத்தளம் தொகுதியில் உடப்பு கிராமக் கமிட்டிப் பகுதியைச் சேர்த்துக்கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கிறது.

### கொழும்பு

கொழும்பு மத்திய தொகுதி, முஸ்லிம்களுக்கும் தமிழருக்கும் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்க வழி செய்யும் வகையில் வரையறுக்கப்பட்டது. இத்தொகுதியிலிருந்து கோட்டை வார்ட்டை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக கொட்டாஞ்சேனை கிழக்கு வார்ட்டைச் சேர்த்துக் கொள்ளும்படி மகஜரில் கோரப்பட்டிருக்கிறது.

---

# கல்நாட்டு விழா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றத் தமிழ் உறுப்பினர்கள், செனட்டர்கள, தமிழ் பிரதேசங்களிலுள்ள ஸ்தல ஸ்தாபனங்களின் தலைவர்கள்ஆகியோர் கல் நாட்டும் பிரமுகர்களாக அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

### சாப்பாடும் தங்க ஏற்பாடும்

திருமலைக்குப் போகும் பிரயாணிகளுக்கு தங்குவதற்கு இடமும சாப்பாட்டு வசதிகளும் எதுவித குறைபாடுமின்றி ஏற்பாடு செய்யப்படும் என்று திருகோணமலையிலுள்ள பல்கலைக் கழக கல் நாட்டு விழா வரவேற்பு உபசாரக் கமிட்டியினர் தெரிவித்துள்ளனராம்.

கொழும்பிலிருந்து திருகோணமலைக்குப் போக விரும்புபவர்கள் திரு ஏ. புவனேசன், (மாணவர் சங்க செயலாளர், நாவலர் கழகம், அலக்சாந்திரா வீதி, வெள்ளவத்தை) என்பவரைச் சந்தித்து ஒழுங்கு செய்து கொள்ளலாம். திரு புவனேசன் ஏற்பாடு செய்யும் பஸ் வண்டிகள் மே 9-ந் தேதி சனிக்கிழமை காலை புறப்பட்டுச் சென்று 10-ந் தேதி ஞாயிறு இரவு திருமலையிலிருந்து திரும்பி வரும் என்று தெரிகிறது. பிரயாணி ஒருவருக்கு கட்டணம் போக வர ரூ 15 மட்டுந்தான்.

### விவேகானந்த சபை திட்டம்

கொழும்பு விவேகானந்த சபையினரும் திருமலைக்கு யாத்திரை ஏற்பாடுகளைச் செய்கின்றனர். இவர்கள் சனிக்கிழமை அதிகாலையில் புறப்பட்டு பொலநறுவை, தம்புளை, சிகிரியா முதலிய புராதன இடங்களைப் பார்வையிட்டுக்கொண்டு திருமலையை அடைவர். திருகோணமலையில் கோணேசர் மலைக் கோயில், தம்பலகாமம் கோணேசர் கோவில் கன்னியா வெந்நீர் ஊற்று ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்வர். விழாவில் கலந்து கொண்டு ஞாயிறு இரவு கொழும்பு நோக்கிப் புறப்படுவர். சாப்பாடு உட்பட பிரயாணி ஒருவருக்கு இவர்கள் நியமித்துள்ள கட்டணம் போகவர ரூ 20 ஆகும்.

மேற்கூறிய இரண்டுஇடங்களிலும் பிரயாணிகள் தங்கள் பெயர்களை ஏற்கனவே கட்டணம் செலுத்திப் பதிவு செய்து கொள்ளலாம் என்று தெரிகிறது.

மே 9-ந் தேதி சனிக்கிழமை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாக சபைக் கூட்டம் திருகோணமலையில் நடைபெறுகிறது என்பதும் அக் கூட்டத்தில் அடுத்துவரும் வருடாந்த மாநாடு பற்றி ஆராயப்படும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவு வங்கி மசோதா

# வலதுசாரி - இடதுசாரி சமரஸம் நீண்ட நாட்களுக்கு நிலைக்குமா?

## பிலிப்போடு பிரதமர் நடத்திய இரகசிய ஏற்பாடு அம்பலம்

எம். ஈ. பி. கட்சியின் வலது சாரிகளுக்கும் இடது சாரிகளுக்கு மிடையே இழுபறிப்பட்டுக் கிடந்த கூட்டுறவு வங்கி மசோதாவைத் தாமே நேரில் பொறுப்பேற்று நிர்வகிக்கப் போவதாகக் கூறிப் பிரதமர் தற்காலிகச் சமரஸம் செய்து வைத்தார் அல்லவா? இந்தச் சமரஸம் நீண்ட நாள் நிலைக்காது என்று இப்போது தெரியவருகிறது.

பிரதமர் திரு பண்டாரநாயகா உணவு அமைச்சர் திரு பிலிப் குணவர்த்தனவுடன் ஏற்கனவே பேசிச் சில இரகசிய ஏற்பாடுகளைச் செய்துகொண்ட பின்னரே பாராளுமன்றக் கட்சியின் அவசரக் கூட்டத்தைக் கூட்டி ஒரு பித்தலாட்ட நாடகம் ஆடினர் என்ற உண்மை இப்போது சிறிது சிறிதாக வலது சாரிகளின் செவிகளுக்கு எட்டி வருகிறதாம்.

திரு பிலிப்பின் எந்தத் திட்டத்தையும் எதிர்த்து மறுத்து வெற்றி கொள்ளும் மனத்திடமும் துணிவும் இல்லாத பிரதமர் நிலைமையைச் சமாளிப்பதற்காக திரு பிலிப்புடன் ஒரு அந்தரங்க ஏற்பாடு செய்து கொண்டார்.

### அந்தரங்க ஏற்பாடு

"உனக்கு வேண்டியது கூட்டுறவு வங்கி மசோதா சட்டமாக வேண்டும் என்பதுதானே. நானே பொறுப்பேற்று நடத்தப்போவதாகக் கூறி நிறைவேற்றுகிறேன். மசோதா சட்டமான பின்னர் சட்டத்தை அமுல் செய்வதுஎந்த மந்திரி என்பதை பிரதமர் என்ற முறையில் நானே தீர்மானிக்கலாம். அதற்கு பாராளுமன்றத்தின் முன் போக வேண்டியதில்லையல்லவா? கொந்தளிப்பு அடங்கியதும் அதிகாரத்தை உன் வசம் ஒப்படைக்கிறேன்" இப்படிக் கூறியே பிரதமர் திரு பிலிப்பின் ஒப்புதலைப் பெற்றாராம்.

### பிலிப்பின் முயற்சி

வென்றது தாங்கள்தாம் என்று வலதுசாரிகள் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருக்க பிலிப் தோற்றவர் போலிருந்து கூட்டுறவுவங்கி மசோதாவை அரசாங்கம் அப்படியே நிறைவேற்றி வைக்க வற்புறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

மக்களைக் கிளர்ச்சி செய்ய வைத்துத் தமது காரியத்தை சாதிக்க அவர் முயன்று வருகிறார். இதற்கு வேண்டிய பிரசாரத்தை கிராமாந்தரங்களிலும் விவசாயிகளிடையேயும் செய்வதற்காக உணவு அமைச்சர் கூட்டுறவு வங்கி மசோதாவின் பலாபலன்களையும் அது கிராம மக்களுக்கு செய்யக்கூடிய நன்மைகளையும்பற்றி குறிப்பிட்டு லட்சக்கணக்கில் சிங்களத்திலும் தமிழிலும் துண்டுப்பிரசுரங்கள் தயாரித்துள்ளார். வெகுவிரைவில் இவை நாடு முழுவதிலும் விநியோகம் செய்யப்படும் என்று தெரிய வருகிறது.

## இந்தி.....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியைப் பிடித்து வைத்தால் ஒன்றுமே நடக்க முடியாது. அரசாங்க இயந்திரமே ஸ்தம்பித்தாலும் ஸ்தம்பிக்கலாம்.

### ஆலோசனை

இந்த மூன்று காரணங்களையும் காட்டி எதிர்ப்பவர்கள் ஆட்சியாளருக்கு ஒரு யோசனையும் கூறி இருந்தார்கள். அதாவது, இந்தியை நாட்டின் ஆட்சி மொழியாக்குவதற்கு முன்னர் அதை இந்தி பேசும் மாகாணங்களில் இராச்சிய மொழியாக்குங்கள். எப்படிச் செயல்படுகிறது என்று பரீட்சித்துப் பார்த்துவிட்டு நாட்டுஆட்சி மொழியாக்குவதுபற்றி அப்புறம் யோசிக்கலாம் என்றார்கள். கேட்கவில்லை ஆட்சியாளர்கள். "எண்ணிவிட்டோம். இனி எப்படியும் நாட்டு மொழியாக்கியேதீருவோம்" என்று தொடங்கிவிட்டார்கள்.

### முகத்தில் கரி

ஆட்சி மொழிக் கமிஷனுக்கு சமரசத் திட்டம் தயாரித்துக் கொடுத்து சபாஷ் பட்டம் பெற்ற சென்னை அரசாங்கத்தின் கண்ணிலும் மண்ணைத் தூவி விட்டது பார்லிமென்டரிக் கமிட்டி. ஆங்கிலமும் இந்தியும் இரண்டுமே ஆட்சி மொழியாக இருக்கலாம் (ஆகாஷ்வாணியும் வானொலி நிலையமும்போல) என்று யோசனை கூறியது சென்னை அரசாங்கம். இந்தி வேண்டாம் என்று துணிவோடு எதிர்த்துக் கூறிய வங்கம் கமிஷன் முடிவு கேட்டும் தலைநிமிர்ந்து நின்று பேச முடிகிறது. சமரசத் திட்டம் தயாரித்துக் கொடுத்த சென்னைக்கோ முகத்தில் கரி!

## தொழிற் சங்க இயக்கம்

தொழிற் சங்கம் என்றால் என்ன? அது எப்படி, எங்கு, எப்போது ஆரம்பித்தது? அதன் வரலாறு யாது? வளர்ச்சி எப்படிப்பட்டது? அதன் அமைப்பும் இலட்சியங்களும் யாவை?

இது தொழிலாளர் யுகம் என்று சொல்லப்படுகிறது. தொழிற் சங்க இயக்கங்கள் நாட்டின் பலம் வாய்ந்த அமைப்புகளாக மாறி வருகின்றன உலக நாடுகளில். இந்த சூழ்நிலையில் மேற்கண்டவை போன்ற வினாக்களுக்கு விடையும் விளக்கமும் தெரிந்திருக்க வேண்டியது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

எனவே, தொழிற் சங்க இயக்கம் என்ற ஒரு புதிய அம்சத்தை சுதந்திரனில் விரைவில் ஆரம்பிக்கவிருக்கிறோம். இவ்வாண்டு மே தினத்தையொட்டி இந்த நற்செய்தியை நமது நேயர்களுக்கு முன்னறிவித்தல் செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

தொழிற் சங்க இயக்கத்தின் வரலாற்றையும், அமைப்பையும், இலட்சியங்களையும்பற்றி சுதந்திரனில் எழுத முன்வந்துள்ளவர் அத்துறையில் ஈடுபாடும், தக்க அறிவும், ஆராய்ச்சியும் உடையவராவர். அத்தோடு அன்னார் பொருளாதாரத் துறையிலும், வர்த்தக சாத்திரத் துறையிலும் பல்கலைக் கழகப் பட்டதாரியாகவும் விளங்குகின்றார்.

### தொழிற் சங்க இயக்கம்

எழுதுபவர்:

சோ. வன்னியசிங்கம்
B. Com., M. Sc. (Econ) (Lond).,
பொருளியல் விரிவுரையாளர்:
1. இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி
2. அக்குவைனஸ் பல்கலைக் கழக கல்லூரி:

## அடுத்த தொழில் கமிஷனர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியாகப் புறக்கணிக்கப்பட்டு விட்டனர்.

சேவைக்கால வரிசையின்படி ஐந்து தமிழர்கள்: திருவாளர்கள் வி. சின்னத்தம்பி, என். மயில்வாகனம், எஸ். இரத்தினம், எஸ். எப். பிலிப்பையா, கே. பொன்னுத்துரை ஆகியோர் முன்னணியில் இருந்தனர். சேர்விஸின்படி இவர்களுடைய ஸ்தானங்கள் முறையே 1, 4, 8, 9, 10 ஆக இருந்தன. இவர்கள் திறமைசாலிகளாகவும் இருந்தனர். ஆயினும் இந்த ஐவரும் தமிழர்களாய் இருந்தமையினால் ஒதுக்கப்பட்டு விட்டனர். இவர்களுக்குப் பின் வரிசையிலிருந்து வந்த எட்டுப்பேர் உதவிக் கமிஷனர்களாக உயர்த்தப்பட்டுள்ளனர். சேர்விஸிலும் அந்த எட்டுப் பேரும் வகித்த ஸ்தானம் 3, 11, 15, 20, 23, 25, 31, 36 ஆகும். முதலாம் ஆளுக்குப் பதவியில்லை 36ம் ஆளுக்குப் பதவி உயர்வு கிடைக்கிறது. தகுதியும் திறமையும் கொலை செய்யப்படுகின்றன. பௌத்தமும் சிங்களமும் பதவி பெறுகின்றன.

பதவி உயர்வு பெற்றவர்களில் பலர் மந்திரிமார்களின் உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சிலருடைய மனைவிமார் எம். ஈ. பி. பாராளுமன்ற உறுப்பினரின் சொந்தக்காரர்களாக இருக்கின்றனர்.

சேவைக்கால யோக்கிய தாம்சத்தில் மிகக் குறைந்தவரான 36ம் இலக்கப் பேர் வழி திரு டட்லி குணசேகரா என்பவர் காணி அமைச்சர் [illegible] நெருங்கிய பந்து என்பது [illegible] பதவி உயர்வுக்கு அவரிடமிருந்த ஒரேயொரு தகுதியம்சமாகும்.







அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுக:-


கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது)

தபாற் பெட்டி 33, கொழும்பு. CCC629

கெம்பீரமாக தோற்றமளிக்கவேண்டுமா?
அணியுங்கள்
மௌலானு சாரங்களை

அகில இலங்கையிலும் அரை நூற்றண்டுக்கு மேல் அழியாப் புகழ்பெற்று இன்னமும் எழிலுடன் ஒப்புயர்வற்று சிறந்தோங்குவன மௌலானு சாரங்கள்



எதிர்வரும் றம்ழான் - புதுவருட பண்டிகைகட்கு விசேஷ இறக்குமதிகளைப் பார்வையிட இன்றே விஜயம் செய்யுங்கள்.

MOULANA (Ceylon) Ltd.
மௌலானு (சிலோன்) லிமிட்.,
இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன் கதைச் சுருக்கம்

மகாவலியின் மடியிலே தன் வாழ்க்கைக்கு முடிவு காண விழைந்தவளை மீட்டான் வேலாயுதம். அப்படி மீட்கப்பட்டவள் அவனைப் பார்த்து ஒரு நல்ல சொல்தானும் கூறினளா?

"என்னை வாழத்தான் வைக்கவில்லை நீ! சாகவேனும் விடக்கூடாதா?" என்ற வார்த்தைகளால் அவனை அர்ச்சனை செய்தாள். அத்தோடு அவள் (நவமணி) நிறுத்தவில்லை. தமக்குப் போட்டியாகப் பத்மா என்று ஒருத்தி வந்துவிட்டாளே என்ற மன வேதனையையும் கொட்டித் தீர்த்தாள்.

இந்தக் கட்டத்தில் இத்தனை நாட்களாகத் தாம் மறைத்து வைத்திருந்த இரகசியத்தை வெளிப்படுத்தி நமணியைச் சாந்தப்படுத்த வேண்டியதாயிற்று வேலாயுதத்துக்கு. பத்மாவுக்கும் தமக்குமிடையிலுள்ள நேசத்தையும் பாசத்தையும், அண்ணன்—தங்கை உறவையும் ஆதியோடந்தமாகக் கூறத் தொடங்கினன்.


உங்கள்

அபாயகரமான

விரோதி



பயோரியா

ஈறுகளில் இரத்தம் வடிதல்? வாய்ப் புண்? பல்லாட்டம்?

இந்த பயங்கர வியாதி உங்கள் பற்களை விழச் செய்வது மன்றி, ஆரோக்கியத்தையும் கெடுத்து விடுகின்றது. தேகத்தில் ஏற்படும் வியாதிகளில் 85 சத விகிதத்திற்கு பயோரியா தான் காரணமென பரிசோதனையிலிருந்து தெரிய வருகிறது. ஆயினும் அநேகர் இந் நோயின் அறிகுறிகளை அலட்சியம் செய்து நாளா வட்டத்தில் கடுமையான நோய்க்குள்ளாகின்றனர். நவீன சாஸ்திரீய முறைப்படி தயாரிக்கப்பெற்றுள்ள பயோரிஸான் எந்த நிலைமையிலுள்ள பயோரியாவையும் நீக்குவதில் கைகண்ட மருந்து பயோரிஸான். ஈறுகளில் இரத்தம் வடிதலை நிறுத்தி, சீழ் பிடிப்பதைத் தடுத்து, பற்களை ஆட்டமில்லாமல், உறுதியாக நிலைகொள்ளச் செய்கிறது பயோரிஸான்.

விலை ரூபா. 3,50

தபால்செலவு பிரத்தியேகம்

இலங்கையில் சோல் ஏஜண்டுகள்:

பயனீர் பார்மஸி,

183, ஷாப்புத்தெரு, கொழும்பு


# மகாவலியின் மடியில்!

சிறுகதை — எழுதியவர்: சிற்பி

தம்மோடு இருந்ததால் பத்மாவுக்கு ஏற்பட்ட அவச்சொல் அவள் வாழ்வையே பறித்த கதையைச் சொன்னபோது தன் உள்ளத்தில் எழுந்த இலட்சியத்தையும் எடுத்துக் கூறினன்:-

"எப்படியாவது பத்மாவின் கணவனைக் கண்டு பிடித்துப் பிரிந்த இருவரையும் பிணைத்துவிட வேண்டும். பத்மா மறுபடியும் சந்தோஷமாக வாழ வேண்டும்."

(இனி வேலாயுதம் சொன்ன மிகுதி விவரங்களைப் படியுங்கள்.)

கண்டியில் எனக்கு உத்தியோகம் கிடத்தது. பத்மாவையும் கூட்டிக்கொண்டு கண்டிக்குச் சென்றேன். அங்கேதான் பத்மாவின் கணவனும் வேலை பார்த்து வந்தான்.

வேலை நேரந் தவிர்ந்த மற்றைய வேளைகளில் அவனைத் தேடினேன். தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் எல்லோரிடமும் அவனைப் பற்றிக் கேட்டேன். மூலை முடுக்குகளிளெல்லாம் அவனுக்காக அலைந்தேன்.

ஃ ஃ ஃ

"அந்த வேளையில் தான் நான் உங்கள் வாழ்க்கையில் குறுக்கிட்டு, உங்கள் இலட்சியம் நிறைவேருது இடையூறுகள் செய்துவிட்டேன்"—இப்போதுதான் வாய் திறந்தாள் நவமணி. வேலாயுதம் கூறிய கதை அவளுடைய இதயத்தைக் கசிந்துருகச் செய்தது.

"நீ மாத்திரம் அதற்குப் பொறுப்பல்ல, நவமணி! என் இலட்சியத்தை நான் என்றுமே மறந்ததில்லை. உன்னுடன் பழகிய சந்தர்ப்பங்கள் என்னை உனது அடிமையாக்கின. பத்மாவிற்கு வாழ்வளித்தால், அதுவே நம் இருவரது இன்ப வாழ்வின் திறவுகோலாக அமையும் என்று கனவு கண்டேன்."

"நெஞ்சிலே புதைந்து நிம்மதியிழக்கச் செய்த இந்த விபரங்களை அன்றே நீங்கள் விண்டு சொல்லியிருந்தால், நானும் உங்களுடன் சேர்ந்து உங்கள் வேலையை இலகுவாக்கியிருப்பேன்" வேலாயுதம் செய்த தவறைச் சுட்டிக்காட்டினுள் நவமணி.

"உன்னிலும் பார்க்கப் பெண் உள்ளத்தை நன்கு புரிந்துகொண்டிருப்பவன் நான். பத்மாவைப்பற்றி அன்று கூறவில்லையே என்று இன்று வருந்துகின்றாய். ஆனால் அப்படி நான் கூறியிருந்தால் உன் இதயமே வெடித்திருக்கும். என்னைப் பற்றி உன் காதுகளில் விழுந்த செய்திகள் அனைத்தும் எனக்குத் தெரியும். ஏற்கனவே உன் மனதில் தோன்றிய சந்தேகப் புயலை, பத்மாவின் கதை சூறுவளியாக்கியிருக்கும்."

நவமணியின் கண்கள் விரிந்தன. அவள் இதயம் எண்ணிய எண்ணங்கள் அவனுடைய வாயின் வழியாக வெளிப்படுகின்றனவே!

நவமணியின் கண்ணும் காதும் வேலாயுதத்தின் வாயிலேயே பதிந்தன.

வேலாயுதம் தொடர்ந்து கூறினன்:

ஃ ஃ ஃ

வழக்கம்போல் இருட்டிய பின்பு வீடு வந்து சேர்ந்தேன். ஒருநாள்—ஊரிலிருந்து தந்தி ஒன்று வந்திருந்தது, எங்கள் இருவரையும் உடனே வரும்படி. பத்மா பதறினள். அன்றிரவே யாழ்ப்பாணம் சென்றுவிட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள். என் தாய் தந்தையரில் யாருக்கோ உடம்பு சரியில்லை என்பது அவள் ஊகம்.

நான் நினைத்தது வேறு. மாப்பிள்ளை வேட்டையாடுபவர்கள் சிலர் அவர்களுக்குத் தகுந்த முறையில் தூபம் போட்டிருக்கலாம். அதன் பலன் அந்த அவசரத் தந்தியாக இருக்கலாம்.

பத்மா இதை ஏற்கவில்லை. பிடிவாதத்தை தளர்த்தவுமில்லை.

எனக்காக அவள் தயாரித்து வந்த சூடான தேநீரையே வாங்காது என் முடிவான தீர்மானத்தை அவளிடம் தெரிவித்தேன். "பத்மா உன் வாழ்க்கையை செப்பனிடாது, நான் கண்டியைவிட்டு ஒரு அடிகூட நகரப்போவதில்லை."

ஃ ஃ ஃ

மௌனமாக வேலாயுதத்தின் கதையைக்கேட்டுக்கொண்டிருந்த நவமணியின் நெஞ்சு 'திக்' கென்றது. பொங்கி எழுந்த அழுகையை அடக்கிக் கொண்டாள். சிந்திய பாலை எண்ணி நொந்து என்ன பயன்?

வேலாயுதம் தொடர்ந்தான்:

ஃ ஃ ஃ

பத்மா அழுதாள். என்னையே பார்க்கப் பிடிக்காதவளைப்போன்று அப்பால் நகர்ந்தாள். ஒவ்வொரு விம்மலும் அவளுடைய இதய வேதனையைத் தெளிவாக எடுத்துக்காட்டியது; பெற்றவர்களிலும் பார்க்க அதிகப் பிரியமுடன் அவளை வளர்த்தவர்கள் அவசரத் தந்தி கொடுத்திருக்கின்றார்கள். அதை அலட்சியம் செய்கின்றானே அவளுடைய அண்ணு? பெற்றோரையும் பிள்ளையையும் பிரித்த பழி அவளைச் சேர வேண்டுமா?

இவற்றை நினைத்துப் போலும் பத்மா அழுதாள். அவள் படும் வேதனையைக் காணச் சகியாது அவளை ஊருக்கு அழைத்துச் சென்றேன். கல்லுப் பிள்ளையார் மாதிரி இருந்தார்கள் பெற்றோர்கள். பத்மாவின் வாழ்வைபற்றிய நினைவில் நான் வீட்டிற்குக் கடிதமே எழுதவில்லை. [illegible] என் [illegible] ளாம் அவர்கள். ஒருதடவை எங்கள் இருவரையும் பார்க்க வேண்டுமென்று தோன்றியதாம். உடனே அனுப்பிவிட்டார்கள் அவசரத் தந்தியொன்றை.

ஊரில் இரண்டு வாரம் தங்கியிருந்தோம். லீவு முடிய, மறுபடியும் கண்டிக்கு வந்தோம். அங்கு சென்றவுடனே, என் மனதில் ஏதோ ஓர் ஆவேசம் புகுந்துகொண்டது. நவமணி! நித்தமும் ஓடிவருகின்ற உன்னைக்கூட மறந்து, என் 'பழைய மாப்பிள்ளை வேட்டை'யில் முன்னிலும் பார்க்க அதிக தீவிரமுடன் இறங்கினேன்.

பட்ட பாட்டிற்கெல்லாம் பலனுக, உழைத்த உழைப்பிற்குப் பரிசாக, அடைந்த கஷ்டங்களுக்கு ஈடாக, கடைசியில் பத்மாவின் கணவன் என் கண்களில் எதிர்ப்பட்டான். அவன் வாயைத் திறந்து 'வா' என்று அழைக்க முன்பே, நடந்த நிகழ்ச்சிகளை ஒளிவு மறைவின்றி ஒன்றுவிடாமற் கூறினேன். பத்மாவின் மாசற்ற நிலையை விளக்கினேன். அவளுக்கு வாழ்வளிக்கும்படி மன்ருடினேன், காலில் விழாத குறையாகக் கெஞ்சினேன்.

என் வேண்டுகோளின் முடிவில் அவன் கூறிய செய்தி என்னைப் பைத்தியமாக்கியது.

ஃ ஃ ஃ

பத்மாவைக் கண்டவுடனே மனதைப் பறிகொடுத்துவிட்டான் அவன். அவளுடைய குழந்தையுள்ளத்தை எடுத்துக் காட்டியது அவள் மதிவதனம் கல்யாணத்தின்போது யாரோ அவன் பெற்ருேர்களுக்கு என்னைப்பற்றி எடுத்தோதியிருக்கின்ருர்கள். நான் நடந்துகொண்ட முறை, அவர்கள் கேள்விப்பட்டதற்குச் சாட்சியாயிருந்தது உடனேயே புறப்பட்டுவிட்டார்கள். அவர்களை எதிர்த்துப் பேசியே அறியாத அவனும் அவர்களைப் பின்தொடர்ந்தான். ஆனுல் பத்மாவிடம் பறிகொடுத்த இதயத்தை மட்டும் அவனுல் திரும்பிப் பெற முடியவில்லை.

வேறு எத்தனையோ பேர் அவனுக்குப் பெண் கொடுக்க முன்வந்தனர்! அவன் ஒரேயடியாக மறுத்துவிட்டான்.

நாட்கள் கழிந்தன. எப்படித்தான் எடுத்துச் சொன்னுலும் பத்மா குற்றமற்றவள் என்பதை, அவன் பெற்ருேர்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. நினைவை மாத்திரம் நெஞ்சில் நிறுத்தி எத்தனை நாட்களுக்கு வாழ முடியும்?

பெற்ருேரின் வற்புறுத்தலுக்காகவும், நண்பர்களின் கிண்டல் கலந்த பேச்சைக் கேட்டுப் பொறுக்காமலும், மறுபடியும் மணஞ் செய்வதற்கு உடன்பட்டான், அரை மனத்துடன் கல்யாணம் நடைபெற்றது.

ஃ ஃ ஃ

"நவம்! பித்துப் பிடித்த என் பெற்ருேர்கள் அந்த அவசரத் தந்தியை கொடுக்காதிருந்தால் அவனுடைய இரண்டாவது கல்யாணத்திற்கு முன்பே அவனைச் சந்தித்திருப்பேன்......நான் ஊரிலிருந்த அந்த நாட்களிலேதான் அவன் கல்யாணம் நடைபெற்றதாம்......

கல்யாணம் நடந்தது உண்மைதான். ஆனுல் அவன் எதிர்பார்த்த இன்பம் கிட்டவில்லை. பெயரளவில் மாத்திரம் கணவன்-மனைவியாக நடந்துகொண்டனர். வேண்டா வெறுப்புடன் நடந்துகொண்டாளாம் அந்தப் புது மனைவி.

பாவம் அவன். இரண்டு தடவை ஏற்பட்ட ஏமாற்றத்தை அவனுல் தாங்க முடியவில்லை. வெறியனுகிவிட்டான். தானுகக் கனியாத பழத்தை அடித்துக் கனியவைக்க நினைத்தான். மணம் கொடுக்க மறுத்த மலரைக் கசக்கி முகர முயன்ருன். அந்தப் பிடிவாதக்காரி அவனை ஏமாற்றிவிட்டாள். அன்றிரவு அவள் ஏதோவெல்லாம் புலம்பினளாம். அவன் கட்டிய தாலிக் கொடியையும் கழற்றி அவன் பாதங்களில் வைத்துவிட்டு, எங்கோ சென்றவள் பின்பு திரும்பி வரவே இல்லையாம். அவளைத் தேடி அலைந்த எனக்கு, அவளைத் தேடி அலுத்த அவன் சொன்ன வரலாறு இது.

ஃ ஃ ஃ

வெடிக்கவிருந்த தன் இருதயத்தை அழுத்திப் பிடித்தபடியிருந்த நவமணியை நன்கு கவனிக்க முடியாதபடி கண்ணீர் வேலாயுதத்தின் பார்வைக்குத் திரையிட்டது. அவளிடமிருந்து வெளிப்பட்ட அனற்காற்றையும் உணராது தூக்கத்தில் பிதற்றுபவனைப் போல, வேலாயுதம் பேசினன்.

"நான் இந்த உலகில் பிறந்து எத்தனை பேருக்குக் கஷ்டத்தைக் கொடுத்துவிட்டேன். பத்மா...அவள் கணவன்......அவனுடைய புது மனைவி...பத்மாவின் வாழ்வில் மறுபடியும் ஒளியேற்ற முடியாது! என் இலட்சியக் கனவு சிதைந்துவிட்டது!

இதை நினைத்தபோது என் மூளை வேலை செய்ய மறுத்தது. பத்மா என் நினைவிலிருந்து மறைந்தாள், நீ என் நினைவிலிருந்து மறைந்தாய்; என் பெற்ருேர்களை மறந்தேன்; உத்தியோகத்தைத் துறந்தேன். எல்லாம் சூன்யம், எங்கும் சூன்யம்!

எல்லாவற்றையும் உதறிவிட்டு ஓடினேன்; ஓடினேன்; ஓடிக்கொண்டேயிருந்தேன். காடு மேடெல்லாம் தாண்டினேன். கடைசியில் இந்த ஆற்றின் மடியிலே கிடந்து காலதேவனிடம் செல்வதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தபோதுதான் நீ மறுபடியும் என்னிடம் சிக்கினுய்......

ஃ ஃ ஃ

பிடித்து வைத்த பொம்மையைப்போன்றிருந்த நவமணியின் கண்களிலிருந்து பெருகிய சிற்ருறு, அங்கிருந்த பேராற்றுடன் கலந்தது. சற்று நேரம் நிலவிய மௌனத்தைக் கலைத்தது. அந்தப் பேதைப் பெண்ணின் பரிதாபக் குரல்.

"என்னை மன்னித்துவிடுங்கள் வேலு! தேநீரும் கையுமாக நின்ற பத்மாவையும், அருகில் நின்று அவளையே பார்த்த உங்களையும் கண்டு நான் சந்தேகித்தேன். ஆத்திரமும் அவசரமும் என் அறிவிற்குத் திரையிட்டன. காதால் கேட்டவற்றைக் கண்ணுல் கண்டபின், என்னுல் வேறு எந்த முடிவிற்கும் வர முடியவில்லை. உணர்ச்சியற்ற மரக்கட்டையானேன். என் பெற்ருேர்களைத் திருப்திப் படுத்துவதற்காக, அவர்கள் பார்த்து வைத்திருந்த ஒருவருக்குக் கழுத்தை நீட்டினேன். ஆனுல் அந்த அவர்...அவர்... பத்மாவின் கணவன்!...நான் தான் அவரை விட்டுப் பிரிந்த புது மனைவி..." அடக்க முடியாது வாந்தியெடுப்பதைப் போலிருந்தது நவமணியின் பேச்சு.

துள்ளி எழுந்தான் வேலாயுதம். அவனுடைய உடல் படபடத்தது. "அப்படியா

(15-ம் பக்கம் பார்க்க)


மில்க் வைற்

நீல சோப்

பாவிப்பவர்கள் திருப்தி அடைகிறுர்கள்

தயாரிப்பாளர்!

மில்க் வைற் சோப் தொழிற்சாலை,

527, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உறுபசியும் ஓவாப் பிணியும் செறு பகையும் சேராதியல்வது நாடு'

## வள்ளுவர் கண்ட இந்நாடு வையகத்தில் விளங்கும்படி செய்யவேண்டும்

## திருக்குறள் வழங்கும் திருவிடத்தில் வாழும் தமிழர்களின் நீங்காக் கடமை இது

(முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்)

நாம் எத்தனையோ நாடுகளைப் பற்றிக் கேட்டும், படித்தும், பார்த்தும் அறிந்திருக்கிறோம். ஆனால், திருவள்ளுவர் கண்ட திருக்குறளிற் கூறியிருப்பதுபோன்ற ஒரு நாட்டைப் பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை. திருக்குறளிற் கூறியிருக்கும் நாடும் நமக்கு எளிதில் தோன்றுவதாயில்லை. படித்து ஆராய்ந்தபிறகே அந்நாடு அறிவுக் கண்ணுக்குத் தோன்றுகிறது. அப்படிப்பட்ட நாடு எது என்பதை அறிய ஆசைப்படுகிறீர்களா? அப்படியானால் நீங்களும் ஆராயப் புறப்படுங்கள்.

திருவள்ளுவர் ஒரு நல்ல நாட்டைக் காணப் புறப்பட்டார். அவர் உள்ளத்தே ஒரு நாடு உருப்பெற்றிருந்தது. எது நாடு? ஒரு நாட்டிற்குரிய இலக்கணங்கள் என்னென்ன? எப்படியிருந்தால் ஒரு நாட்டை "நாடு" என அறிஞர்கள் ஏற்பார்கள்? என்றெல்லாம் எண்ணிப்பார்த்து அவர் ஒரு முடிவுக்கு வந்து விட்டார். ஆகவே அப்படிப்பட்ட ஒரு நாட்டை வெளியிலும் காண ஆசைப்பட்டே தேடிப் புறப்பட்டார்.

தான் ஒரு ஊரில் தங்கிக் கொண்டு அவ்வூரை ஆளும் அரசன் மூலம் அயல் நாட்டார் அனைவரையும் அழைத்துவரச் செய்து அவரவர்களின் நாடுகளைப்பற்றி வினவினார்.

### அவரவர் நாடு

"செல்வத்தால் சிறந்தது எங்கள் நாடு" என்றார் ஒருவர்.

"எங்கள் நாடு விளை பொருளால் நிறைந்திருக்கிறது" என்றார் வேறொருவர்.

"எங்கள் நாட்டில் கற்றறிந்த பெரியோர்கள் பலருண்டு" எனக் கூறினார் இன்னொருவர்.

"உழைப்பாளிகளை அதிகமாகப் பெற்றது எங்கள் நாடுதான்" என்றார் மற்றொருவர்.

"எழுத்தாளர்கள் நிறைந்தது எங்கள் நாடுதான்" என்றார் இன்னும் ஒருவர்.

"பேச்சாளர்கள் நிறைந்தது எங்கள் நாடுதான்" என்றார் பின்னும் ஒருவர்

"ஆகாயக் கப்பல்களால் நிறையப் போவது எங்கள் நாடுதான்" என்றார் மற்றும் ஒருவர்.

"அணுக்குண்டுகளால் நிறையப்போவது எங்கள் நாடுதான்" என்றார் அடுத்தும் ஒருவர்.

முற்றத்திலிருந்த நால்வரில் முதலாவது ஆள் எழுந்து வந்து "இப்பொழுது தங்களிடம் சொல்லப்பெற்றிருக்கிற எல்லாச் சிறப்புகளையும் ஒருங்கே பெற்றிருப்பது எங்கள் நாடுதான்" என்று கூறி மகிழ்ந்தார் வள்ளுவர் உள்ளம் ஒன்றையும் ஒப்பவில்லை என்பதை அவருடைய முகத்தால் அறிந்தார்கள். அவரும் மெதுவாக வாய் திறந்து இவையல்ல 'நாடு' என்பது என வருந்திக் கூறினார்.

### இதுதான் நாடு

மீதமிருந்த மூவரும் எழுந்து நின்று "பின் எதுதான் நாடு என்பது?" எனத் துணிந்து கேட்டார்கள். வள்ளுவரும் உடனே,

"உறுபசியும் ஓவாப்பிணியும்
செறுபகையும்
சேராதியல்வது நாடு"

எனக் கூறினார். இதைக்கேட்டதும் அந்த மூன்று நாட்டவர்களும் மகிழ்ச்சிப் பெருக்கடைந்தனர். இத்தகைய நாட்டைத் தவிர வேறு எதுதான் நாடாக இருக்க முடியும் என்பதைத் தாங்கள் எண்ணிப் பார்த்ததாகவும், தங்கள் மூவருடைய நாடுகளும் அப்படிப்பட்டவையே என்றும் திருவள்ளுவர் வந்து பார்வையிட்டு தங்களையும் தங்கள் நாட்டையும் வாழ்த்த வேண்டும் என்றும் கூறி வருந்தி அழைத்தார்கள். ஒப்பினர்.

### மூவர் காட்ட வள்ளுவர் கண்டார்

முதலாவது நாட்டார் தம்முடைய நாட்டிலுள்ள நகரங்கள் அனைத்தையும் காட்டி, வீதிகள்தோறும் அமைந்துள்ள அறச்சாலைகளையும் காண்பித்து, வரையாது சோறு வழங்கும் வள்ளல்களையும் அறிமுகப்படுத்தி எங்கள் நாட்டில் எவரும் பசித்திருப்பதில்லை எனக் கூறி மகிழ்ந்தார்.

இரண்டாவது நாட்டார் தமது நாட்டிலுள்ள நகரங்கள் பலவும் காட்டி வீதிகள் தோறும் நிறுவப்பெற்றுள்ள மருத்துவசாலைகள் யாவும் காண்பித்து, மருந்து வழங்கப் பொருள் வழங்கும் செல்வர்களையும் அறிமுகப்படுத்தித் தமது நாட்டில் பிணியில்லையெனக் கூறி மகிழ்ந்தார்.

மூன்றாவது நாட்டார் தமது நாட்டின் கோட்டைகளையும் படைகளையும் வில், வேல், வாள் முதலிய படைக் கருவிகளையும் காட்டித் திறமையான போர் வீரர்களையும் அறிமுகப்படுத்தி வைத்து, தங்கள் நாட்டிற்குப் பகை அரசு என்பதே இல்லை எனக் கூறி மகிழ்ந்தார்.

### வருத்தம்

வள்ளுவர் கண்கள் கலங்கின. அவர் உள்ளம் வருந்துவதறிந்து வருந்தினர் நாட்டினர். "புலவரே! எங்கள் நாடு தாங்கள் கூறியது போன்று இல்லையா?" என ஏங்கிக் கேட்டனர்.

"உங்கள் நாடு எந்தப் பெரியார்க்குப் பிழை செய்து இந்நிலைக்கு வந்தது? நாட்டைக் காணச் சென்ற என்னைக் கேட்டைக் காண இங்கேன் அழைத்து வந்தீர்கள்? இதை விடப் பாழாய்ப்போன நாடுகளும் உங்கள் நாட்டினை அடுத்துஇருக்கின்றனவோ?" -வணங்கி வினவினார். விளக்கம் வேண்டினர் நாட்டவர்கள். விளக்குகின்றார் புலவர்,

### கவலைக்கு காரணம்

"முதல் நாட்டிலுள்ள சோற்றுச்சாலைகள் அங்கு பிழைக்க உழைக்க வழியின்றி பிச்சை எடுத்து உண்டு இழிவாக உயிர் வாழும் மக்கள் கூட்டங் கூட்டமாகப் பெருகி இருக்கின்றனர் என்பதையே காட்டிற்று. மனம் உடைந்தேன்.

"இரண்டாவது நாட்டிலுள்ள மருத்துவ நிலையப் பெருக்கம் அந்நாட்டிலுள்ள பிணியாளர்களின் பெருக்கையே நன்கு விளக்கிக் காட்டியது. வருந்தினேன்.

"மூன்றாவது நாட்டினரின் படைப்பெருக்கையும் பாதுகாப்பையும் பார்த்த பொழுது அந்நாட்டிற்குப் பகைவர்கள் அதிகம் என்பது நன்கு விளங்கிற்று. கண் கலங்கினேன்" எனச் கூறினார். "அவ்விதமானால் தாங்கள் கூறிய குறளின் கருத்தென்ன?" என்றார்கள். கூறுகின்றார்,

### இவை நாடுகளல்ல

"இரந்து உயிர் வாழ வேண்டி, இழி தொழிலைக் கைக்கொண்டு, பசி போக்க வாடி, வதங்கி, அழுகின்ற



திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்

மக்களும் அவர்களுக்கு சோறு வழங்கி மகிழ்கின்ற செல்வர்களும் கலந்து வாழ்கின்ற ஒரு நாடும் நாடாகுமோ? பிணியாளர்கள் நிறைந்த நாடு அந்நாட்டில் மருத்துவசாலைகள் அமைந்திருப்பதினாலேயே சிறந்த நாடாகிவிடுமோ? படை எடுக்கக் காலமும் நேரமும் பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் பகை அரசர்களைக் கொண்ட நாடு இப்போது போர் நடக்கவில்லை என்பதற்காக பகையில்லாத நாடாகிவிடுமா? ஒருக்காலும் ஆகாது.

### இதோ நாடு!

"தன்னைப் போன்றுள்ள மற்றொரு மனிதனுடைய உழைப்பின் பயனை இரந்துண்டு வாழ அஞ்சி, உழைக்க வழியிருந்து, உழைக்க இடம் இருந்து, தானே உழைத்து, உண்டு, பசி அறியாது வாழும் மக்களைக் கொண்டது நாடு!

"மிகக் குளிர், சுடும் வெய்யில், கடும் பனி, தீக் காற்று முதலியவைகளில்லாத நந்நிலம் நந்நீர், நல்லுணவு, நல்லெண்ணம், நல்லொழுக்கம் ஆகியவைகளால் பிணியின்றி வாழும் மக்களைக் கொண்டது நாடு!

கொடையும், படையும், குணமும், வீரமும் பகைக்கு அரணாகும். கொடையும் குணமும நாட்டிற்கு வாயிலாகும். பகையாலும் வீரத்தாலும் பகை வென்ற நாடு பகை ஒழிந்த நாடாகாது. ஆகவே விட்டுக் கொடுக்கும் குணத்தாலும், சகிப்புத் தன்மையாலும், அன்பினாலும், பண்பினாலும் பகை ஒழிந்த நாடு தான் நாடு!" எனக் கூறி முடித்தார். இதைக்கேட்ட அந் நாட்டினர் தங்கள் தங்கள் நாடுகளை அவ்வாறு உண்டாக்க எண்ணிப் புறப்பட்டு விட்டனர்.

### உறுபசியும் ஓவாப்பிணியும்

நாம் எங்கு புறப்பட்டுப் போவது, திருக்குறளை விட்டு விட்டு. பசியை வெறும் பசி எனக்கூறாது 'உறுபசி' எனக் கூறினார் ஆசிரியர். மிக்க பசி என்பது இதன் பொருள். இது உழைத்துண்பவர்களின் பசியைக் குறிக்காமல் இரந்துண்பவர்களின் பசியையே குறிக்கின்றது. பசித்திருப்பவர் அல்லது எப்போதும் பசிக்கிறது என்று கூறிக்கொண்டிருப்பவர் இரந்துண்பவரேயாதலின் அவர் அவ்வாறு கூறியுள்ளார் போலும். பிணியைப் பிணியெனக் கூறாது 'ஓவாப் பிணி' எனக் கூறியது நீங்காத பிணியைக் குறித்ததாகும். இது உடல் பிணிகளைக் குறிக்காமல் இயற்கையாலும் தீயொழுக்கத்தாலும் ஏற்படுகின்ற தீராப் பிணிகளையே குறிக்கும் என்று தெரிகிறது.

### செறு பகை

பகையையும் பகை எனக் கூறிவிடாமல் 'செறு பகை' எனக் கூறியது, போர்க் குணம் போர்க்களத்தில் வெற்றி பெறுமே ஒழிய போர்க் குணத்தை ஒழித்து விடாது. நாற்குணம் ஒன்றே போர்க் குணத்தை ஒழிக்கும் ஆற்றல் படைத்தது. ஆதலின் அவ்வாறு கூறியுள்ளார் எனத் தெரிகிறது.

### சேராது

'சேராது' எனக் கூறுவது பசி, பிணி, பகை ஆகிய இம்மூன்றும் மக்களையும் நாட்டையும் அரசையும் துன்புறுத்தும் இயல்புடையவை ஆதலின் ஒரு நல்ல நாட்டில் இவை சேராது இருக்க வேண்டும் என்ற பொருள் பற்றியாம். 'சேராதியல்வது' எனக் கூறியிருப்பதிலிருந்து ஒரு நல்ல நாட்டிற்கு இவை சேராமை மட்டும் சிறப்பல்ல. வேறு பல சிறப்புகளும் வேண்டும். அச் சிறப்புகளால் நாடு இயங்க வேண்டும் என கூறியிருப்பதாகவும புலப்படுகிறது.

### சேராதியல்வது நாடு

'சேராதியல்வது நாடு' எனக் கூறியிருப்பதிலிருந்து ஒரு நாடு எத்தனை சிறப்புகளைப் பெற்று இயங்கினாலும் அத்துடன் பசி, பிணி, பகை ஆகியவைகளில் எதுவும் சேர்ந்து இயங்குமாயின் அது நாடாகாதென்பது புலப்படுகிறது. கையில் நிறைய பொருளை வைத்துக் கொண்டு வயிற்றில் பசியையும் வைத்துக்கொண்டு வாழ்கின்ற மக்களைப் பார்த்தால் 'சேர்ந்து இயங்கும் நாட்டை' நாம் பார்க்க வேண்டுவதில்லை. ஆயுளையும்

(13-ம் பக்கம் பார்க்க)

நற்செய்தி!

புரட்சி நடை! புதுமைக் கதை!

காதல் கண்கள்

கா. தமிழ்த்தம்பி எழுதும் அழகுத் தொடர் நாவல்!

நினைந்தாலே நெஞ்சு இனித்திடும் எண்ணக் குவியல்! வண்ணக் கருத்துக்கள்!! வளங்குறையா வார்த்தைச் சிலம்பங்கள்!!!

குமுறும் எரிமலை—கொந்தளிக்கும் கடல்—கோரமிசைக்கும் கொடும் புலி இவற்றினைவிட, அதிபயங்கரமான அவலங் கெட்டோரைப்—பந்தியிலல்ல-சந்தியில் நிறுத்திச் சரமாரியாக வினுக்கணைகளை வீசுகின்றார் தமிழ்த்தம்பி!

கோழையையும்—வீரனுக்கும் குன்றின்மேலிட்ட கொள்கை விளக்குத்தான் தமிழகத் 'தம்பி'யின் காதல் கண்கள்!!

"நாடோடியில்", வைகாசி இதழ் முதல் இளைஞர்களின் இன்பக் கருவூலமான—இந்த உயிருள்ள தொடர் நவீனம் தொடங்குகிறது!!!

ஆம்! காதல் கண்கள் உண்மையிலேயே ஒரு மலர்க்கொல்லைதான்! இன்பத் தேனருவிதான்!! உங்கள் நண்பர்களுக்கும்—பெரியோர்களுக்கும் கூறுங்கள். உங்கள் பிரதிக்கு முந்துக. "நாடோடி" மாத இதழ் தனிப் பிரதி 15 சதம். வருட சந்தா ரூபா 2 சதம் 25.

ஆசிரியர்
"நாடோடி"
அக்கரல்ல,
ஒப்பநாயக்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே கல்லில் மூன்று கனிகளை அடித்த இளந்தமிழ் நடிகை!

## கல்யாணம் கசக்கவில்லை கரும்பு போல இனிக்கிறது என்கிருர்

ஒரே கல்லில் மூன்று கனிகளை அடித்த இளந் தமிழ் நடிகை இப்போது புகழ் வழியில் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிருர். அவர் யார் தெரியுமா? "ஒரே வழி" என்ற படத்தில் பெரும் பாகம் தாங்கி நடித்த தாம்பரம் லலிதா.

சுவை காணுதவர்களும் 'சூடு' பட்டவர்களும் கல்யாணத்தைக் கசக்கிறது என்று கருதினுலும் தம்மைப் பொறுத்தவரை கல்யாணம் கரும்புபோல இனிக்கிறது என்றும் தேன்போலத் தித்திக்கிறது என்றும் கூறுகிருர். தமது காதல் கல்யாணக் கதையை சுவைபடச் சொல்லியிருக்கிருர்—படித்துப் பாருங்கள்.

அந்நாளிலும் சரி, இந்நாளிலும் சரி காதல் கதைகள் கரடுமுரடான பாதையில் சென்று, கண்ணீரிலும் கல்லறையிலும்தான் முடிகின்றன!

என்னுடைய காதல், அரவணைப்பு பாதையில் சென்று ஆனந்தக் கண்ணீரிலும், அழகிய மணவறையிலும் முடிந்ததில் மகிழ்ச்சி கொள்கிறேன்!

### கல்யாணம்

சிவாஜி நாடக மன்றத்தில் நான் நடிகையாக இருந்தேன். அங்கு என் கணவர் (காதலர்) நடிகராகவும், நிர்வாகியாகவும் இருந்தார்.

கண்டோம்......கண்கள் பேசின...கருத்து ஒன்றின... கட்டுண்டோம்...காத்திருந்தோம்...காலம் கனிந்தது... கல்யாணம் செய்துகொண்டோம், 1953ம் ஆண்டில்!

### பழம் நழுவி பாலில் விழுந்தது

சுவை காணுதவர்களும், 'சூடு' பட்டவர்களும் கல்யாணத்தை 'கசக்கிறது' என்று கருதலாம்! என்னைப்பொறுத்தவரை கல்யாணம் இனிக்கிறது—கரும்புபோல இனிக்கிறது—தேன்போல தித்திக்கிறது!

அதுவும், என்னுடைய கல்யாணம் 'பழம் நழுவி பாலில் விழுந்து, அது நழுவி வாயில் விழுந்தது'போன்றது! அதாவது நான் காதல் கல்யாணம் செய்துகொண்டவள் என்பதை திரும்பவும் சொல்லிக்கொள்வதில் பெருமை கொள்கிறேன்—பெருமகிழ்ச்சி பெறுகிறேன்!

### நம்பிராஜனை நம்பினேன்

என் கணவர் ஒரு நடிகர்! நிறைய படங்களில் நடித்து இருக்கிருர்! சமீபத்தில் 'மாமியார் மெச்சிய மருமகள்' படத்தில்கூட அவரைப் பார்த்து நீங்கள் மெச்சி இருப்பீர்கள்! அந்தப் படத்தில் "எலும்பு முறி வைத்தியராக" வருகிருரே, அவர்தான் என் கணவர்—காதலர்!



தாம்பரம் லலிதா

படத்தில் பார்ப்பதற்கு பயமாக இருந்தாலும், பழகுவதற்கு இனியவர்! நடிகர்கள் நடிப்பதுபோல வாழ்க்கையில் நடப்பது இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக இருப்பவர். எலும்பு முறி வைத்தியர் மட்டுமல்ல' இதயத்தையும் இணைப்பதில் வல்லவர்! பெயர் நம்பிராஜன்! அவரை நம்பி கைபிடித்த ராணி நான்!!

### ஒரே கல்லில் மூன்று கனிகள்

'கல் ஒன்றில் கனி இரண்டு' அடிப்பதை பெரிதாகப் பேசுவார்கள் பலர். ஆனுல், ஒரே கல்லில் மூன்று கனிகளை அடித்தவள், நான். கல்யாணம் செய்துகொண்டேன்! அதுவும் காதல் கல்யாணம் செய்துகொண்டேன்! அதுவும் நடிகையான நான் ஒரு சிறந்த நடிகரையே கல்யாணம் செய்துகொண்டேன்! இதைவிட ஒரு பெண்ணுக்கு வேறு என்ன வேண்டும்?

கை நிறைந்த காசைவிட, கண் நிறைந்த கணவன் தானே ஒரு பெண்ணுக்கு வேண்டும்! இந்தப் பெரும் பேறு பெற்றவள் நான் என்பதை நினைக்கும்போதே எல்லையில்லாத இன்பம் அடைகிறேன்!

### பெயர்

தாம்பரம் லலிதா சினிமா உலகில் பிரவேசித்த சமயம் அங்கு வேறு லலிதாக்களும் நிறைய இருந்து விட்டதால் அப்போது இவர் வசித்துவந்த இடத்தின் பெயரும் சேர்த்து தாம்பரம் லலிதா என்ற பெயர் கொடுக்கப்பட்டது. ஆனுல் இவர் பிறந்தது சென்னையில்; நடனம் பயின்றது சென்னையில்.

### புகழ் வழி

நாடகங்களில் நடித்து அனுபவம் பெற்ற தாம்பரம் லலிதா இலகுவில் சினிமாவில் இடம் பிடித்துக்கொண்டார். பிரபல டைரக்டர்களான கிருஷ்ணன்-பஞ்சுவின் உதவியால் முதலில் "மாமியார் மெச்சிய மருமகள்" படத்தில் நடித்த தாம்பரம் லலிதா அதைத் தொடர்ந்து வேறு பல படங்களிலும் நடித்தார். "ஒரே வழி" என்ற படம் இவரைப் புகழ் வழியில் காலடி எடுத்து வைக்கப் பெரிதும் ஒத்தாசை புரிந்தது.

சிவகெங்கைச்சீமை, கட்டபொம்மன், தலை கொடுத்தான் தம்பி, சந்திரகாந்தா, அமுதவல்லி, மதுரை மன்னன், முதலான படங்களில் இப்போது நடித்து வருகிருர்.

### ஆசை

"தமிழ் சினிமா உலகில் பிற மொழி பேசும் நடிகைகள் நிறைய இருக்கிருர்கள். அவர்களைப் போலத் தமிழ்ப் பெண்களும் சிறந்த நடிகைகளாக வரவேண்டும். [illegible] பெண் [illegible] நடிக்கிருள் என்ற பெயரைப் பெறத்தான் நான் முயற்சி செய்து வருகிறேன்"— இப்படிக் கூறுகிருர் தாம்பரம் லலிதா.

ஆண்களில் சிவாஜி கணேசனின் நடிப்பை விரும்பும் தாம்பரம் லலிதா, பெண்களில் நல்ல அழகும் நடிப்புத் திறமையும் உள்ள பத்மினியையே தாம் விரும்புகிருராம். அவருக்குப் பிடித்தமான சினிமா வசன கர்த்தா கவிஞர் கண்ணதாசன்.


குணப்படுத்துகிறது
★
பீனிசம்
★
ஜுரம்
★
நரம்பளர்ச்சி
★
வலி
★
சிவத்தப்புள்ளி
★
சொடுகு
★

பிணிகளால் அவஸ்தைப் படுவது களிப்புக்கிடமான செய்கையல்லவே!
★
சிரசிற்கு குளிர்ச்சியையளிக்கிறது. உச்சந்தலையை சுத்திகரிக்கிறது. கூந்தலை ஆரோக்கிய அழகொளியுடன் வளரச் செய்கிறது.
★
தலை வலிக்கும், தலை சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் இன்றியமையாத விசேட ஔடதமாகும்.
★
விலை
6 அவுன்ஸ் ரூ. 3-00
தபாற்செலவு சதம் -50
★

இலங்கையடங்கிலுமுள்ள கையிருப்பாளர்களிடமிருந்தும் அல்லது நேரில் எம்மிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

பாவியுங்கள்

நேத்திராலோக தைலம்

டப்ளியூ. கே. ஜினதாஸ்

ஆயுர்வேத வைத்தியர்,
161, நோரிஸ் ரோட், புறக்கோட்டை, கொழும்பு 11.




"அட போயும் போயும் நீயா மாலை போட வந்தாய்? அதுவும் காகித மாலைதான் கிடைத்ததா?" என்று ஜெமினி கணேசன் கேட்க, தங்கவேலு அசடு வழிய விழிக்கும் விழி எப்படியிருக்கிறது? வீனஸ் பிக்ஷர்சாரின் தயாரிப்பான "கல்யாண பரிசு" என்ற படத்தில இருவரையும் இப்படிக் காணலாம்.

நாடக விமர்சனம்:

# கலியாணத் தரகன்

மூன்று மணித்தியால நாடகமொன்றில் ஒவ்வொரு காட்சிக்கும் 'அப்ளாஸ்' கிடைத்தது என்றுல் இதிலிருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாகும். ஒன்று எல்லாக் காட்சிகளையுமே பார்த்துக் கொண்டிருந்தவர்கள் ரஸித்தார்கள் என்பது. எந்தக் கட்டத்திலும் ரஸிகர்களுக்கு அலுப்போ சலிப்போ ஏற்படவில்லை என்பது மற்றது. நாடகத்தின் வெற்றிக்கு வேறு விளக்கம் இனி வேண்டியதில்லையே!


யாழ்ப்பாணத்துப்பேச்சுத் தமிழில் அமைந்த உரையாடலையும் அதை நாடகத் தயாரிப்பாளரும் தரகர் பாத்திரம் தாங்குபவருமான திரு. எஸ். இராஜரத்தினத்தின் வாயிலிருந்து அலாக்காகப் புறப்பட வைப்பதையும் முழுக்க முழுக்க நம்பி மேடையேற்றப்பட்ட நகைச்சுவை நாடகம் கலியாணத் தரகன். ஏமாற்றம் இல்லை. திருப்திதான்.

யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழுக்கு இடையிடையே கொழும்புத் தமிழும், சுறுவாக்காடு ஆங்கிலமும் கலப்படம் செய்யப்பட்டது. உரையாடலை யாழ்ப்பாணத்தவர்கள் அல்லாதவர்களும் புரிந்து ரஸிக்க உதவியதோடு எல்லோரையும் ஏககாலத்தில் சிரிக்கவும் வைத்தது. கிராமத்துக் கிழவர் செவிட்டுச் சின்னத்தம்பியாக நடித்த திரு. மு. திருநாவுக்கரசு தரகரோடு சம்பாஷித்த கட்டங்களில் யாழ்ப்பாணத் தமிழ் ஜொலித்தது. இருவரது நடிப்பும் தத்ரூபமாக அமைந்தது. நாமும் லயனல் வென்ட் மண்டபத்திலிருந்து உண்மையிலேயே இழுத்துச் செல்லப்பட்டுவிட்டோம் சம்பவம் நடந்த கற்பனை இடத்துக்கு. யாருடைய நடிப்பு அந்தக் கட்டத்தில் சிறப்பு என்று சொல்ல முடியாத சிக்கலான நிலை!

இவர்கள் தவிர இன்னும் 9 ஆண்களும் 3 பெண்களும் பங்கு பற்றினர்கள். குடித்துக் கூத்தாடிய கட்டத்தில் எல்லோரும் 'ஓவராக' நடித்தார்கள். பரமானந்தனின் பதஷ்டம் அளவு கடந்துவிட்டது. தங்கமணியின் அடக்கமும் அதிகமாகிவிட்டது. பத்மாஷனி துப்பாக்கியைக் கண்டதும் தகப்பனுர் வீட்டுக்குக் கம்பிநீட்டிய கட்டத்தை இன்னும் இயற்கையாகச் செய்திருக்கலாம். மற்றவர்கள் நடிப்பைச் சொல்லித் திருத்த ஒன்றும் இல்லை. சோடை போகாமல் நடித்தார்கள். குறிப்பாக பாலேந்திரா முயன்றுல் ஜெமினி கணேசனின் நடிப்புப் பாணியில் இன்னும் நன்ருக முன்னேறலாம்.

இந்த நாடகத்துக்கு குறிப்பாகத் தேவைப்பட்டது இரண்டு மூன்று வீட்டுக் காட்சி அமைப்புகள். நாற்காலிகளை அப்படியும் இப்படியுமாக ஒழுங்கு பண்ணிச் சமாளித்துவிட்டார்கள். செவிட்டுக் கிழவன் தன்னுடைய வீட்டைத் தரகருக்குக் காட்டும்போது "இது வீடா?" என்று கேட்டுத் தரகரே கேலி செய்தார். கைதட்டலால் வீடு என்ன, மண்டபமே அதிர்ந்தது.

மேக் அப் கிழவருக்கும் தரகருக்கும் மிகவும் வேண்டியிருந்தது. பொருத்தமாகச் செய்திருந்தார்கள். கிராமப் பெண்ணுக்கு வாய் சிவந்திருந்ததைக் காட்டியவர்கள் வெற்றிலைத் தட்டை எங்கேனும் ஒரு மூலையில் தானும் காட்டியிருந்தால் வாயிலிருந்தது என்ன வெற்றிலைச் சாயமா அல்லது 'லிப்ஸ்டிக்கா' என்ற சந்தேகம் தோன்றித் திணறியவர்கள் தப்பிப் பிழைத்திருக்கலாம். பின்னணி இசை பரவாயில்லை.



'கலியாணத் தரகன்' நாடகத்தில் ஒரு கட்டம்

பணத்துக்காகவும் பதவிக்காகவும் செய்த கல்யாணம் குலைகிறது. குணத்துக்காக செய்தது நிலைக்கிறது, குடும்பம் ஒழுங்காக நடக்கிறது. நாடகம் வெளிப்படுத்தும் கருத்து இதுதான். தரகர் பணத்துக்காக அல்லாமல் லட்சியத்துக்காகத் தொழில் செய்கிருர்; புதுமைத் தரகர். அவரைப்போன்றுர் இருந்தால் வயதுவந்த ஆண் பெண்களுக்கு என்ன கவலை?

நாடகத்தில் செல்வி இராஜநாயகி ராஜாவின் மூன்று நடனங்களும் இடம் பெறுகின்றன.

—கே. கே. ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருக்கள் குடும்பத்துக்கு அன்பர்கள் நிதி உதவி

கடந்த மே-ஜூன் மாத இனக் கலவரத்தின் போது பாணந்துறைச் சைவக் கோயில் குருக்கள் (பிரம்மஸ்ரீ சுந்தரராஜக் குருக்கள்) காடையர்களால் கொல்லப்பட்டதும் அதன் காரணமாய் அவரது இளம் மனைவி இராஜேஸ்வரி அம்மாளும் கைக் குழந்தையும் அனுதரவாய் இருந்து அல்லல் படுவதும் நமது நேயர்களின் உள்ளத்தைத் தொட்டிருப்பதாகத் தெரிகிறது.

சில வாரங்களுக்கு முன்னர் மலைநாட்டுச் சகோதரி இராசம்மா அந்தக் குடும்ப உதவிக்காக நிதி (ரூபா 37-00) சேர்த்து அனுப்பியிருந்தார். இப்போது முறக்கட்டான்சேனை அன்பர் மு. சுப்பராமன் ரூபா 10-00ம் மருதானை நேயர் சு. ஞானசபேசன் ரூபா 10-00ம் கொழும்பு அன்பர் பொ. பாலசுப்பிரமணியம் ரூபா 5-00-ம் அனுப்பிவைத்திருக்கிறார்கள்.

இன்னும், தலைமன்னார் நேயர் தி. சுப்பையா பலரிடமிருந்தும் ரூபா 67-30 திரட்டி குருக்கள் குடும்பத்தினரிடம் சேர்ப்பிக்கும்படி சுதந்திரனுக்கு அனுப்பியுள்ளார்.

நிதி அளித்தவர்களும் அவர்கள் கொடுத்து உதவிய தொகையும் வருமாறு:

ச. அண்ணுச்சாமி ஐயர் 5-00, க. வயிரமுத்து 2-00, சி. அந்தோனியாகுரூஸ் 2-00 ச. பரமேஸ்வரி 3-00, எஸ். கந்தையா 2-00, ச. தங்கராஜா 5-00, சோ. சடாட்சரம் 5-00, ஜே. ஜே. இராசநாயகம் 5-00, தி. சுப்பையா 5-00, தி. இன்னாசிமுத்து 5-00, பூபாலசிங்கம் 2-00, எஸ். கந்தசாமி 1-00, சி. நாகரத்தினம் 5-00, கே. சி. அப்துல்லா 2-00 எச். கே. 2-00, என். எம். ராஸ் -50, எம். பழனி -50, ஏ. சினிபக்கீர்-50, ஏ. சாகுல் ஹமீது-50, ஆர். ராமு -50, இபுராமீசா-50, எம். வி. செய்யது-50, ஏ. நடராசா-50, அரவப்பு-50, ஆர். வி. மாரிமுத்து-50, எம். முனியாண்டி-50, கே. சேகுதாவ்து-50, எஸ். முத்துவேல் -50, எஸ். தாசன்-50, கே. எம். சீனி ஆபிள்-50, கே. வேல்-50, ஆர். கோவிந்தன் -25, அ. அந்தோனி-25, டி. லத்தீப்-25, பி. குமாரசாமி -25, எம். நெய்னுமுகமது -25, பி. எஸ். மணி -25, எல். சூசை-25, எம். நசரெத்-25, என். சண்முகம்-25, பி. செல்லையா-25, எஸ். முத்துவேல் -25, எம். முனியாண்டி-50, ஏ. சந்தோசம்மை-50, என். நாகலிங்கம்-50, ஏ. அப்துல் ரசாக்-25, ஏ. ஜகுப்பிபிள் ஜாநிக்-30, எஸ். ராமசாமி -50, பி. பொன்னையா-50, வி. பிரான்சிஸ்-50, பி. என். சாகுல் ஹமீது-25, எம். ஹனிபா-25, எம். முத்தையா -50, மதார்மொகிதீன்-50, கே. சகுல்ஹமீது-50.

மேற்படி 55 பேருடைய ரூபா 67.30-ம் முதலில் குறிப்பிட்ட மூவருடைய ரூபா 25-ம் ஆக மொத்தம் ரூபா 92-30 இராஜேஸ்வரி அம்மாளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சைவ சமயப் பெரியார்கள் என்று முத்திரை பதித்துக் கொண்டவர்களும், தம்மைச் சமூகசேவையாளர் என்று காட்டிக்கொள்பவர்களும், சமய ஆலோசனைச் சபைகளில் இடம் பிடித்துக் கொண்டு அன்புத் தத்துவ உரைகளைத் திருவாய் மலர்ந்தருளுபவர்களும் கூடச் செய்யாத—பிறரையாவது செய்யச் சொல்லாத அரிய செயலை நம் நேயர்கள் தாமாக நினைத்துச் செய்வது கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். பெருமை கொள்கிறோம்.

செத்த சைவக் குருக்களின் ஞாபகார்த்தமாக அன்னாரின் உருவப்படத்தை வசதியான இடங்களிலெல்லாம் தொங்கப்போட்டு வையுங்கள் என்று புத்தி சொன்னார்கள் அவர்கள்.

செத்தவரின் படத்தைத் தொங்கப்போட்டுப் பூசை செய்தால், வாழ வேண்டியவர்கள் வகையில்லாது தவிப்பது நின்று விடாது; அவர்கள் வயிறு நிரம்பிப் போகாது என்பதை அறிந்த நமது நேயர்கள் நிதி உதவி அளித்து உருப்படியான சேவை செய்ய முன்வந்துள்ளார்கள். படத்தைத் தொங்கப்போடச் சொன்னவர்கள் நேயர்களின் இந்தச் செயலைக் கண்டு நிச்சயம் தமது தலையைத் தொங்கப் போடாமல் இருக்க முடியாது. சபாஷ் நேயர்களே! வாழ்க உங்கள் நல்ல உள்ளம்!! வளர்க உங்கள் கொடைப் பண்பு!!!

சரி, இனிக் குருக்கள் குடும்பத்துக்கு நிதி உதவி அளிக்க இருப்பவர்களுக்கு ஒரு வார்த்தை. அனுப்புவதையெல்லாம் நேரடியாகக் குருக்கள் குடும்பத்துக்கே அனுப்பி வையுங்கள்.

விலாசம்:

திருமதி இராஜேஸ்வரி
சுந்தரராஜக் குருக்கள்,
இல: 12, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இது சம்பந்தமாகச் சுதந்திரனுக்கு இனிமேல் ஏதாவது பணம் அனுப்பப்படுமானால் சுதந்திரன் அதற்குப் பொறுப்பேற்கும் நிலையில் இல்லை என்பதை நேயர்கள் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டுகிறோம்.

—ஆசிரியர்

## மக்கள் குரல்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நேரியுடன் மேடு பள்ளங்களை உடைய ரஸ்தாவிலே செல்ல வேண்டும்.

3. தயால் கந்தோர். இது கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சென்ற வருஷத்திலேற்பட்ட வெள்ளத்துடன் வெள்ளமாய், நடவடிக்கைகளும் சென்று விட்டன.

4. பாடசாலையில் பெண் ஆசிரியை இல்லை. 70 க்கு மேற்பட்ட மாணவிகள் படிக்கும் இப் பாடசாலையில் ஒரு பெண் ஆசிரியைதானும் இல்லையென்றால்...?

5. போதிய தளபாடமுமில்லை.

இந்தக் குறைபாடுகள் அனைத்தும் தீர்க்கப்படும் நாள் எந் நாளோ?

—அ. அன்ரனி,
—சூ. மனோகரன்பெர்னண்டோ,
—ச. கோபாலபிள்ளை,
மூதூர்.

## உறுபசியும்....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுப் பிணியையும் பெற்று வாழும் மக்களைப் பார்த்து விட்டால் அவர்கள் வாழ்க்கை 'சேர்ந்து இயங்கும்' நாட்டை போலவே காட்சி யளிக்கிறது. அரச போகத்தையும் பெற்று பகைவர்களின் அச்சத்தால் கவலைகளையும் பெற்ற மன்னர்களைப் பார்க்கும்போது அவர்கள் 'சேர்ந்து இயங்கும்' நாட்டைப்போலவே தோன்றுகிறார்கள். இதனாலேயே ஆசிரியர் திருவள்ளுவர் 'சேராதியல்வது நாடு' எனக் கூறினார் போலும்!

"உறுபசியும் ஓவாப்பிணியும்
செறுபகையும்
சேராதியல்வதுநாடு"

### நீங்காக் கடமை

இந்த இருபதாம்நூற்றாண்டில் வாழ்கின்ற அரசியல் அறிஞர்கள் பலரும் ஒரு நாடு எப்படியிருந்தால் நல்லது என்பதை ஒப்புக்கொள்ளும்படி 1987 ஆண்டுகளுக்கு முன்பே கூறியிருப்பவன் ஒரு தமிழறிஞர் என்று எண்ணும்போது தமிழ் நாட்டில் பிறந்த, தமிழ் மொழிக்குரிய தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் உலக மக்கள் முன்பு பெருமையடைய உரிமையுடையவர்கள் என்றே தோன்றுகிறது.

தமிழ் பிறந்த நாட்டிற் பிறந்த நாம், வள்ளுவர் தோன்றிய நாட்டிற் பிறந்த நாம், குறள் வாழும் நாட்டில் பிறந்த நாம் வள்ளுவர் கண்ட நாட்டைக் காண வேண்டாமா? என்று எண்ணுங்கள். பிறகு துணியுங்கள். அடுத்தது செய்யுங்கள். குறளில் காணும் நாட்டை உலகில் காணும்படி செய்யுங்கள். அது நூல் தோன்றிய நாட்டின் வழித்தோன்றிய மக்களின் நீங்காக் கடமைகளில் ஒன்றாகும்.


கெயிட்டி (கொட்டாஞ்சேனை)

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

பிரேம் நஸீர்,
எம். என். ராஜம்,
பி. கண்ணும்பா

நடிக்கும்



தாயின் அன்பு
(அல்லது பெரிய கோயில்)

நடனம்!
சாயி—சுப்புலக்ஷிமி

செல்லமஹால்

5-வது வாரம்

ஸ்ரீ ராம்

நடிக்கும்

மாய மனிதன்

வியாபாரத்திற்கழகு
விளம்பரம் செய்தல்




எஸ். எஸ். ராஜேந்திரன், பி. சரோஜாதேவி,
பிரேம் நஸீர், கிரிஜா, வி. கே. ராமசாமி,
டி. பாலசுப்பிரமணியம், சாயிராம் நடிப்பது.

சென்ட்ரல் ஒடியன்
(மருதானை) (கல்கிசை)

ராணி
(யாழ்ப்பாணம்)

இன்று பகல் 10, பிற்பகல் 2 மணிக்கும், மாலை 6 மணிக்கும், இரவு 9-30;
திங்கள் முதல் 6 மணிக்கும், இரவு 9-30 க்கும் காண்பிக்கப்படும்.

ஜோதி (திருகோணமலை)

இன்று பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30 க்கும் திங்கள் முதல் மாலை 6, இரவு 9-30 க்கும் காண்பிக்கப்படும்.

லிபர்ட்டி (பதுளை)

இன்று 10, பிற்பகல் 2-30, மாலை 6, இரவு 9-30 க்கும் திங்கள் முதல் தினசரி 6, 9-க்கும் காண்பிக்கப்படும்.

கூடி வாழ்ந்தால்
கோடி நன்மை

பின்னணி:
டி. எம். சௌந்தரராஜன், ஸ்ரீநிவாஸ், எஸ். ஜானகி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டது கற்க.....

இந்தப் பகுதிக்கு நேயர்கள்கூட வினுக்களும் விடைகளும் எழுதி அனுப்பலாம். ஏற்றவை அவரவர் பெயர்களுடன் வெளியிடப்படும்.

ஆசிரியர்: சுதந்திரன்

1. நாடுகள் நிலத்தில் எல்லை வைத்துச் சொந்தம் பாராட்டுவது போல் கடல்களிலும் உரிமை கொண்டாட முடியுமா?

2. குதிரைப் பலம் (Horse Power) என்றால் என்ன?

—க. மகதலன், கொழும்பு.

3. ஒரு கலன் சுத்மான நீரின் எடை என்ன?

4. பறவைகளில், அதிகமாகத் தண்ணீரை உட்கொள்ளும் வழக்கம் உடையது எது?

—எஸ். எம். எஸ். ஏ. மௌலானு, வாழைச்சேனை.

5. இலங்கையில் எப்பொழுது ரூபா என்ற நாணயப் பழக்க முறை ஏற்படுத்தப்பட்டது?

—எஸ். தேவபால சிங்கம், யாழ்ப்பாணம்.

## ............பண்டிதனுவான்

# இலக்கியக் காட்சி

பழங் கால இலக்கியங்களிற்தான் பல்லாயிரம் காட்சிகளைக் காணலாம் என்பது உண்மைதான். ஆனுல் இக்கால இலக்கியங்களிலும் காட்சிகள் இல்லாமற் போகவில்லை. பழமிலக்கியங்களைப் பயில்வது பாமரர் யாவராலும் முடியாது. இக்கால இலக்கியங்களை எவரும் பயிலலாம். நன்ருக விளங்கும். இப்போது தமிழகத்தில் அரிய இலக்கியத்தைப் படைத்துத் தந்து கொண்டிருக்கின்ற ஒப்பற்ற புரட்சிக் கவிஞரான பாரதிதாசனுர் ஓர் காட்சியைப் படம்பிடித்துக் காட்டுகிருர். இதோ!

"பொழுது மறையும் வேளை. கவிஞர் வெளியான ஒரு இடத்தில் நின்று சுற்றி வரப் பார்க்கின்ருர். உலகம் இருளாற்கருகுகின்றதுவானமும் இருள்தான். நாற்றிசையும் இருளே. சிறிது நேரம் செல்லக் கீழ்த் திசையில் அவ்விருள் சிரித்துப் பல்லொளியைக் காட்டுவதுபோலுள்ளது. என்னவென்று பார்க்கின்ருர். மதி உதிக்கிறது. அதன் வனப்பில் மனதைப் பறிகொடுத்த கவிஞர் அதனைப் பார்த்து அதனேடு பேசுகிருர். பல பல நினைத்துக் கேள்விகளை கேட்டுப் பார்க்கின்ருர். இந்த இயற்கை அன்னை இவ்வுலகிலுள்ள அழகு முழுவதையும் சிந்த விடாமற் சேகரித்து எடுத்து உருண்டையாக்கிக் குளிரும் ஏற்றி ஒளியும் ஊட்டி இந்தாவென்று சொல்லி வானிலே உன்னை விட்டாளோ? நீ இந்த நீல வானம் என்ற உடையுள் உன் உடம்பெல்லாவற்றையும் மறைத்து விட்டு முகத்தை மட்டுந்தானே நிலவு என்று காட்டுகிருய்? ஏன் உன் உருவம் முழுவதையும் காட்டி விட்டால் இவ்வுலகம் அன்புணர்ச்சி அதிகரிப்பால் இறந்து விடுமா? நீ என்ன வானச் சோலையிலே பூத்த பெரும் பூவா? அல்லது வெள்ளிப் பாற்குடமா? அல்லது சாகாச் சஞ்சீவி அமிர்தம் ஊறும் தானமா? அல்லது காலையில் சூரியனுய் உருவெடுத்து வந்த நீதான் கடலும் மூழ்கிச் சூடு மாறிக் குளிரான ஒளியுருண்டையாய் மாறி வந்திருக்கிருயோ? என்றெல்லாம் தன் மனதிற் தோன்றிய உணர்ச்சியெண்ணங்களையெல்லாம் வினுவிப் பார்க்கின்ருர்." அவ்வளவு தூரம் சந்திர உதயக் காட்சி அவர் மனதைக் கவர்ந்து விட்டது. அக் காட்சியை நாமும் பார்க்கும்படி கவிதைப் படமாக்கித் தந்துவிட்டார். நம் மனதையும் கவருகிறதாவென்று படித்துப் பார்ப்போம்.

"அந்தியிருளாற் கருகும்
உலகுகண்டேன்
அவ்வாறே வான் கண்டேன்
திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான்
சிரித்ததுண்டோ?
பெருஞ் சிரிப்பின்
ஒளிமுத்தோ நிலவே நீதான்?
சிந்தாமற் சிதருமல்
அழகையெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி
ஒளியுமூட்டி
இந்தாவென்றே இயற்கை
அன்னைவானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த
வண்ணந்தானே?
நீலவான் ஆடைக்குள் உடல்
மறைத்து
நிலாவென்று காட்டுகின்ருர்
ஒளிமுகத்தைக்
கோலமுழுதுங் காட்டிவிட்டாற்
காதற்
கொள்ளையிலே இவ்வுலகஞ்
சாமோ? வானச்
சோலையிலே பூத்த தனிப் பூவோ
நீதான்
சொக்க வெள்ளிப்
பாற்குடமோ? அமுதஊற்றோ?
காலைவந்த செம்பரிதி கடலில்
மூழ்கிக்
கனல் மாறிக் குளிரடைந்த
ஒளிப்பிளம்போ?"

ஆம், எம்மனதை மட்டு[illegible] கவரக்கூடிய பாடல்கள்தான். கவிஞர் வாழ்க.

—சோ. இராஜேந்திரம்

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 7.

பெயர்..............................................................

பாடசாலை..........................................................

விலாசம்............................................................

..................................................

.................................... ....................................

பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்




# கொக்கரக்கோ.....!

(சென்ற வாரத் தொடர்ச்சி)

"மனிதர்களைப் பற்றி நீங்கள் மறந்துவிட்டீர்கள்" என்று கூறியது சேவல். "நீங்கள் எழுந்திருக்கும் போதே கூடவே எழுந்திருந்து, 'சூரியனே! என்னுடைய பயிர் பச்சைகளின் மீது அன்பு காட்டுங்கள்' என்று வேண்டும் கிழ விவசாயியை மறந்து விட்டீர்களே."

"மனிதர்களினுல் எனக்கு ஆகவேண்டியது என்ன?" என்று வினவினுன் சூரியன். "மனிதர்கள் அழிந்து போனுல் என்னுடைய ஒளி குறைந்து விடுமா என்ன?"

"ஆம், நிச்சயமாக உங்களுடைய ஒளி கொஞ்சம் குறைந்து விடும்" என்று பதில் கூறியது சேவல். "சற்றே நினைத்துப் பாருங்கள். மனிதன் வெட்டும் ஒவ்வொரு குளத்திலும் நீங்கள் எவ்வளவு பிரகாசமாக பிரதிபிம்பிக்கிறீர்கள். ஒவ்வொரு நாள் காலையிலும் மனிதனுல் சாகுபடி செய்யப்பட்ட நிலத்தில் பயிர் பச்சைகளின்மீது படிந்திருக்கும் பனித்துளிகளில் எவ்வளவு அழகாக பிரகாசிக்கிறீர்கள்.

"மனிதர்கள் அழிந்து போனுல் உலகம் பூராவுமே ஒளி குன்றிப்போகும். மனிதனுடைய கைகளினுல் செய்யப்பட்ட அனைத்திலும் பிரகாசிக்கும் ஆயிரக்கணக்கான சூரியன்களை நீங்கள் காண மாட்டீர்கள்.'

ஆனுல் சேவலின் வேண்டுகோளுக்கு சூரியன் இணங்குவதாயில்லை.

"நன்ருகப் பேசுகிருய் நீ. ஆனுல் ஒரு விஷயத்தை மறந்து விடாதே. நான் எனக்காகத்தான் வாழ விரும்புகிறேன்—இதரர்களுக்காக அல்ல. எனவே நன்ருக நெடுநேரம் ஓய்வெடுத்துக்கொள்ள விரும்கிறேன்." என்று கூறினுன் சூரியன்.

"தனக்காக மட்டும் வாழ்பவன் இதரர்களைப் பொறுத்த மட்டில் இறந்து விட்டான்!" என்று சேவல் எச்சரித்தது. "இது சூரியனுன உங்களுக்கல்லவா இதரர்களைக் காட்டிலும் நன்ருகத் தெரிந்திருக்க வேண்டும். நன்கு நாள் பூராவும் வேலை செய்த பின்னர்தான் நீங்கள் நன்ருக ஓய்வெடுத்துக்கொள்ள முடியும்."

விவாதத்தில் சேவலை வெல்ல முடியாது எனக் கண்டுகொண்டான் சூரியன். எனவே வேறு வழியின்றி வானவீதியில் புறப்பட்டு மறுபடியும் தன்னுடைய வேலையைச் செய்யத் தொடங்கினுன்.

அன்றிலிருந்து சேவல் ஒவ்வொரு நாளும் அதிகாலையிலேயே எழுந்திருந்து உரக்க பாடத் தொடங்குகிறது. கொக்கரக்கோ!...கொக்கரக்கோ!!

(முற்றும்)

# காலம் போதாதே!

நாம் வாழும் உலகமோ விந்தையான உலகம். அன்றிலிருந்து இன்றுவரையுள்ள உலக சரித்திரத்தை ஆராய்து பார்த்தால் யாவும் விந்தையாகவே தோன்றும். இன்றைய உலகில் பார்ப்பவையெல்லாம் விந்தையாகவே உள்ளன. கேட்பவையெல்லாம் புதுமையாகவே உள்ளன. படிப்பவையெல்லாம் நூதனமாகவே இருக்கின்றன. அறிபவையெல்லாம் அதிசயமாகவே புலப்படுகின்றன.

நாம் பிறந்ததிலிருந்து இன்றுவரையில்-இச்சொற்ப காலத்தில் எவ்வளவோ புதுமைகளைப் பார்த்திருப்போம். எத்தனையோ அற்புதங்களைக் கேட்டிருப்போம். எவ்வளவோ அறிவு நூல்களைப் படித்திருப்போம். உலகம் நாளாந்தம் மாறிக்கொண்டிருக்கின்றது. எல்லாப் பொருட்களும் நொடிக்கு நொடி மாறியவண்ணமே உள்ளன. விஞ்ஞானமும் விரைவாய் ஓடிக்கொண்டிருக்கிறது. நமது குறுகிய காலத்துள் இவ்வளவு புதுமைகளைக்கண்டிருந்தோமானுல் உலகு உண்டான நாளிலிருந்தே யாமும் பிறந்திருந்தோமாயின்-இன்றுவரை வாழ்ந்திருந்தோமாயின் எவ்வளவு புதுமைகளைக் கண்டிருப்போம்?

நாம் அறிந்தவையோ மிக மிகக் குறைவு. ஒரு பிடி மண்ணிலுங்குறைவு. அறியாதவையோ மிக மிக ஏராளம். உலகிலுள்ள மண்ணிலுங்கூட இச்சிறிய காலத்தினுள் யாம் கண்டவை,கேட்டவை, உண்டவை, உணர்ந்தவை, முகர்ந்தவை சொற்பமே. ஆயினும் அவைமூலம் யாம் எவ்வளவோ ஆனந்தம் அடைந்துள்ளோம்.

இன்னும் பல காலம் இருந்தோமாயின் எவ்வளவோ அதிசயங்களைக் காணலாமல்லவா? எவ்வளவோ ஆனந்தம் அடையலாமல்லவா? கட்டை வண்டியிலிருந்து கண்ணுக்குப் புலப்படாத செய்மதிவரையில் எவ்வளவோ விஞ்ஞானப்பொருட்களைக்கண்டுள்ளோம். கானுவிடினும் கேட்டுள்ளோம்-அறிந்துள்ளோம். தொல்காப்பியத்திலிருந்து சுவையுள்ள பாரதிதாசன் பாடல்கள்வரை படித்துள்ளோம்-மகிழ்ந்துள்ளோம். இன்னும் பல விஞ்ஞானக் கருவிகள் தோன்றுமே! பல விஞ்ஞான விந்தைகள் நடக்குமே! பல அறிவு நூல்கள் தோன்றுமே! அறிவு பெருகுமே! ஆனுல் எமது காலம் சொற்பந்தானே? கடைசி ஒரு ஆயிர வருடமாவது வாழவேண்டாமா? எனக்கவலையுற வேண்டியுள்ளது.

உண்மையில், மரணத்தை நினைத்தால்-நமது வாழ்காலத்தை எண்ணினுல் துக்கமே வருகின்றது. நெடுங்காலம் வாழ்ந்தால் எவ்வளவோ காட்சிகளைக்கண்டு களிப்புறலாமே. யாம் அறியவேண்டியவையோ அதிகம். காலமோ சொற்பம். அறிவுக்கு எல்லை ஏது? ஆயுளுக்கோ எல்லை இருக்கிறதே! என்ன செய்வோம்? இயற்கையன்னையின் அமைப்பு அப்படி! அதையிட்டுக் கவலைப்பட்டு ஆவதென்ன? உலகை அறிந்து உவகை கொள்ள நம் காலம் போதாதே! என் செய்வது? உயிர் உள்ளவரை அறிவதை அறிந்து அகமகிழ்வோமாக!

—எம். எஸ்.

## கண்டது கற்கப் பண்டிதனுவான்

(விடைகள்)

1. கடல்கள் உலக நாடுகள் எல்லாவற்றிற்குமே சொந்தம். ஆனுல் கடலோடு சேர்ந்தாற்போல இருக்கும் நாடுகளுக்கு அந்தந்தக் கடல்களில் மூன்று மைல் வரையுள்ள பிரதேசம் தனி உரிமை என்று வரையறுத்து வைக்கப்பட்டுள்ளது. இவை தவிர்ந்த ஏனைய கடல் பரப்பை ஆங்கிலத்தில் ஹை சீஸ் ((High Seas) என்று அழைப்பார்கள். இதுதான் பொதுவுடைமை.

2. இது சக்தியைக்குறிப்பது. பொதுவாக ஒரு மெஷின் இத்தனை குதிரைப்பலம் உள்ளது என்பார்கள். 33,000 இருத்தல் எடையை ஒரு நிமிஷத்தில் 1 அடி உயரத்துக்கு தூக்கத் தேவைப்படும் சக்தியை ஒரு குதிரைப் பலம் என்று கணக்கிட்டிருக்கிருர்கள். உவாட் (Watt) என்பவர் இதன் ஆதிகர்த்தா ஆவார்.

3. பத்து இருத்தல்.

4. புரு.

5. 1911-ம் ஆண்டு நத்தார் தினத்தன்று. அதாவது 25-12-1911ல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகெலாம் வாழும் தமிழர் ஒன்றுபட வேண்டும்

## திருவள்ளுவருக்கு பெருவிழா

### ஆண்டிலொரு தடவையேனும் எடுத்து புகழ் நாட்டுவது அனைவரதும் கடமை

### மே 22-ல் இம்முறையும் கொண்டாட தமிழ் மறைக் கழகம் வேண்டுகோள்

"உலகம் போற்றும் ஒப்புயர்வற்ற திருக்குறளைச் செய்தருளிய திருவள்ளுவருக்கு உலகெலாம் வாழுந் தமிழர் எவ்வித வேறுபாடுமின்றி ஒன்றுபட்டு ஆண்டுதோறும் ஒருநாளிற் பெருவிழா எடுக்கிறார்கள் எனும் புகழுரையை நிலை நாட்டுதற்கு உலகெலாம் வாழும் தமிழர்கள் ஒன்றுபட வேண்டும். இவ்வாண்டும் மே 22-ல் (வைகாசி அனுடம்) எங்கணும் வள்ளுவர் விழாவைக் கோலாகலமாகத் தமிழர்கள் கொண்டாடும்படி கேட்டுக்கொள்கிறோம்"

திருவள்ளுவர் திருநாளையொட்டித் தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் மேற்படி வேண்டுகோள் அடங்கிய அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:—

தமிழ்மறைக் கழகம் சென்றபல ஆண்டுகளாக வைகாசி அனுடத்தைத் திருவள்ளுவர் திருநாளாகத் தமிழ் கூறு நல்லுலகமெங்கும் கொண்டாடச் செய்து வருகின்றது. தமிழகம், இலங்கை வடஇந்தியா, மலாயா, சிங்கப்பூர், பர்மா, தென்னாபிரிக்கா, பீச்சித்தீவு, மொறிசியசு முதலிய பல நாடுகளிலும் வாழும் தமிழர்கள் ஒன்றுபட்டுத் திருவள்ளுவருக்கு வைகாசி அனுடத்தில் விழா எடுக்கிறார்கள். கொழும்பு, சென்னை, திருச்சி, டில்லி, சிங்கப்பூர், பி. பி. சி. (லண்டன்) முதலிய நிலையங்களும் எமது முயற்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் நல்கி வருகின்றன.

"ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளன்று தமிழர்கள் ஒவ்வொருடைய வீடும் விழாக்கோலம் கொள்ளல் வேண்டும் என்பதே எமது கழகத்தின் நோக்கமாகும். எனவே உலகெலாம் வாழுந் தமிழர்களை ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளைத் தத்மம் வீடுகளிற் கொண்டாடுமாறு வேண்டிக்கொள்கிறோம். இப்பெரும் செயலை நிலைநாட்டுவதற்கு ஆவன செய்தல் தமிழ்கூறு நல்லுலகெங்குமுள்ள தமிழ்ச் சங்கங்கள், மன்றங்கள், கல்வி நிலையங்கள் முதலியவற்றின் கடமையாகும்.

"சென்ற ஆண்டுகளில் எமது முயற்சிக்கு ஆதரவளித்தது போல், இனிமேலும் ஒவ்வோராண்டும் தமிழ் மக்களுக்குத் திருவள்ளுவர் திருநாளை நினைவூட்டியும், சிறப்பு மலர் வெளியிட்டும் ஊக்கமளித்தலே, தமிழ் மக்கள் நடத்தும் பத்திரிகைகள் இப்பெருந்தொண்டுக்குச் செய்யும் பேருதவியாகும்.

"கி. பி. 1969 இல் திருவள்ளுவர் தொடர் ஆண்டின் ஈராயிரம் ஆண்டு நிறைவினை எங்குஞ் சிறப்பாகக் கொண்டாடுமாறுங் கேட்டுக்கொள்கிறோம். திருவள்ளுவர் தொடர் ஆண்டைத் தமிழர்கள் யாவரும் வழக்குக் கொண்டுவருதலும் இன்றியமையாதது. திருக்குறள் இன்னும் மொழி பெயர்க்கப்படாத மொழிகளில், அதனை மொழிபெயர்ப்பித்தற்கு அம்மொழிகள் வழங்கும் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் முயல வேண்டும் என்றுங் கேட்டுக் கொள்கிறோம்."

---

### ஏருவூரில் கலை விழா

ஏருவூர் தமிழ் வாலிபர் மன்றத்தினரால் கடந்த 14-4-1959-ல் ஒழுங்கு செய்யப்பட்ட கலை விழாவுக்கு, ஏ. வ. கிராமச் சங்கத் தலைவர் திரு. பொ. மாணிக்கவாசகர் தலைமை வகித்தார்.

ஏருவூர் 4-ம் குறிச்சி மைதானத்தில் நடைபெற்ற இக் கலை விழாவில், விளையாட்டுப் போட்டிகளும் இடம் பெற்றன.

சிறியோர் முதல் முதியோர்வரை உற்சாகத்துடன் விளையாட்டுகளிலும் நாடக, நடன, விகட நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றினர்.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தலைவரால் பரிசுகள் வழங்கப்பெற்றன.

---

### தமிழ் வாலிபர் மன்றம்

ஏருவூர் தமிழ் வாலிபர் மன்றத்தினரால் 14-4-59-ல் நடத்தப் பெற்ற புத்தாண்டு கலைவிழாவின்போது, "அற்புத நீதி" என்ற நாடகம் இடம் பெற்றது.

மகாகவி ஷேக்ஸ்பியரின் "ஷைலக்" என்ற கதையைத் தழுவி எழுதப்பட்ட இந் நாடகம் மேற்படி மன்ற வாலிபர்களால் மிகத் திறமையாக நடித்துக் காண்பிக்கப்பெற்றது.

நாடகத்தில் குரூஸ், நாகராசா, வேதாரணியம், தம்பித்துரை, மஸ்நெட்வாஸ், கனகசுந்தரம், வடிவேல் ஆகியோர் திறம்பட நடித்தனர்.

---

### விநாயகர் ஜன சமூக நிலையம்

கரவை சிந்தாமணி விநாயகர் சனசமூக நிலையத்தின் 5-வது ஆண்டு விழா கடந்த 15-4-59-ல் தச்சன்தோப்பு விநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்றது. விழாவுக்கு வித்துவான் க. நடராசா தலைமை தாங்கினார்.

விழாவில் பிரதம பேச்சாளராகவிருந்த பண்டித வித்துவான் க. கி. நடராசன் திருக்குறள் என்னும் விஷயம் பற்றிப் பேசுகையில் "திருக்குறளைப் படிக்காதவர்கள் தமிழராக மாட்டார்" என்று கூறினார்.

இவ் விழாவில் 'நாடக கவிமணி' எம். வி. கிருஷ்ணாழ்வார், இலங்கை நாடக சபையின் செயலாளர் கா. சிவத்தம்பி, நாவலாசிரியர் இளங்கீரன், பண்டிதை சத்திய தேவி துரைசிங்கம், கட்டைவேலிக் கிராமச் சங்கத் தலைவர் எஸ். ஜெயசிங்கம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் நிலையத்தின் காரியதரிசி சி. நடராசா நிலைய அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

---

## நீலவேணி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வளவுதான். அந்த உணர்ச்சியற்ற மனித மிருகம், தன் முரட்டுக் கரத்தை ஒரு தடவை தன் பேய் விழிகளால் பார்த்துக் கொண்டது.

அஜந்தாவின் வாழைக் குருத்துப்போன்ற கழுத்தையும் பார்த்துக்கொண்டது.

'குவீல்!' என்றஒரு ஹீனமான சத்தம் மட்டும் அஜந்தாவின் தொண்டைக்குள்ளிருந்து கேட்டது. அவ்வளவுதான்!

உணர்ச்சி கொப்பளிக்க-உயிர்ப் பதுமைபோல் ஜாலம் செய்து ஒடித்திரிந்த அஜந்தா உயிரற்றுப் பிணமாகச் சாய்ந்தாள்.

மரத்துப்போன பாதக உள்ளம் கொண்ட தணிகாசலம் அஜந்தாவின் பிணத்தைப் பார்த்து அலட்சியமாகச் சிரித்து விட்டு அங்கிருந்து விர்ரென்று ஸீபேஸ் ஹோட்டலுக்கு விரைந்தான். ஒன்றும் தெரியாதவன் போல் விருந்தில் கலந்து கொண்டான்.

அஜந்தாமேல் தணிகாசலத்திற்கு இருந்த வஞ்சம் தீர்ந்து போயிற்று. கொலைக் குற்றம் தன்மேல் சுமத்தப்படக் கூடாது என்று முன்யாக்கிரதையாக, அவளுடன் அன்னியோன்னியமாகப் பழகினான்.

அன்றையப் பொழுதை அவன் அவ்வளவு நெருக்கமாக அவளுடன் கழித்ததும் ஒரு நோக்கத்துக்காகவே.

கொலை செய்தவன் பலாத்காரம் செய்வதற்காகவே அவளைக் கொன்றிருக்க வேண்டும் என்று சனங்களும் சட்டமும் நம்ப வேண்டுமென்ற ஒரே காரணத்துக்காகவே அன்று அவன் அவ்வளவு 'ஊடாட்டமாக' நடந்துகொண்டான்.

வைத்தியநாதனின் பழைய வரலாறுகளைத் தொடர்புபடுத்தி, அவன் அஜந்தாமீது கொண்டிருந்த அன்பைச் சாட்சி வைத்துத் தன்னைத் தப்பித்துக்கொள்ள அவன் கையாண்ட சூழ்ச்சி வெற்றி பெற்று விட்டது!

ஃ

'ரிகார்டிங் மெஷின்' மூலம் இந்தத் தகவல்கள் நமக்குக் கிடைத்தன. இந்த உண்மையை நமக்கு இவ்வளவு இலகுவாகத் தத்ரூபமாக விளக்கிய நிழல்மனிதனுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு நாம் முன்னர் சொன்ன பிரகாரம், ரத்மலானை விமான நிலையத்துக்கு வருவோம்.

(தொடரும்)

---

## மகாவலியின் . . .

(10ம் பக்கத் தொடர்ச்சி)

ஞல் நீ மணமானவளா? நீயா என் பத்மாவின் வாழ்க்கைக்கு எதிராக முளைத்தாய்?" வேலாயுதத்தின் இராட்சதக் குரல் விண்ணையே அதிரவைத்தது.

"உண்மை தெரிந்திருந்தால் நான் கல்யாணத்திற்குச் சம்மதித்திருக்கவே மாட்டேன். உங்களால் ஏற்பட்ட ஏமாற்றம் என்னைக் கல்லாக ஆக்கிவிட்டது. என்னால் ஒன்றையும் ஆராய முடியவில்லை."

சூடுபட்டுத் தப்பிய வேங்கையின் முன் நிற்கும் இளம் மான் போன்று, நின்றாள் நவமணி.

இப்போது அவன் ஒன்றும் பேசவில்லை; அவளும் ஒன்றும் பேசவில்லை.

அசையாத பொற்சிலை போல் அமர்ந்திருந்த நவமணியையே பார்த்துக்கொண்டிருந்தான்வேலாயுதம். சற்று முன் ஏற்பட்ட வெறி மாறியது. பார்வையில் கொடூரம் குறைந்தது. தண்மை மேவியது. அவளும் அவனையே பார்த்தாள். ஆத்திரம், அவமானம், ஏக்கம், எல்லாம் மாறிப் பச்சாத்தாபமே ஏற்பட்டது. அவளுடைய உடல் நடுங்கியபடிதான் இருந்தது. அவளுடைய அவசர புத்தி இன்று எத்தனை விபரீதங்களை ஏற படுத்தி விட்டது?

அமைதி விளைவித்த பயங்கரத்தைப் பொறுக்க முடியாது, வேலாயுதம் கேட்டான், "ஒன்று சொல்லுகின்றேன் நவமணி! கேட்கின்றாயா?"

"..............."

"ஏன் என்னை வெறித்துப் பார்க்கின்றாய்? நான் பேசுவது பிடிக்கவில்லையா?"

"அதெல்லாமில்லை...சொல்லுங்கள்" பெருமூச்சுடன் அவள் கூறினாள்.

"பத்மாவை "உன்" கணவனுடன் இணைத்து வைத்துவிடுவேன். அன்று அவனுடன் பேசியதிலிருந்து, பத்மாவிற்காக அவன் ஏங்கும் ஏக்கத்தைக் கண்டு கொண்டேன். பத்மா நிச்சயம் மகிழ்ச்சியுடன் வாழ்வாள். உன்னால்தான் அவனுடன் வாழ முடியவில்லை. என் வாழ்க்கையை மலர வைப்பாயா?" அவளுடைய பொற்கரங்களைப் பிடித்து அழுத்தினான் வேலாயுதம்.

உதறிவிட்டெழுந்தாள் நவமணி. பொங்கிய இதயம் கண்ணுள் புகுந்து கண்ணீராகக் கரைந்தது.

"என்னை மறந்து விடுங்கள் வேலு! நான்...வேறொருவரின்......"

அவளை இடைமறித்தான் வேலாயுதம். "உலகிலுள்ள எல்லோருமே இப்படித்தான் வாழ வேண்டுமென்று நான் கூறவில்லை. எங்கள் இருவரது நிலையும் வேறு. மற்றவர்களால் அதைப் புரிந்து கொள்ள முடியாது. நானே உன்னை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கும்போது, நீ ஏன் தயங்குகின்றாய்?"

"உணர்ச்சி வேகத்திலே உறுதி மொழிகளைக் கொட்டாதீர்கள். உங்கள் வாழ்க்கையை நீங்களே பாழடிக்காதீர்கள்..." எங்கோ பார்த்தபடி பேசினாள் நவமணி.

வேலாயுதத்தின் முகத்தைப் பார்க்க அவளால் முடியவில்லை. எரிமலை வெடிக்கும் முன்பே தண்ணீருக்குள் புதைந்துவிட விரும்பினாள். எழுந்து ஓடினாள் ஆற்றை நோக்கி.

எட்டிப் பிடித்தான் அவன். அவனையும் இழுத்துக்கொண்டு விழுந்தாள் ஆற்றினுள். மகாவலியின் மடியில் மறுபடியும் இருவரும் கட்டிப் புரண்டனர். அவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளத் துடித்தாள். திமிறினாள். பிடித்த பிடியை அவனும் தளரவிடவில்லை.

பரிதாபமாகப் பார்த்தான் அவனை.

வேலாயுதம் கேட்டான், "நவம்! நீதான் உணர்ச்சி வசப்பட்டு உயிரை மாய்க்க முயல்கின்றாய். நீ அநியாயமாகச் சாவதிலே யாருக்கு என்ன இலாபம் ஏற்படப் போகின்றது?... கொஞ்சம் சிந்தித்துப் பார் நவமணி! நீ வேறொருவனுக்கு மாலையிட்டது உண்மைதான். ஆனால் மனைவியாக வாழவில்லையே! எனக்கும் நெஞ்சு உண்டு. நீதி எது, நியாயம் எது, ஒழுக்கம் எது என்பவற்றை உணரும் சக்தியும் அதற்குண்டு. நவமணி! அன்புதான் உலகில் நிலையானது. அன்பினால் கட்டுண்ட எங்களை ஒருவராலும் ஒன்றும் செய்துவிட முடியாது. அன்பினாலேயான புதிய உலகம் ஒன்றைச் சிருஷ்டிப்போம். அதிலே நீயும் நானும் முதல் பிரஜைகள்......" பிச்சைக்காரனின் குரலில் இருக்கும் பணிவு, அவன் குரலில் இருந்தது. அவனும் பிச்சைக்காரன் தான் அன்புப் பிச்சை கேட்டான்.

அவனுடைய உள்ளத்தின் ஒளி, அவளைத் தன்பால் இழுத்தது. சாகும் முயற்சியில் களைத்துப்போன அவள், அவனுடைய முகத்தை அண்ணாந்து பார்த்தாள்.

"நவமணி! இனி உன்னைத் தடுக்கவில்லை. நீ செத்துவிடு. ஆனால் கூடவே என்னையும் அழைத்துச் செல். வாழ்வின் இன்பத்தில் பங்கு கொள்ள முடியவில்லை. சாவின் அணைப்பிலேயாவது சாந்தியடைவோம்.... பத்மா எக்கேடாவது கெட்டுப் போகட்டும், அவளுடைய கணவனைப் பற்றி எனக்கு அக்கறையில்லை—உலகமே அழிந்து போகட்டும்......" வேலாயுதம் வாயைத் திறந்து ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவனுடைய முகத்தில் இவற்றைத்தான் கண்டாள் நவமணி. அவனுடைய இதயக் குமுறலை அவள் நெஞ்சு உணர்ந்தது.

வாழ வேண்டுமென்ற ஆசை அவளுக்கும் ஏற்படத் தொடங்கியது. யாருக்காக இல்லாவிட்டாலும், வேலாயுதத்திற்காகவாவது வாழ வேண்டும்!

வேலாயுதத்தின் கைகள் தன்னைச் சுமந்து கொண்டிருப்பதை இப்போதுதான் உணர்ந்தாள். அவள் உடம்பு புல்லரித்தது. புதுமணப் பெண்ணின் நாணம் அவளைக் கௌவியது.

"வேலு!"

ஆற்றின் சலசலப்பின் பின்னணியுடன் வேலாயுதத்தின் இதய வீணையை மீட்டினாள் நவமணி. எமனின் பாசக் கயிறாக வளைந்த மகாவலி, இப்போது இன்பப் படகின் துடுப்பாக மாறியது! அந்த இன்பபுரியிலே இவர்களை வரவேற்பதற்குப் பத்மாவும் அவள் கணவனும் காத்துக்கொண்டு நிற்கின்றார்களோ?

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் விரும்பும் 4-வது வாரம்!

# கிங்ஸ்லி பிளாஸா குயின்லன் நவா (கடைசி 4தினங்கள் மட்டும்)

## வெம்பிளி (கண்டி) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ஷாம்ரொக் (வென்னப்புவ) விஜயா (மட்டக்களப்பு)

## ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கேலியா) தீவொளி (நுவரெலியா)

## தாஜ்மஹால் (கல்முனை) நியூ சினிமா (குருநாகல்)

ஆகிய திரைகளில் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!



எம்ஜியார் பிக்சர்ஸ்

# நாடோடி மன்னன்

டைரக்ஷன்: எம்.ஜி.ஆர்

ஒளிப்பதிவு: G.K.ராமு

ஸ்டூடியோ: வாஹினி

கன்னித் தமிழரின் தீரம் காட்டும் கதை! கனல் பொறிக்கும் நடிப்பு! கலைச் செறிவு நிறைந்த காட்சிகள்!

நடிகர்கள்:

புரட்சி நடிகர் **எம். ஜி. ராமச்சந்திரன்,**

**பி. பானுமதி, சந்திரபாபு, பி. சரோஜா தேவி,**

**எம். என். ராஜம், சக்ரபாணி, பி. எஸ். வீரப்பா, நம்பியார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு 136-ம் இலக்கத்தில் வசிக்கும் [illegible] அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 மே மாதம் 3-ந் திகதி பிரசுரிக்கப்பட்டது.